
Vol. 7. No. 42 22nd November 1936 Price 2 as. Regd. No. 2514

# ஸ்ரீ சுதேசமித்திரன்

## வாரப்பதிப்பு


## THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY



பம்டாயின் தோர்றம்: மலபார்ஹில் என்ற விடத்திலிருந்து எடுத்த 'இன்ப்ரா ரெட்' படம்.

...ட சந்தா ரூபா 6. சிலோனுக்குத் தனிப்பிரதி 14 சதம், மலாய நாடுகளுக்கு தனிப்பிரதி 15 காசு. வெளிநாடுகளுக்கு ரூ. 10







மூன்று தலைமுறைகளாக
தாய் தன் மகளுக்கு

# வுட்வர்ட்ஸ்
# கிரைப் வாடர்

எப்படி குழந்தைக்கு
சுகம் தருகிறதென்று சொல்லுகிறாள்.

# WOODWARD'S
## GRIPE WATER

W. WOODWARD LTD.. LONDON. ENGLAND



ஹார்பார்க்கிலுள்ள யுத்த நிறுத்த ஞாபகார்த்தச் சின்னமும் டௌன் ஹாலும்

# கிருஷ்ண தேவராயர் - விஜய நகர மன்னன்

## ஓர் சரித்திர சம்பந்தமான நாடகம்

(காபிரைட்)

(சிங்காநல்லூர் ரா. சாரங்கன்)

காட்சி 7.

போட்லூரி சிம்ஹாத்திரி கிருஷ்ண தேவனின் டாசறை.
கிருஷ்ணதேவராயனும்,
இராமலிங்க நாயுடுவும்.

கி-தே:-இராமலிங்க நாயுடு! நாம் திரிசங்கு சுவர்க்கத்தில் தான் ஊசலாடுகிறோம். அதனால்தான் நாம் நம் தைரியத்தை இழக்கலாகாதெனக் கூறுகிறேன். அதுவுமன்றிக் கெடுதல்களிலும் நல்லவை இருக்கின்றன. சீர்தூக்கி ஆராய்ச்சி செய்தால், அது நன்கு புலப்படும். கடவுள் நமக்குவெற்றியே அளிப்பார். ஆதலின், கவலைகொள்ள வேண்டாம்.

(அய்யமராசு வருகிறார்)

என்ன விசேஷம் அய்யமராசு? ஆம்; விஜய நகரத்தை விட்டு இவ்விதப் பிரதேசங்களில் படுக்கையின்றிக் கஷ்டப்படநானல்லவோ காரணம்?

அய்ய:—அரசே, ஏன் அப்படிக்கூறுகிறீர்? இவ்வாழ்க்கையையே நான் விரும்புகிறேன். எனக்கு இது சிரமமாகத் தோனறவில்லை.

கி-தே:—ஆம்; கஷ்டம்வந்த காலத்தில் சித்தமுடன் கொள்வதே நல்லோரின் கொள்கை. அய்யமராசு! உம்முடைய மேலங்கியைத் தாரும். அன்பார்ந்த நண்பர்களே! நம் தளகர்த்தர்களையும், சேனைத் தலைவர்களையும் காலை வந்து என்னைச் சந்திக்குமாறு தெரிவியுங்கள்.

இ-பொ:—அப்படியே கூறுகிறோம் அரசே!

அய்ய:—தங்களுடன் பாதுகாப்பாக அடியேன்வரட்டுமா?

கி-தே:—வேண்டியதில்லை. நான் சற்றுத் தனித்துலாவி வரட்டும்.

அய்ய:-கண்ணியமுள்ள வேந்தனே! காருண்ய வள்ளலே துணை வந்தனம்.

(செல்கிறார்கள்.)

கி-தே:—வெங்கடாசலபதியின் அருளே உங்களைப்போல் வீரர்களை நான் அடைந்தது. ராஜபக்தியில் சிறந்தோங்கும் நீங்களிருக்கும்வரை எனக்கு யாதொருபயமுமில்லை. பச்சராசு, கொண்டமராசு வருகிறார்கள்.

அரசர் ஓர் மறைவிடத்தில் ஒளிந்துகொள்கிறார்.

பச்ச:—என்ன அநியாயம்; நமதரசர் இப்படியும் முன்யோசனை இல்லாமலிருக்கிறாரே! முன்பின் தெரியவராத ஓர் சிறு வாலிபனை தன் மெய்க்காப்பாளரில் ஒருவனாக நியமித்திருக்கிறாராம். ஒருவேளை அந்தப் பயல் வேவுபார்க்கப் பகை அரசனால் அனுப்பிக்கப்பட்டவனோ என்னவோ!

கொண்:—பச்சராசு! கொஞ்சம் நாவை அடக்கிப் பேசும். நமது அரசருடன் அந்தரங்கமாகக்கூடிப்பழகும் தாங்களே இப்படிக்கூறினால் வேறு யார் என்னதான் சொல்லமாட்டார்கள். நமதரசன் கருணையின் பொக்கிஷமன்றோ? அன்னஆகாரமின்றி ரோட்டுப்புறத்தில் படுத்திருந்த அந்த இளைஞனைக்காப்பாற்றியதா அரசன் மந்தபுத்தி, அந்தபாலனுடைய முகத்தைநோக்கின் குருநாசிகையுடையவன் என கின்றிறு வது தோனறுகிறதா? அவனது மிருதுவான பேச்சும் பலர் புகழ நடவடிக்கையும், உயர்ந்த பார்ந்த நோக்கங்களும் எவரைத்தான் பரவசப்படுத்தாது! இனி இப்படிக் கூறுதேயும்.

பச்ச:—அரசரினமீது இருக்கும் அளவற்ற அன்பே இப்பையனைச் சந்தேகிக்க என்னைத் தூண்டிற்று அல்லாவிடிலென்ன? என் அவசரபுத்திக்கு மிக வருந்துகிறேன்.

கொண்:—சரி; நேரத்தை வீணுக்காது சற்றுத் துயிலுவோம். காலையில் அரசரைச் சந்திக்க வேண்டும். ஆதலின் போவோம் வாரும்.

(இருவரும் செல்கிறார்கள். ஒளிந்திருந்த அரசர் வெளி வருகிறார்.)

கி-தே:—கண்ணிய மனிதர்கள்! வீரமே உருவெடுத்துள்ள சுப்பிர புருஷர்கள்!

பொம்மராசு, கன்னய்ய சொக்கய்ய வருகிறார்கள்.

கன்ன:— சொக்கய்ய! அதோ சுக்கிரன் பிரகாசிக்கிறான். அருணோதயம் நெருங்கிற்று.

சொக்:—வெள்ளி முளைத்தால் என்ன, முளைக்காவிட்டாலென்ன? இரண்டும் ஒன்றுதானே நமக்கு?

பொம்:—ஆம்; இன்றைய தினத்தின் முடிவைப் பார்க்க நாம் உயிர் தரித்திருப்போம் என்பது என்ன நிச்சயம்? (அரசனின உருவத்தைக் கவனித்து, அடையாளம் தெரியாது யாரங்கே நில்!)

கி-தே:—நண்பன்.

பொம்:—எந்தப் பிரிவினையைச் சேர்ந்தவன்.

கி. தே:—அய்யமராசு ஆட்களில் ஒருவன்.

பொம்:-அவர்சாமர்த்தியம் மிகுந்த தளகர்த்தர்தான். நம் நிலைமையைப்பற்றி அவர் உத்தேசம் என்ன?

கி-தே:—என் கரை தப்பிய மாலுமி எனவே!

சொக்:—அவர் அபிப்ராயம் அரசர் அறிவாரோ?

கி. தே:—(சிரித்து) அரசனும் நம்மைப்போலத்தானே; புஷ்பத்தின் வாசனையை அவர் அறியமாட்டாரோ? குளிர், உஷ்ணம் முதலியவைகளை அவர் உணரமாட்டாரோ? நமக்கிருப்பதுபோல் ஓர் விஷயத்தின் பலாபலன்களை அறியக்கூடிய சக்தி அவருக்கில்லையா? ஆதலின், அவருக்கும் நம் நிலைமை தெரிந்துதானிருக்கும். இருப்பினும் அவர் மனதைத் தளரவிடலாமா? அவரே அதைரியப்பட்டால் அவர் சைனியம் என்னவாகும்? ஆதலின் அவர் உணர்ந்தும் உணராதவராக இருப்பது அவருடைய கடமையே.

சொக்:—என்ன தான் வெளிவேஷம் இட்டிருந்தாலும் அவருடைய எண்ணமெல்லாம் விஜய நகரத்தில்தானிருக்கும் என்று நான் திவிரமாகக் கூறுவேன்.

கி. தே:—என்ன வீரரே, இவ்வளவு ஆக்ரோஷம். அரசன் மனதைப படம் பிடித்தது போல் நான் கூறுகிறேன். அவர் நாட்டமெல்லாம் இந்த இடத்தில்தான். இந்த யுத்தரங்கத்தில்தான். அவர் பக்கலில் நின்று போர்புரிந்து மாள்வது எனக்கு முற்றும் சந்தோஷம். ஏனெனில், அவர் நோக்கம் நியாயமானதுதானே!

பொம்:—அது எங்களுக்குத் தெரியாததல்ல.

சொக்:—அது நாங்கள் அறியவேண்டிய விஷயமில்லை. அரசனின் நோக்கம் அதர்மமாயினும் அது எங்களை பாதிக்காது. ஏனெனில், அவருடைய பணியாளர் ஆதலபற்றி அவருடைய ஏவலைச் செய்யக் கடமைப்பட்டவர்.

கி. தே:—நீர் என்ன வேண்டுமானாலும் சொல்லிக்கொள்ளும் கடைசிவரை அரசர் இச்சண்டையை நடத்திய திருவார்

பொம்:—போமய்ய யுத்தமாவது, அரசர் போக்கு எங்களுக்குப் பிடிக்கவில்லை. எனினும் கடைசிவரையில் யுத்தம் செய்யத் தயார்தான். ஆனால் ஏழை வீரர் மடிந்தபிறகு பகை அரசருடன் சமாதானம் செய்துகொள்ளத்தான் போகிறார்.

கி. தே:—என்னய்ய! அவதூறாகப் பேசுகிறீர்? அரசர் அப்படி ஒருக்காலும் செய்யார். அப்படியே அவர்செய்து அந்த அக்கிரமத்தைப் பார்க்க நான் உயிர் தரித்திருப்பேனாயின் அரசரைப் பின்பு மதிக்கவே மாட்டேன்.

பொம்:—(சிரித்து) அக்கிரமத்தைப் பார்க்கவும்மாட்டீர்! அரசனை மதிக்கச் சந்தர்ப்பமும் கிட்டாது.

கி. தே:—நண்பரே! உம்மை மறந்து பேசுகிறீர்.

பொம்:— அப்படியிருப்பினும் அக்கரை இல்லை.

கி. தே:—அரசரிடம் கூறி உமக்குத் தகுந்த சிட்சை வாங்கித் தருகிறேன்.


(வீரர்களை விட்டுச் செல்லப் பிரயத்தனஞ் செய்கிறார். பொம்மராசு தன் உடைவாளால் பின்தாக்குகிறான். மறைந்திருந்த ஜக்கய்ய திடீரெனத் தோன்றி, பொம்மராசு

(39-ம் பக்கம் பார்க்க)



ஹம்பியிலுள்ள சில புராதன விக்ரஹங்களும் கல் வெட்டுகளும்.

# பம்பாயில் டெலிவிஷன் ஸர்விஸ்



டெலிவிஷன் கண்ட்ரோல் அறை

இம்மாதம் 2-ந் தேதி பிரிட்டிஷ் ஒலிபரப்புக் கார்ப்பொரேஷனின் அலெக்ஸாண்ட்ரா பாலெஸ் டெலிவிஷன் ஸர்விஸ் ஆரம்பிக்கப்பட்டதானது விக்ஞான உலகின் சரித்திரத்தில் ஒரு முக்கியஸ்தானத்தைப் பெறும். காலம் இடம் என்ற இரு இயற்கையின் கோணல்களை நிமிர்த்த மனிதன் செய்த முயற்சியினால் தந்தி டெலிபோன் என்ற இயந்திரங்கள் உலகில் தோன்றின. ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் இருப்பவர்களுடன் உடனுக்குடன் பேசுவதற்கும் கேட்பதற்கும் சாதனமாகவிருக்கும் வசதிகள் இப்பொழுது அபிவிருத்தியில் மற்றொரு படியைத் தாண்டியிருக்கின்றன. இருந்த இடத்திலிருந்து கொண்டே டெலிவிஷன் ஸர்விஸ் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஓரிடத்தில் நடக்கும் எல்லாவற்றையும் நேரில் பார்த்தும் கேட்டும் ஆனந்தமடைவது டெலிவிஷன் அல்லது தூரதர்சினி என்ற இயந்திரத்தின் மூலமே.

"ஜனங்களுக்கு ஒருவித சந்தோஷத்தையும், பிரயோஜனத்தையும் அளிக்கவல்லதில் டெலிவிஷனுக்குள்ள சக்தி தனிப்பட்டது. மன்னர்பிரான் மகுடாபிஷேகத்தை நோக்குங்கால் இதன் உண்மை எளிதில் புலப்படும்" என்று பிரிட்டிஷ் ஒலிபரப்பு ஸ்தாபனத் தலைவர் டெலிவிஷன் ஸர்விஸ் ஆரம்பி[illegible] வைக்கப்படுகையில் கூறியபடி டெலிவிஷன் பொது ஜன நன்மையை வளர்க்கக் கூடியதென்பதில் சந்தேகமில்லை.

டெலிவிஷன் யந்திரத்தைக் கண்டு பிடித்தவர் ஸ்காட்லாண்டுவாஸியான மிஸ்டர் ஜான் லாகி பேயர்ட். 1925-ம் வருஷம் அக்டோபர் மாதம் 2-ந் தேதி இந்த இயந்திரத்தின் அரும் பெரும் சக்திகள் விக்ஞான உலகிற்குத் தெரிந்தன. இவரது பெயரால் அழைக்கப்படும் "பேயர்ட் முறை" என்ற முறையில் டெலிவிஷன் ஸர்விஸ் பிரிட்டனில் ஆரம்பிக்கப்பட்டது. பிறகு மின்சார உலகில் கியாதி பெற்றுள்ள மார்க்கோனி என்பவரின் பெயரா லழைக்கப்படும் "மார்க்கோனிமுறை"யும் உபயோகிக்கப்பட்டது.

நிற்க, டெலிவிஷன் ஆராய்ச்சி இன்னும் பூரண வெற்றியடையவில்லை. அதன் தற்கால நிலைமையில் ஐம்பது மைல்களுக்குட்பட்ட வஸ்துக்களைத்தான் காணக்கூடுமென்றும் அவ்வெல்லைக்கு அப்பாலுள்ள இடங்களுக்கு நம் திருஷ்டி செல்லவேண்டுமாயின், ஒவ்வொரு ஐம்பது மைல்களுக்கும் ஒவ்வொரு ஸ்டேஷன் ஏற்படுத்தவேண்டுமென்றும் கூறப்படுகிறது.

பிரிட்டனில் டெலிவிஷன் ஸர்விஸ் ஆரம்பமாகிவிட்டது. இந்தியாவில் நிலைமை என்ன? எல்லாம் சரிவர நடக்குமாயின் சில மாதங்களுக்குள் இந்தியாவிலும் டெலிவிஷன் ட்ரான்ஸ்மிட்டர்கள் ஸ்தாபிக்கப்படலாம். இங்கிலாந்தில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு சமீபத்தில் இந்தியா திரும்பிய ஜனாப் ஒய் ஏ படேல்பாய் ஆராய்ச்சி செய்வதற்காகவும், பரீக்ஷை நிமித்தமாகவும் பம்பாயில் ஒரு டெலிவிஷன் ட்ரான்ஸ்மிட்டரை ஸ்தாபிக்கத் தீர்மானித்திருக்கிறார். இது சம்பந்தமாக லைசென்ஸ் கொடுக்கும்படி அவர் அதிகாரிகளுக்கு எழுதியிருக்கிறார். பம்பாய் ஒலி பரப்பும் ஸ்தாபனம் 'டிரான்ஸ்மிஷன்' (நடக்கும் சம்பவங்களைப் பலர் உபயோகத்துக்காக இயந்திர மூலம் அனுப்புவது) வரை ஜனாப் படேல்பாயுடன் ஒத்துழைக்கும்.

இப்பொழுது போடப்பட்டிருக்கும் திட்டப்படி இரண்டு மைல்களுக்குள் உள்ளவற்றைத்தான் பார்க்க முடியும். இதில் பொது ஜனங்கள் கலந்து கொள்ள ஏற்பாடு செய்யப்படவில்லை. ஆனால் வெற்றிகரமாக விருக்கால் [illegible] ஏற்பாடுகள் செய்யப்படுமென்பதில் சந்தேகமில்லை. ஆனால் இந்த இரண்டுமைல்கள் சுற்றளவில் வசிப்பவர்கள் டெலிவிஷன் ரிஸீவர்களை வைத்துக் கொண்டால் பலன் பெறலாம். ஆயினும் ரிஸீவர்கள் ஒவ்வொன்றும் ரூ 2000 விலையாவதால் எவ்வளவு பேர்கள் இதில் கலந்துகொள்ளக்கூடும் என்று சொல்ல முடியாது.

* * * பிரிட்டிஷ் டெலிவிஷன் ஸர்விஸ் ஆரம்பவிழா சம்பந்தமான படங்களை மற்றோரிடத்தில் பிரசுரித்திருக்[illegible]


## உன்னுடைய தோல் வியாதிகளையும் ரணங்களையும் ஆற்றுவதெப்படி?

வழியிற் போரவர்கள் பார்ப்பதினால் தாழ்மைப் படுவ தேன்? உன்னுடைய முகம், தோல் வெடிப்பினாலாவது, ரணத்தினாலாவது, சினப்பினாலாவது உருவழிந்திருந்தால் குடிகூரா (Cuticura) உபசரணை செய்தால் உன்னுடைய தோல் சீக்கிரமாய்ச் சுத்தமாகும். முதல் பூசும்போதே புண்ணாற ஆரம்பிக்கும். சொறியும், நமைச்சலும், எரிப்பும் உடனே தணியும். பருவுகள் உலர ஆரம்பிக்கும், கரப்பானும் வாடிப்போகும். கண்ணாடியில் பார்த்தால் ஒவ்வொரு தினமும் தேற்றமாகிறது தெளிவாகத் தெரியும். கொஞ்ச நாளைக்குள் உருவழிப்பெல்லாம் போய் நோயின் அடையாளம் முழுதலும் மறைந்து போம்.

இந்த முறைகளைப் படித்து உபயோகிக்கவேண்டும். நோயிருக்கும் பாகத்தைக் குடிகூரா சோப்புக்கட்டியால் (Cuticura Soap) வென்னீர் வார்த்துக்கழுவி, மெதுவாய் உலரத் துடைத்து குடிகூரா தைலத்தைத் (Cuticura Ointment) தடவவேண்டும். இந்த தின உபசரணை சொறி நமைச்சலைத் தணித்து, எரிப்பை உடனே நீக்கும். இது தவறாத மருந்து. புண்ணாற்றி, நோய் தீர்த்து, புண்ணாற்றும் குடிகூரா (Cuticura) தோல் வெடிப்புகளினுள்ளே புகுந்து அங்கிருக்கும் கருமிப் புழுக்களைக் கொன்று, நோய் வைத்திருக்கும் பாஷாணத்தை வெளிப்படுத்தி சிலைக்கும் புண்களை ஆற்றி தோலுக்குச் சுகமான வழியை உண்டு பண்ணி முழுதலும் சொஸ்தமாக்கும்.

**Cuticura**

**OINTMENT AND SOAP**

**குடிகூரா**

தைலமும் சோப்புக்கட்டியும் எல்லா மருந்து கடைகளிலும் பஜார்களிலும் வாங்க அகப்படும்.






தமிழ்நாட்டில் குறைந்த சந்தா மாதப்பத்திரிகை

"சித்தன்"

ஒரே கட்டுரைகள், கதைகள், ஹாஸ்யம், உலக விநோதம், வைத்தியக்குறிப்பு. சினிமா விமர்சனம், முதலியனகொண்டது மாதிரிப்பிரதி இனாம். 3000 பிரதிகள் வெளியாகின்றன. விளம்பர விகிதம் குறைவு. சந்தா உள்நாடு அணா 8. வெளிநாடு ரூ. 1.

மானேஜர், சித்தன், பழனி.

# தானே கிடைத்த தனலக்ஷ்மி

என்னுடைய இருபத்திரண்டாவது வயதுவரையில் நான் ஒரு முறைகூடச் சென்னைக்குச் சென்றதேயில்லை; ஆகையால் என்னுடைய நண்பர்களெல்லோரும் என்னைப் பட்டிக்காட்டானென்று பரிகசிப்பது வழக்கம். இம்மண்ணுலகின்கண் பெறற்கரிய மானிட ஜென்மமெடுத்த ஒவ்வொருவரும், சென்னையம்பதியை ஒருதரமாவது கண்குளிரக்காணாது மண்ணுக்கு இரையாவரேல், அவர் ஜென்ம சாபல்யமடையார் என்பது அவர்களது எண்ணம்போலும். ஆகவே, நண்பர்களின் பரிகசிப்பை நிறுத்த வேண்டுமென்பதற்காகவாவது, ஒருநாள் சென்னைக்குச் சென்று வரமுடிவு செய்தேன்.

எனக்கு அறிமுகமான ராமசந்திர ஐயர் என்பவர் சென்னையில் "பென்னட் அண்டு கோ"வில் மானேஜராக இருந்து வந்தார். என்னை எழும்பூர் ஸ்டேஷனில் மறுதினம் காலை வண்டிக்கு வந்து சந்திக்கும்படியாக அவருக்கு ஒரு தந்திகொடுத்துவிட்டு, அன்றைய தினமே சென்னைக்குப் புறப்பட்டேன்.

இரவு முழுவதும் தூங்கவேயில்லை. கொசுக்கடி அதிகம்; மூட்டைப் பூச்சிகளுக்கும் குறைவில்லை. பலபலவென்று பொழுது விடிந்தது. வண்டியும் எழும்பூர் ஸ்டேஷன் சென்று நின்றது. ப்ளாட்பாரம் முழுவதும் ஒரே கூட்டம். வண்டியிலிருந்து கீழிறங்கி ராமசந்திர ஐயரை எதிர்பார்த்து நின்றுகொண்டிருந்தேன். சுமார் கால்மணிநேரம் வரையில் காத்துக்கொண்டிருந்தும் அவரைக் காணாததினால், இனி காத்துக்கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லையென்று கருதி, கைப்பெட்டியையும், படுக்கையையும் எடுத்துக்கொண்டு கிளம்பினேன். அச்சமயம், மிகவும் கவனமாக அங்குமிங்கும் பார்த்துக்கொண்டே வந்த ஒரு வாலிபன் என்னிடம் வந்து, "நீங்கள் பனையம்பட்டியிலிருந்தா வருகிறீர்கள்?" என்று கேட்டான்.

நான் "ஆம்" என்றேன். (என்னுடைய சொந்த ஊர் பனையம்பட்டி. முதலிலேயே சொல்ல மறந்துவிட்டேன்.)

"அப்படியானால் நீங்கள் தானே சாம்பசிவ ஐயர்?" என்று அவன் ஆவலுடன் கேட்டான்.

நான் மிகவும் சந்தோஷத்துடன், "ஆமாம்" என்றேன். (ஊரைச் சொன்னாலும் பெயரைச் சொல்லக்கூடாதென்று நினைத்து வாசகர்களுக்கு என் பெயரைச் சொல்லவில்லை. ஆனால் அவ்வாலிபனுக்காக ... பெயரைத் தெரிவிக்கும்படி நேரிட்டுவிட்டது)

"அப்பா நாலைந்து நாளாக ஊரிலில்லை. அதனால்தான் நான் வந்தேன்" என்று சொல்லிக்கொண்டே அவ்வாலிபன் என் கையிலிருந்த படுக்கையையும் பெட்டியையும் வாங்கி அருகில் நின்றுகொண்டிருந்த ஒரு அழகிய மோட்டாரில் வைத்துவிட்டு, என்னையும் அதில் உட்காரச் சொன்ன பிறகு, மோட்டாரை ஓட்ட ஆரம்பித்தான்.

கார் வி-ர்-ர்-ர்-ரென்று விசையாய்ப் பறந்து சென்று, பல தெருக்களைக் கடந்து, ஒரு அழகிய பங்களாவின் வாசலில் சென்று நின்றது. அவ்வாலிபனும் நானும் காரினின்றும் இறங்கி உள்ளே சென்றோம். உள்ளிருந்த எல்லோரும் என்னை மிகவும் அன்புடனும், மரியாதையுடனும் வரவேற்று உபசரித்தார்கள்.

தனியாக எனக்கென்று ஒரு பெரிய அறை ஒழித்துவிடப்பட்டிருந்தது அவ்வறை முழுவதும் எங்கு பார்த்தாலும், சோபாக்களும், நாற்காலிகளும், படங்களும், நிலைக்கண்ணாடிகளும் நிறைந்திருந்தன. இவைகளையெல்லாம் பார்த்தவுடன் நான் பிரமித்துப் போய்விட்டேன். ராமசந்திர ஐயர் மிகவும் தனவந்தர் என்பது எனக்கு அதுவரையில் தெரியாது. அவருக்கு மிகவும் பெரிய குடும்பம் இருப்பதும் எனக்குக் கொஞ்சங்கூடத் தெரியாது. அவர் என்னுடன் பேசிக்கொண்டிருக்கும் பொழுதெல்லாம் தன்னுடைய புத்திரனைப்பற்றியாவது புத்திரிகளைப்பற்றியாவது ஒரு தரங்கூடப் பிரஸ்தாபித்ததே கிடையாது.

வெல்வெட்டு சோபா ஒன்றில் சாய்ந்துகொண்டே, மேற்சொன்னவாறு யோசனை செய்துகொண்டிருக்கையில், தற்செயலாகப் பக்கத்திலிருந்த ஜன்னல் பக்கம் திரும்பினேன். எதிரிலுள்ள ஒரு அறையின் ஜன்னலில் உட்கார்ந்து ஒரு பெண்மணி என்னை உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தாள். அவளது கூரிய விழிகளின் பார்வையும், அந்த ஒளி பொருந்திய முகமும், தங்கம் போன்ற அம்மேனியும், என்னை ஒரு நொடியில் பித்தனாக்கிவிட்டன. நான் பார்ப்பது தெரிந்தவுடன், என்னைப் பார்த்துப் புன்னகை செய்தவண்ணம், அவள் சட்டென்று எழுந்து ஓடி மறைந்துவிட்டாள்.

அவள் மறைந்ததும் உலகமே இருளடைந்துவிட்டது போல் என் கண்களுக்குத் தோன்றியது. மனம் ஒன்றிலும் நாடவில்லை. பித்துப் பிடித்தவன் போலாகிவிட்டேன். அச்சுந்தரியை மறுபடியும் ஒரு முறையாவது பார்த்தால் தான் என் மனம் சாந்தமடையுமெனத் தோன்றியது.

மத்தியானம் ஆயிற்று. நான் வந்திருப்பதின் நிமித்தம் மிகவும் தடபுடலாக விருந்து நடந்தது. தலைத்தீபாவளிக்கு மாமியார் வீட்டுக்குப் போன மாப்பிள்ளைக்குக்கூட எனக்கு நடந்த உபசாரம் நடந்திருக்காது. ஆனால், என் மனமெல்லாம் வேறிடத்தில் பதிந்திருந்ததினால், எனக்குச் சாப்பாட்டில் கொஞ்சங்கூடப் புத்தி செல்லவில்லை.

சாப்பாடு முடிந்தவுடன் என்னுடைய அறைக்குச் சென்று ஒரு சாய்வு நாற்காலியில் படுத்தேன். அவ்வீட்டு வாலிபனும் என் பக்கத்தில் வந்து உட்கார்ந்தான். காலையிலிருந்து என் மனதில் தோன்றி வதைத்துக் கொண்டிருந்த அப்பெண்மணி எனதருகிலிருந்த வாலிபனின் மனைவியாக இருக்கலாமோ என்ற எண்ணம் என் மனதில் தோன்றவே, அவனுக்கு விவாகமாகிவிட்டதா என்று அவனைக் கேட்க வாயெடுத்தேன். அதே வினாடியில் நான் யாரைக் காலையிலிருந்து நினைத்துக்கொண்டேயிருந்தேனோ அப்பெண்மணியே ஒரு வெள்ளித்தட்டில் தாம்பூலம் கொண்டு வந்து என்னெதிரே வைத்துவிட்டுச் சட்டென்று வெளியே சென்றுவிட்டாள்.

மறுபடியும் அம்மின்னற்கொடி தோன்றி மறைந்ததும் நான் பிரமித்துப் போய், அப்படியே கல்லுப்போலாய் விட்டேன். என்னுடைய நிலைமையைக் கவனித்துக்கொண்டு அருகிலிருந்த அவ்வாலிபன், சிரித்துக்கொண்டே, "தனலக்ஷ்மியை ஏதாவது பாடச் சொல்லட்டுமா?" என்று கேட்டான். நானும் ஆநந்தத்துடன் "சரி" யென்று தலையசைத்தேன். உடனே அவ்வாலிபன் "தனலக்ஷ்மி, வீணையை எடுத்து ஏதாவது இரண்டு கீர்த்தனம் வாசி" என்று உரத்த குரலில் சொன்னான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் அறைக்கு வெளியிலிருந்து வந்த கர்ணாமிர்தமான வீணையின் நாதம், என் உடலின் ஒவ்வொருஅங்கத்தையும்உருகும்படிச்செய்தது. நான்மெய்மறந்து ஆநந்த வெள்ளத்தில் அமிழ்ந்து கிடந்தேன்,

அச்சமயம், தபால்காரன் என் அருகிலிருந்த அவ்வாலிபனிடம் ஒரு தந்தியைக் கொடுத்துவிட்டுப் போனான். தந்தியைப் படித்துப் பார்த்ததும் அவ்வாலிபனின் முகம் சடக்கென்று மாறுபட்டது. அவனது ஒவ்வொரு அங்கமும் கோபத்தால் துடித்தது.

அவ்வாலிபன் என்னை நோக்கி மிகவும் கோபமாக, "நீங்கள் என்னை இவ்வளவு தூரம் ஏமாற்றுவீர்களென்று நான் நினைக்கவேயில்லை. இதைப் படித்துப் பாருங்கள்" என்று சொல்லி அத்தந்தியை எனக்குச் சமீபத்தில் எறிந்தான்.

திடீரென்று அவனுக்கு ஏற்பட்ட கோபத்தைக் கண்டு நான் கொஞ்சம் பயந்துவிட்டேன். இருந்தாலும், மனதை நிதானப்படுத்திக்கொண்டு அத்தந்தியைப் படித்துப் பார்த்தேன்.

அதில், "வேறு பெண் முடிவாகிவிட்டது. அதனால் வரவில்லை. மன்னிக்கவும்—சாம்பசிவ ஐயர்" என்று எழுதியிருந்தது. தந்தி பனையம்பட்டியிலிருந்து கொடுக்கப்பட்டிருந்தது. இத்தந்தியைப் பார்த்தவுடன் என்னை ஏன் அவன் கோபித்துக்கொள்ள வேண்டுமென்பது எனக்குப் புரியவில்லை.

நான், "ஆமாம், என் நண்பன் சாம்பசிவத்திற்கு நேற்று தான் எங்கள் ஊரிலேயே வரன் முடிவாயிற்று. இதற்காக என்னைக் கோபித்துக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லையே" என்றேன்.

அவ்வாலிபன், "அப்படியானால் உங்கள் பெயர் சாம்பசிவ ஐயர் அல்ல" என்றான்.

"என் பெயர் சாம்பசிவ ஐயர்தான். ஒரு ஊரில் சாம்பசிவ ஐயர் என்ற பெயர் ஒருவருக்குத்தான் இருக்கவேண்டுமென்பது அவசியமல்ல" என்று சற்றுக் கோபமாகக் கூறினேன்.

அவ்வாலிபன் சற்று நேரம் நிதானித்துவிட்டு, "அப்படியானால், நீங்கள் இவ்வூருக்கு என்ன காரியமாக வந்தீர்கள்?" என்று கேட்டான்.

நான் "இவ்வூருக்கு வேடிக்கை பார்ப்பதற்காகவே வந்தேன்; எனக்கு இங்கு வேறு ஜோலி ஒன்றுமில்லை. 'பென்னட் அண்டு கோ'வில் வேலை பார்க்கும், உங்கள் தகப்பனாராகிய ராமசந்திர ஐயரை எனக்குத் தெரியும். அவரை இன்று காலை என்னை ஸ்டேஷனில் வந்து சந்திக்கும்படித் தந்தி கொடுத்தும் ... இங்கு வந்து சேர்ந்... கள் என் பெயரையும் ...

ஸ்ரீமான் எஸ். வி. ரத்னம் பி. ஏ. (ஆனர்ஸ்) எழுதியது.



லண்டன் அபிஸீனியச் சங்கத்தில் அபிஸீனிய மன்னர் தம்பதிகளுக்குச் சமீபத்தில் ஒரு விருந்து நடைபெற்றது.

யும் சொல்லி விசாரித்து விட்டு. தகப்பனர் ஊரிலில்லாததினுல் நீங்கள் வந்தீர்கள் என்று சொன்னதின் பேரில், நீங்கள்தான் ராமசந்திர ஐயரின் பிள்ளையென்று நினைத்து உங்கள் வீட்டிற்கு வந்தேன்'' என்று கூறினேன்.

இதைக் கேட்டதும் அவ்வாலிபன் சிரித்துக்கொண்டே, ''நான் உங்களைக் கோபித்துக் கொண்டதற்கு மன்னிக்க வேணும். நான் நீங்கள் குறிப்பிட்ட ராமசந்திர ஐயரின் பிள்ளையல்ல. என் தகப்பனர் பெயர் கோபாலசாமி ஐயர். சற்று நேரத்திற்கு முன் பாடியது என் தங்கையாகிய தனலக்ஷ்மி உங்கள் ஊரிலுள்ள சாம்பசிவ ஐயர் என்ற ஒருவருக்கு என் தங்கையை விவாகம் செய்து கொடுப்பதாக வெகு நாளாகப் பேச்சு நடந்து வந்தது. அவர் பெண்ணை நேரில் பார்க்க விரும்புவதாகவும், இன்று காலை இவ்விடம் வருவதாகவும், அவரிடமிருந்து இரண்டு தினங்களுக்கு முன் கடிதம் வந்தது. அப்பாவுக்கு சாம்பசிவஐயரைத் தெரியும். ஆனல் எனக்குத் தெரியாது. ஆகையால் தவறுதலாக உங்களை அழைத்து வந்துவிட்டேன்'' என்று கூறி முடித்தான். நான் சிரித்துக்கொண்டே, ''பரவாயில்லை. நீங்கள் இன்று எனக்குச் செய்த உபசாரத்திற்கெல்லாம் மிகவும் வந்தனம். நான் ஊருக்குப்போய் வருகிறேன்'' என்று சொல்லி விட்டுக் கிளம்பினேன்.

ஆனல் வீட்டிலிருந்த எல்லோரும் ஒரு முகமாக நான் இரண்டு தினங்களாவது தங்கி ஊரைப் பார்த்துவிட்டுச் செல்லலாமென்று கூறியதின் பேரில் அவர்கள் வீட்டிலேயே தங்கினேன்.

அன்று சாயங்காலமே கோபால சாமி ஐயர் ஊரிலிருந்து வந்துவிட்டார். நடந்த விபரங்களையெல்லாம் கேட்டதும் அவர் விழுந்து விழுந்து சிரித்துவிட்டு, என்னை எனக்குக் கலியாணமாகி விட்டதா என்று கேட்டார். நான் ''இல்லை'' என்றேன்.

''அப்படியானல் உங்களுக்குப் பிரியமிருந்தால் நீங்களே தனலக்ஷ்மியைக் கல்யாணம் செய்து கொள்ளலாம். அவளும் பிரியப்படுகிருள்'' என்றூர்.

தானே கிடைத்த தனலக்ஷ்மியை நாஞ வேண்டாமென்பேன்?


"மாக்க மாட்டீரோ வரும்போழுது "ஜே" மார்க் பெருங்காயம் வாங்கி வாடுங்கள்



கோபால்ஜீ அண்ட் கோ.,
பம்பாய், மதராஸ், மதுரை கும்பகோணம்

HAVE A SOUND SLEEP



By using our Indian-made Mosquito curtains, highly approved by persons of every rank for their strong netting, durability and beautiful finishing.

PRICES.

| | | Ordinary. | Superior. | Best | |
|---|---|---|---|---|---|
| 6' x 3½' x 3½' | Re. | 1- 0 | 1- 4 | 1- 8 | each |
| 6' x 4' x 4' | " | 1- 4 | 1- 8 | 1-12 | " |
| 6½' x 4½' x 4½' | " | 1- 8 | 1-12 | 2- 0 | " |
| 7' x 5' x 5' | " | 1-12 | 2- 0 | 2- 4 | " |
| 7½' x 6' x 6' | " | 2- 0 | 2- 4 | 2- 8 | " |

Purchaser of three will get one curtain 6' x 4' x 4' free. Packing Free.
POSTAGE EXTRA.

PRABHAT TRADING CO.,
12, Sikderpara Lane, Barabazaar,
CALCUTTA.

G.கன்னய்யா கம்பெனி
இரும்பு பெட்டி வியாபாரம்.



நெ. 137, பிராட் வே, மதராஸ்.

வருஷப்பலன்

மாதவாரி ஒருவருஷப்பலன் எழுத ரூ. 3. வாராந்திர பலன் எழுத ரூ. 10. தர்ம நியாயமான 5 கேள்விகளுக்கு பதில் எழுத ரூ. 1. வி. பி. செலவு 5 அணு. ஜாதக விவரம் அல்லது கடிதம் எழுதும் போதுள்ள நேரம், சுமார் வயது, பெயர் தேவை.
ஹனுமான் ஜோதிஷ ஆச்ரமம்,
திருத்தணி, S. இந்தியா.

கொனேலா - கொனேலாக்ஸ் - கொனேசல்ப்.
கொனேகான்
வெள்ளை, வெட்டைக்கு
பாட்டில், ரூ. 1-8-0. யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்
201, மோகல் வீதி, ரங்கூன். (மதுரை, பம்பாய், கல்கத்தா.)

சேலத்தில் முதல் முதல் ஸ்தாபிக்கப்பட்ட நர்சரி தோட்டம்

3 வருஷத்தில் காய்க்கக்கூடிய ஒட்டுமாஞ்செடிகள், ஒட்டு பழ வர்க்கச்செடிகளும் இன்னும் இதர செடிகளும் கிடைக்கும். இங்கிலீஷ் அல்லது நாட்டுக் காய்கறி, இங்கிலீஷ் புஷ்ப விதைகள், 20 சாம்பல் பாக்கெட் விலை ரூ. 2-10. சாம்பல் பாக்கெட்விலை ரூ. 1-4 கேட்லாக் இனம்.
கோ. இ. காதர்மீரா சாயபு,
நர்சரி தோட்டம், சேலம்.

Tele:—"SIMILICURE" Box 643 CAL.
வெளிவந்து விட்டன!
ஹோமியோ புத்தகங்கள்
ஹோமியோ வைத்திய முறை
தத்துவம்
தெலுங்குப்பதிப்பு விலை ரூ. 1 தான்.
M. BHATTACHARYYA & Co.,
Economic Pharmacy, 84, Clive Street, CALCUTTA.

''காஸ்டரால்



காஸ்டரால் மிகச்சிறந்த தல் தைலம்; உங்கள் க லுக்கு அழகூட்டும்; ளவு வெப்பத்திலும் டைக்குக் குளிர் யளிக்கும்.

CASTOROL

தயாரிப்பவர்கள்:—
கல்கத்தா கெமிக்கல் கம்பெனி,




## த்யாகராஜ கீர்த்தனம்.

[காபிரைட்.]

ஸங்கீதவித்வான் காஞ்சி பி. பி. ஸ்ரீனிவாஸய்யங்கார், பி. ஏ. எழுதியது

I

பல்லவி

ரங்க நாயக! ரக்ஷிம்புமைய
ரத்ஸஸேயகவே வரதாயக (ரங்க)

அநுபல்லவி

அங்கபூஜனக! ஸுஜனஹரிசந்தன!
ஆநந்தகர! ஸ்ரீகர! தாமோதர! (ரங்க)

சரணம்

காலஹரணமேல? கருணுலவால!
கால கால மித்ர! கமலா களத்ர!
நீல நீரத சரீர! ச்ருதிஸார! தீர!
சீலத்யாக ராஜநுத! ராஜ ராஜ! (ரங்க)

II

| | |
|---|---|
| ரங்கநாயக | —ஸ்ரீரங்கநாதப் பெருமானே! |
| வரதாயக | —(பக்தர்கள் கோரிய) வரங்களைக் கொடுப்பவரே! |
| அங்கபூ ஜனக | —மன்மதனுக்குப் பிதாவானவரே! |
| ஸுஜன ஹரிசந்தன | —ஸாது ஜனங்களுடைய அபீஷ்டங்களைப் பூர்த்தி செய்விப்பதில் குறிப்பறியும் தேவவ்ருக்ஷமான ஹரிசந்தனத்தையொத்தவரே! |
| ஆநந்தகர | —அன்பர்களுக்கு ஆநந்தத்தை யுண்டுபண்ணுபவரே! |
| ஸ்ரீகர | —லக்ஷ்மீகர முண்டாகும்படி யருள்செய்பவரே! |
| தாமோதர | —தாமோதரரே! |
| கருணுலவால | —கருணைக்குப் பாத்திபோன்றவரே! |
| காலகால மித்ர | —சிவபெருமானுடைய மித்ரரே! |
| கமலா களத்ர | —லக்ஷ்மிதேவியின் நாயகரே! |
| நீலநீரத சரீர | —நீலமேகம்போன்ற நிறமுடைய சரீரத்தை யுடையவரே! |
| ச்ருதிஸார | —வேதங்களின் உட்பொருளானவரே! |
| தீர | —தீரரே! |
| சீல | —நற்குணங்களுக்கு இருப்பிடமானவரே! |
| த்யாகராஜநுத | —த்யாகராஜனால் கொண்டாடப்பட்டவரே! |
| ராஜராஜ | —ராஜாதி ராஜனே! |
| ரக்ஷிம்புமைய | —அடியேனைக் காப்பாற்றும் ஐயா! |
| காலஹரண மேல | —தாமதமேன்? |
| ரத்ஸ ஸேயகவே | —தகாறு செய்யவேண்டாம். |

III

ஸ்ரீரங்கநாதனைப் பற்றிப் பாடப்பட்டுள்ள கீர்த்தனங்களில் இஃதொன்று. மற்றவை, 'ராஜுவெடலே,' 'ஜனக ஜாஸமத,' 'பணி பதிஸாயி' 'ஓரங்கசாயி' 'விகாரதா' 'ஜூதாமுராரே' கருணஜூடவைய' முதலியவைகளாம்.

ரங்கநாயக:—ஸ்ரீரங்கநாதனுக்கு ரங்கநாயகன் என்ற திருநாமமும் வழங்குகின்றது. ஸ்ரீமுத்துஸ்வாமி தீக்ஷிதாவர்களுடைய கீர்த்தனங்களில் ஒன்று "ரங்கநாயகம் பாவயே" என்று தொடங்குகின்றது. ஸ்தலத்தில் எழுந்தருளியுள்ள தாயார் திருநாமம் 'ரங்கநாயகி' என்பதாகும்.

(8-ம் பக்கம் பார்க்க)

# வெளியீட்டை எதிர்பாருங்கள்

# Broadcast

## இரண்டாவது முறை ரிகார்டுகள்



வித்வான்
செம்பை வைத்யநாத
பாகவதர்

மிஸ் எம். எஸ்.
சுப்புலட்சுமி





வித்வான் செம்மங்குடி
ஸ்ரீனிவாஸ அய்யர்



வித்வான்
ராமச்சந்திர பாகவதர்

இத்துடன்
நூதன டிராமா
ஸெட்டுகளையும்
எதிர்பாருங்கள்.



வித்வான்
ராஜமாணிக்கம் பிள்ளை.

## தி மியூஸிகல் பிராடக்ட்ஸ் லிமிடெட்,

313, எஸ்பிளனேட், மதராஸ்.

ஏஜன்ட் இல்லாத இடங்களுக்கு ஏஜன்டுகள் தேவை ஏஜன்ஸி - நிபந்தனைகளுக்கு மேற்குறிப்பிட்ட விலாசத்துக்கு எழுதவும்.

F. M. S. & S. S-க்கு சோல் டிஸ்டிரிப்யூடர்கள்:—
தி இண்டியன் பிலிம் ஏஜன்சி, பினங், சிங்கப்பூர்

இங்கு ரிகார்டுகள் கிடைக்குமிடம்:—
ஜம்ஸ் ஸ்டோர்ஸ், 167, மவுண்ட்ரோட், மதராஸ்

திருச்சி ஏஜனட்:—

டாக்கர்ஸ் மியூஸிகல் பிராடக்ட்ஸ், பெரிய பஜார்.

ரத்ஸ ஸேயகவே:—இதே ப்ரயோகம், 'தனவாரி தனமு' என்ற பேகட ராகக் கீர்த்தனத்தில் கடைசிச் சரணத்திலும் காணப்படுகிறது தாம் ப்ரார்த்திக்கவும் பகவான் தகராறு செய்யவும் நேரிட்டிருப்பதுபோல ஸ்வாமிகள் மாநஸிக அனுபவத்தை வெளியிடுகிறார்.

அங்கபூ:—மன்மதனுடைய பெயர்களில் ஒன்று. 'அங்கம் மன: தஸ்மாஜ்ஜாத:' என்றவாறு மன்மதனுடைய பிதாவாகையாலே அதிக ஸௌந்தர்யமுடையவரென்றபடி; ஸ்ரீரங்கநாதருக்கு அழகிய மணவாளன் என்ற திருநாமம் வழங்கப்படுவதைக் கவனிக்கவும்.

ஸுஜந ஹரிசந்தன:—மந்தாரம், பாரிஜாதம், ஸந்தானம், கல்பகம், ஹரிசந்தனம். என்ற ஐந்து வ்ருக்ஷங்களும் ஸ்வர்க்க லோகத்திலுள்ளவை. இந்த மரங்கள் தம்மையண்டி நிற்பவர்கள் மனத்தில் நினைத்த பொருள்களை யுடனே யளிக்கவல்ல அபூர்வ சக்தி வாய்ந்தவை. பகவான் ஸாது ஜனங்கள் கோரியவற்றை யுடனே யளித்தருள்பவராதலால் ஸுஜன ஹரிசந்தன' என்று ஸம்போதனம் செய்யப்பட்டிருக்கிறார். ஸ்வாமிகள் இவ்வாறே வேறு கீர்த்தனங்களில் 'பக்த பாரிஜாத' என்பதுபோன்ற ப்ரயோகங்களை ஆண்டிருக்கிறார்.

காலஹரண மேல:—இந்தத் தொடரிலேயே ஆரம்பிக்கும் சுத்த ஸாவேரிக் கீர்த்தனத்தைப் பார்க்க.

கால காலமித்ர:—இதர கீர்த்தனங்களில் 'சங்கர மித்ரம்' என்பதுபோன்ற தொடர்களை ஸ்வாமிகள் ப்ரயோகித்திருப்பதைப் பார்க்க. ஸ்வாமிகளுக்கு சைவ வைஷ்ணவ பேத புத்தியின்மை நன்கு தெளிவாகும்.

கமலா கலத்ர:—'கமலாப்தகுல' என்ற் கீர்த்தனத்தின் அனுபல்லவியில் இதே ப்ரயோகம் காணப்படுகிறது.

ச்ருதிஸார:—'எலநீதய' என்ற கீர்த்தனத்தில் 'ஸகல ச்ருதிஸார' என்று ஸம்போதனம் செய்திருக்கிறார்.

சில த்யாகராஜநுத:—'சில! த்யாகராஜநுத!' என்று பிரிக்காமல், 'சில' என்பதை 'த்யாகராஜ' என்பதோடு சேர்த்து, நற்குணங்களால் நிறைந்த த்யாகராஜனால் கொண்டாடப்பட்ட பெருமானே' என்று நாம் பொருள் கொள்ளலாம்.

ராஜ ராஜ:—ஸ்ரீரங்கநாதனை ஒரு சக்ரவர்த்தி போலப் பாவித்து வணங்குவதும் வழக்கமாயிருக்கிறது. 'வரதராஜன்' என்று காஞ்சிபுரத்தில் கோயில் கொண்டுள்ள எம்பெருமான் திருநாமம் வழங்குவது போலவே, 'ஸ்ரீரங்கராஜன்' என்று ஸ்ரீரங்கநாதனுடைய திருநாமமும் வழங்குகிறது. '(ரங்க) ராஜு வெடலே' என்ற கீர்த்தனத்தைப் பார்க்க. 'ராஜராஜன்' என்று ப்ரயோகம் வருவதற்கு ஆதாரம், 'தேஜினெக்கி ஸமஸ்த ராஜுலு ஊடிகமுஸேய...ரங்கராஜு வெடலே; (குதிரையின் மீது ஆரோஹணித்து, எல்லா அரசர்களும் பணிவிடை செய்ய, ரங்கராஜன் பவனிவருகிறார்)' என்று வருவதேயாம் [ஷை ப்ரமாணத்தில் ஸாமந்த' என்று வழங்குகிற பாடத்தை ஏற்றுக்கொள்வோமாயின், 'சிற்றரசர்கள் ஊழியஞ் செய்ய' என்று பொருள் கொள்ள வேண்டும்]

IV

## சங்கராபரணம் — ஆதி தாளம்

இந்த ராகம் 72 மேளகர்த்தா முறைப்படி 29-வது கர்த்தா ராகமாகும். 'கடபயாதி ஸங்க்யா விதிக்கு ஒத்து வரும்படி இந்த ராகத்திற்குத் "தீர" சங்கராபரணம் என்று பெயர். இதில் ஸர்வஸ்வரங்களும் கமகவரிசைகளோடு அழகாகப் பேசும். இதில் அவரோஹணத்தில் 'ஸதாபமகரிஸ' என்றும், 'ஸாநீ, பாமகாரீஸா' என்றும் ப்ரயோகங்கள் நிஷாதா வர்ஜ்யமாகவோ காணப்பட்டாலும், இது சுத்த ஸம்பூர்ண ராகமேயாகும். ஆரோஹணத்தில் சதுச்ருதி ரிஷபம் சதுச்ருதி தைவதம் இவற்றை யூன்றிப் பாடுவதனால் இதன் களை நன்கு விளங்கும். 'ஸஸரி ரிககமம' என்பது போன்ற ஜண்டைப் பிரயோகங்களாலும் 'ஸரிரிககமமப' என்பது போன்ற ஆஹதப் பிடிப்புக்களாலும், 'ரிநிஸ் தநிபதம பகமரிகஸ'' என்பது போன்ற தாடுஸ்வர ப்ரயோகங்களாலும் இந்த ராகம் விசேஷ ரஞ்ஜகத்தை யளிக்கிறது.

### பல்லவி

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ; ; ; | * | ஸாஸா-ஸநிதாநீ | ஸா ; ; | ரீ | க ம பா ; | மா |
| ; ; ; | * | ரங்க-நா......ய | கா ; ; | ர | கஷி...ம் ; | பு |
| கா, ரிஸநி | * | ஸாஸா-ஸநிதாநீ | ஸா ; ; | ரிக | மப தநி ஸ்ா | நித |
| மை, ய... | * | ரங்க-நா......ய | கா ; ; | ர | கஷி...ம் | பு |
| பமகரிஸநி | * | ஸாஸா ஸநிதாநீ | ஸா ; ; | ரிக | மப தநி ஸ்ரி | ஸ்நி |
| மை, ய... | * | ரங்க-நா......ய | கா ; ; | ர | கஷி......ம் | பு |
| தபமகரிஸ | * | ரிகமா பா ; மா | பா , பா | ஸநி | தா பா ; | ஸ்நி |
| மை, ய... | * | ரத்ஸ ஸே ; ய | க , வே , | வ | ர தா ; | ய |
| தபமகரிஸ | * | ஸாஸா-ஸநிதாநீ | ஸா ; ; | ரிக | மப தநி ஸ்ரி | ஸ்நி |
| க...... | * | ரங்க-நா...ய | க ; ; | ர | கஷி......ம் | பு |
| தபமகரிஸ | * | ரிகமா பா ; மா | பா , பா , | மப | தநி ஸ்ரி க்ரி | ஸ்நி |
| மை, ய... | * | ர த்ஸ ஸே ; ய | க , வே , | வ | ர தா | ய |
| தபமகரிஸ | * | ஸாஸா-ஸ்நிதாநீ | ஸா ; ; | ரிக | மப தநி ஸ்ரி | ஸ்நி |
| க...... | * | ரங்க-நா...ய | க ; ; | ர | கஷி......ம் | பு |
| தபமகரிஸ | * | ரிகமா பா ; மா | பா . பா , | க்ரி | ஸ்நி ரிஸ் நித | ஸ்நி |
| மை, ய... | * | ரத்ஸ ஸே ; ய | க , வே , | வ | ர தா | ய |
| தபமகரிஸ | * | ஸாஸா ஸ்நி தாநீ | ஸா ; ; ; | | ; ; | ; ; |
| க...... | * | ரங்க-நா...ய | க ; ; ; | | ; ; | ; ; |

### அனுபல்லவி

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ; ; ; | * | ஸ்ாஸ்ா ஸ்ா ; ஸ்ா | தா நீ ஸ்ா | ஸ்ா | ரீ க்ா | ம்க் க்ரி |
| ; ; ; | * | அங்க பூ ; ஜ | ந க | ஸு | ஜ ந | ஹ ரி |
| ஸ்ாஸ்ாஸ்ா | * | ஸ்ாஸ்ா ஸ்ரிக்ரி ஸ்ா | தா நீ ஸ்ா | ஸ்ா | ரீ க்ா | மக் க்ரி |
| ச ந் த ன | * | அங்க-பூ...ஜ | ந க | ஸு | ஜ ந | ஹ ரி |
| ஸ்ாஸ்ாஸ்ா | * | ஸ்ா ;-ஸ்நிதாபா | தா நீ ஸ்ா | க்ரி | ஸ்நி-ரிஸ் நித | ஸ்நி |
| ச ந் த ன | * | ஆ ;-நந்...த | க ர ஸ்ரீ | க | ர-தா | மோ |
| தபமகரிஸ | * | ஸாஸா-ஸநிதாநீ | ஸா ; ; ; | | ; ; | ; ; |
| த...ர | * | ரங்க-நா...ய | கா ; ; ; | | ; ; | ; ; |

### சரணம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ; ; ; | * | காமாபா பாமா | பா , பா , | மா | பா ஶாரீ | ஸா |
| ; ; ; | * | காலஹ ரண | மே , ல . | க | ரு ணால் | வா |
| ரீ , கா , | * | காரீஸா நீ தா | நீ , ஸா ; | ஸா | ரீ கா ; | மா |
| வா , லா , | * | கால கா ல | மி . த்ர ; | க | ம லா ; | க |
| பா , பா , | * | ஸ்ாஸ்ா-ஸ்ா ; ஸ்ா | தா நீ ஸ்ா | ஸ்ரி | க்ா-ம்க் க்ரி | ஸ்ா, |
| ல , த்ர . | * | நீ ல-நீ ; ர | த ச | ரீ | ர-ச்ரு தி | ஸா |
| ஸ்ாநீஸ்ா | * | ஸ்ாஸ்ா-ஸ்ரிக்ரிஸ்ா | தா நீ ஸ்ா | ஸ்ரி | க்ா-ம்க் க்ரி | ஸ்ா |
| ர நீ ர | * | நீ ல-நீ......ர | த ச | ரீ | ர-ச்ரு தி | ஸா |
| ஸ்ாநீஸ்ா | * | ஸ்ாஸ்ா-ஸ்நிதாபா | மப தநி ஸ்ா | க்ரி | ஸ்நி ரிஸ்நி | ஸ்நி |
| ர நீ ர | * | சி ல-த்யா......க | ரா ஜ | நு | த ரா | ஜ |
| தபமகரிஸ | * | ஸாஸா-ஸநி தா நீ | ஸா ; ; ; | | ; ; | ; ; |
| ரா...ஜ... | * | ரங்க நா......ய | கா ; ; ; | | ; ; | ; ; |



ஒருவர்:—என்னுடைய டாக்டர் வைத்தியம் பார்த்து இறந்து போனவர்கள் அனைவரும் ஸ்திரீகள்.

மற்றொருவர்:—என் டாக்டர் அம்மாதிரி வித்தியாஸம் பாராட்டுவதில்லை.

* * * *

ஒரு தம்பியும் தமக்கையும் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். தாய் அவர்களைச் சமாதானப்படுத்திவிட்டுச் சிறுவனை நோக்கி, "அடுத்த வீட்டுப் பையன் தனது தமக்கைக்காக ஒரு மைல் நடந்து சென்று டாக்டரை அழைத்து வந்தான். நீ அதுமாதிரி செய்வாயா?'' என்றாள்.

சிறுவன்:—அவளுடைய பல்லை உடைப்பதற்கு வேண்டுமானால் டாக்டரை அழைத்து வருவேன்.

* * * *

உபாத்தியாயர் பிறர் அடித்தாலும் சும்மாயிருக்க வேண்டுமென்பதைப் பற்றிச் சிறுவர்களுக்குச் சொல்லிக் கொண்டிருந்தார்.

உபாத்தியாயர்:— உன்னை ஒரு பையன் அடித்துவிட்டால் என்ன செய்வாய்?

சிறுவன்:—எவ்வளவு பெரிய பையன்?

* * * *

மனைவி:—இந்த விஷயம் நம்மிருவருக்கு மட்டும்தான் தெரிந்திருக்க வேண்டுமென்று சொல்லவில்லையா?

கணவன்:—ஆம், அப்படித்தான் நான் எல்லாரிடமும் சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

* * * *

அதிக ஆசையுள்ள நூலாசிரியர்:—கடைசியாக நான் ஒன்றை எழுதிவிட்டேன். அதை நான் அனுப்பும் முதல் பத்திரிகையே ஒப்புக்கொண்டு விடும்.

அவரது நண்பர்:—என்ன அது?

"ஒரு வருஷச் சந்தாவிற்காகச் செக்''



ஹிட்லரைப்போலவேயுள்ள ஒருவர் சமீபத்தில் வியன்னாவில் சுற்றிக்கொண்டிருந்தார். வியன்னா மிருகக் காட்சி சாலையில் எடுத்த படம். இவரைக் கண்டு பல உத்தியோகஸ்தர்கள் ஏமார்ந்து போனார்களாம்.

ஒரு கிராமவாஸி நகருக்கு விஜயம் செய்தார். ஒரு சைகிள் கடையில் புகுந்து சைகிள்களைப் பார்த்துக்கொண்டிருந்தார். சைகிள் விற்பவர் பிரமாதமாகக் கூறியதையெல்லாம் கேட்டுவிட்டு அவர் முடிவில் "நான் ஒரு எருமைதான் வாங்கப் போகிறேன்'' என்றார்.

கடைக்காரர்:—எருமை மேல் சவாரிசெய்தால் எல்லாரும் பைத்தியக்காரன் என்று சொல்லமாட்டார்களா?

கிராமவாஸி:— சைகிளிலிருந்து பால் கறந்தால் என்ன சொல்லுவார்கள்!

* * * *

எஜமானி:—ஜிம்மி (நாய்)யைக் குளிப்பாட்டினாயா?

வேலைக்காரி:—ஆகா, இப்பொழுது நீங்கள் வரலாம்.

* * * *

குதிரை வண்டிக்காரன் அருகிலிருந்த ஹோட்டலுக்குச் செல்வதற்காக ஒரு பையனை அழைத்துக் கடிவாளத்தைப் பிடித்துக்கொள்ளச் சொன்னான்.

பையன்:—குதிரை கடிக்குமா?

வண்டிக்காரன்:—கடிக்காது.

"உதைக்குமோ?''

"உதைக்காது''

"ஓடிவிடுமோ?''

"ஓடாது, பயப்படாதே!''

"பிறகு நான் எதற்காகப் பிடித்துக்கொள்ளவேண்டும்.

* * * *


நரையை ஒழியுங்கள்!

இந்த ஆயிலால் தலைநரை ஒழிந்துவிடும். வேரிலிருந்தே கூந்தல் கருமை பெறும்; 60-வயது வரை அப்படியே இருக்கும். பலனில்லையேல் 2 மடங்கு கிரயம் வாபீஸ். சொற்ப நரைக்கு ரூபா 3-க்கும், கால்பங்கு நரைக்கு ரூபா 5-க்கும் பாதிக்கு மேலோ அல்லது பூராவுமோ விழுந்தால் ரூபா 9-க்கும் ஆயில் வாங்குக.

கடிதங்கள் ஆங்கிலத்திலேயே எழுதப்படவேண்டும்

BALA KALA STORES,
P. C. Kansi Simri (Darbhanga)





புராதன சாஸ்திர ஆராய்ச்சியின் பேரில் அனுபவம் பெற்ற இருவர் கலந்து தெளிவுபடக் கூறுவதாம்.



பண்டிட் M R K மூர்த்தி, "ஜோதிஷ கலா வல்லபர்"

பண்டிட் E. S K. சுவாமி. ஜோதிஷ தத்வக்ஞியானி

ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 1. காரணமுடன் கேள்வி 1-க்கு ரூ. 1. ஒரு வருஷ மாதவாரி பலன் ரூ. 2 ஆயுள்வரை பொதுப்பலன் ரூ. 10 ஜாதகமாவது, பிறந்த நேரம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.

"ஜோதிட கழகம்'' 14 பிராட்வே மதராஸ்.






போலிகளைக் கண்டு உஷார்!!!

அமிர்தாஞ்சனம்

சகல வலிகளையும் போக்கும் இந்திய திவ்யாமிர்தம்

அமிர்தாஞ்சனம் லிமிடெட்.

பம்பாய், மதராஸ், கல்கத்தா.



சுருளிக்குச் செல்லும் வழியில் ஒரு காட்டுப்பாதை

# உடனே பதில் :

"மணி"

கடிதம் கைக்குக் கிட்டியவுடன் அதற்கு உடனே பதில் எழுதிப் போட்டுவிட்டுத்தான் மறு காரியம் என்று சொல்லுகிறவர்கள் பலர் உண்டு. அப்படியே செய்பவர்கள் ஒரு சிலர் தான். அவர்களையும் நான் மனிதர்களாக மதிப்பதும் இல்லை. பதிலே எழுதாமல் இருப்பதால் ஏற்படக் கூடிய அரிய இன்பத்தை அறியாத மக்கள் மனிதப் பதரே தவிர வேறென்ன? "உடனே பதில்" என்று கடிதத்தை முடிக்கும் அறிவிலிகளுக்கு நாம் பயப்படுவானேன்? அவர்களுக்கு நாம் என்ன அடிமைகளா பணிந்து நடக்க? பதில் எழுதிக்கொண்டிருப்பதைத் தவிர்த்து நமக்கு வேறு ஏதும் வேலையில்லையோ? மேலும், "பதில் வரப்போகிறது, வரப்போகிறது" என்றெண்ணி அவர்கள் தான் ஏமாறட்டுமே. "உடனே பதில்" எழுதாவிட்டால் என்னதான் நேரிடக் கூடும் என்று அறிய நமக்கும் ஆவலாயிருக்காதா?

நான் ஒரு கடிதத்துக்கும் உடனே பதில் போடுவது கிடையாது. கடிதமே எழுதினால்தானே பதில் போட! உதாரணமாய்—சொல்லுகிறேன், கேளுங்கள்.

ரமணன் என் பால்ய சிநேகிதன். சிறுவயதில் சேர்ந்து கோலியாடினோம். பள்ளியிலும் சேர்ந்தாற்போலத் தான் வாசித்தோம். இப்போது பத்துப் பனிரண்டு வருஷங்களாய்ப் பிரிந்திருக்கிறோம். அவன் வருஷத்திற்கொரு கடிதம் போடுவான். நான் அது கூடப் போடுவதில்லை. இதனால் எங்கள் சிநேகம் விருத்தியடைந்திருக்கிறதே தவிர குறைந்து போய்விட்டதாக எனக்குத் தெரியவில்லை.

அவனுடைய வருஷாந்திரக் கடிதம் எனக்குப் பல நாள் ஒரு நல் விருந்தாக உதவும். கடிதம் கிடைத்த அன்று அதை வெகு ஆவலாகப் படிப்பேன். இரண்டாந்தரம் படிக்கும்போது, அதற்கெல்லாம் என்னென்ன, எப்படியெப்படி பதில் எழுதுவது என்று கற்பனை செய்து பார்த்துக்கொள்ளுவேன். வார்த்தைகள், வாக்கியங்கள் எல்லாம் அன்பு ததும்ப—மானஸீகமாய்—எழுதியாய்விடும். இதினின்றும் கொஞ்சங் கொஞ்சமாய் ரமணனும் நானும் சேர்ந்திருந்த நாட்கள் ஞாபகத்துக்கு வரும். அதைத் தொடர்ந்து இன்பமயமான பல நினைப்புகள் எழும். இந்த ஆனந்த சாகரத்தில் மூழ்கிய பின்னும் வேறு ஞாபகம் உண்டோ! பதில் எழுதுவது அன்றில்லை.

மறுநாள் எழுந்திருக்கும்போதே அன்று ரமணனுக்குப் பதில் எழுதிவிட்டுத் தான் வேறு காரியம் பார்ப்பது என்று தீர்மானஞ் செய்து கொள்ளுவேன். படுத்தபடியே கற்பனை யுலகில் கற்பனைக் கடிதம் எழுதி கற்பனையாகவே அனுப்பியாய்விடும். ஆனால் சாப்பிடுமுன் சாப்பிட்ட பிறகு எழுதலாமேயென்று தோன்றும். சாப்பிட்டானதும் "ஆறு மணிக்குத்தானே தபால்; என்ன அவசரம்; ஒரு தூக்கம் போட்டுவிட்டு எழுதலாமே"யென்று தோன்றும். அப்புறம் தூக்கக் கலக்கம், சோம்பல், அன்றைப் பொழுதும் பதில் எழுதாமலே கழிந்துவிடும்.

மூன்றும் நாள் ஒரு புது யோசனை. "இதுவரையில் ரமணனுடைய கடிதம் ஒன்றுக்காவது உடனே பதில் எழுதியது கிடையாதே. இன்றுமாத்திரம் வழக்கத்துக்கு மாறாக ஏதாவது புதுக் காரியம் செய்துவிட்டால் அதனால் என்ன கெடுதி நேரிடுமோ, யார் கண்டது? எனக்குப் பைத்தியம் பிடித்தேவிட்டது என்று ரமணன் எண்ணிவிட்டால்...? உடனே பதில் கிடைத்த ஆச்சர்யத்தில் அவனுக்கே பைத்தியம் பிடித்தாலும் பிடித்துவிடும். அந்த அதிர்ச்சியிலே அவன் ஹ்ருதயத் துடிப்பு திடீரென்று நின்றுவிட்டால் என்ன செய்வது?" என்று பலபல எண்ணி மேஜைமேல் கிடந்த இன்னும் பதில் எழுதப்படாத கடிதக் கூட்டத்தில் ரமணனுடையதையும் சேர்த்துவிடுவேன்.

பொழுது போகாத நாட்களில் எவ்வளவு மாலைகள் அந்தக் கடிதக் கட்டைப்புரட்டிப் பார்த்துக்கொண்டு இன்பமயமாகக் கழித்திருப்பேன்! என்றைக்காவது ஒரு நாள் அவ்வளவு கடிதங்களுக்கும் பதில் எழுதி யனுப்பிவிடுவதாகத் தான் உத்தேசம். ஆனால் பேனாவைக் கையிலெடுக்க மட்டும் மனம் வருவதில்லை.


பத்து நாளாய்விட்டால் ரமணனுடைய கடிதத்துக்கு மேல் பதில் எழுதவேண்டிய

(31-ம் பக்கம் பார்க்க)

அசல் புனு ஜாகர்
வைரங்கள்
இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட
(CULTURE)
நல்முத்துக்கள்
கிடைக்குமிடம் :
சிமன்லால் பிரதாப் சந்த்
175, சைனுபஜார், மதராஸ்.


மியூச்சுவல்
அஷ்யூரன்ஸ் கம்பெனி
லிமிடெட்.
தலைமை ஆபீஸ் :
187, மவுண்ட் ரோட், மதராஸ்
நவீன, சாஸ்திர பூர்வமான தாராளத் தன்மை கொண்ட பாலிஸி ஒப்பந்தங்கள் எம்மிடம் கிடைக்கும். எல்லோரையும் திருப்தி செய்விப்பவை குறைந்த பிரீமிய விகிதங்கள்
டி. வி. ராமமூர்த்தி,
செக்ரிடரி.

நரை மயிரை
அகற்றுங்கள்



உங்களது தலை மயிர் வெகுகாலமாகவோ, மிக அதிகமாகவோ நரைத்திருந்தால் விவலேன் ஹேர் ஆயிலை உபயோகித்தால் நரை நீங்கித் தலைமயிர் கருகருவென்று பழையபடிப் பிரகாசிக்கும். இன்றே விவலேன் எண்ணெயை உபயோகியுங்கள். அதிக நரையில்லாவிடில் சிறிய பாட்டில் ரூபா 1-12. நரை முற்றியிருந்தால் பெரிய பாட்டில் ரூ. 3. ஏககாலத்தில் 3 பாட்டில்கள் வாங்கினால் தபால் செலவு இனாம்.
சயண்டிபிக் பப்ளிஷிங்கம்பெனி
(மெடிகல் டிபார்ட்மெண்டு, S. 15)
பவானிப்பூர், — கல்கத்தா.
மதராஸ் ஸ்டாக்கிஸ்டு:—
ஜே. ஹஸாரிமால் & கம்பெனி, 260, சைனுபஜார் ரோட்,
ஸப் ஸ்டாக்கிஸ்டு:—
தாதா & கம்பெனி, மருந்து வியாபாரிகள், 52, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி. மதராஸ்.
செகந்தராபாத் ஸ்டாக்கிஸ்டு:—
பரேக் பிரதர்ஸ், ஜம்மா மஸ்ஜித்

# கண்ணோட்டம் — பிரமுகர்கள்



ஆந்திர சர்வ கலா சாலையில் பொருளாதார சாஸ்திர லெக்சராராகவுள்ள ஸ்ரீமான் வி. கே. ஆர். வி. ராவ். இவருக்கு இங்கிலாந்து கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலை அதிகாரிகள் டாக்டர் பட்டமளித்திருக்கின்றனர்.



வருஷணங்கா யூனியன் போர்டு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் ஜனாப் பாவாஜி என்கிற கே. எஸ் ஆர் அமீனுத்தீன் சாயபு.



இந்தியா கவர்ன்மெண்ட் கல்விக் கமிஷனராக நியமிக்கப்பட்டிருக்கும் மிஸ்டர் ஜே. இ. பார்க்கின்ஸ். இவர் பஞ்சாப் மாகாணத்தில் கல்வி அதிகாரி உத்தியோகம் வஹித்தவர்.



பிரிட்டிஷ் ஸர்ஜிகல் டெக்ஸிஷியன்ஸ் (வைத்யப்பிரிவு) சங்கத்தின் அங்கத்தினரான ஸ்ரீமான் வி. எ. சுந்தரம் (கல்கத்தா டவுன் பிரதர்ஸ் கம்பெனி; மானேஜர்) இவரே முதல் இந்திய அங்கத்தினர்.



பிரபல பிரிட்டிஷ் கொடையாளியான லார்டு நப்பீல்ட். மோரிஸ் மோட்டார் கம்பெனிச் சொந்தக்காரரான இவர் 13½ லக்ஷம் பவுன் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலைக்கு நன்கொடை யளித்திருக்கிறார்.



காபூலில் இந்திய வியாபார ஏஜண்டாக நியமிக்கப்பட்டிருக்கும் ஜனாப் முகமத் ஆஸ்லம் கதக். இப்பொழுதுதான் முதன் முதலாக இப்பதவி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.



இந்திய ரெயில்வே விசாரணைக் கமிட்டித் தலைவர் சர் ரால்ப் வெட்ஜ்வுட்.



இந்திய ரெயில்வே [illegible] கமிட்டி அ[illegible] டர் டபின்[illegible]





## மணி வேலை

(ஸ்ரீமதி ஆ. ராஜசூடாமணி அம்மாள் எழுதியது)
[காபிரைட்]

### கோதுமை மணியினலான தட்டு

கண்ணுடி கோதுமை மணியாவது உருண்டை மணியாவது உபயோகிக்கலாம்.

படம் 1.




முதல் வரிசையில் சாதாரணமான தையல் ஊசியில் கெட்டியான நூலைக் கோத்து கோதுமை மணி கோத்துக் கொள்ளவும். பின்னர் முதல் மணியின் முன்பக்கத்திலிருந்து ஊசியை ஊடாக நுழைத்து மேலே இழுத்து ஒரு முக்கோணமாகவும் அப்போது படம் ஒன்றில் காட்டியிருக்கிறபடி அமையும்.

படம் 2.



அடுத்த வரிசை துவங்கும் போது 2 மணி கோத்து முந்தின வரிசையின் முதல் மணியின் முன் பக்கத்திலிருந்து பின் பக்கமாக விட்டு எடுத்து மறுபடியும் பின்னல் கோத்திருக்கும் 2 மணியில் முதல் மணியின் முன் பக்கத்திலிருந்து பின்பக்கமாக எடுத்துக்கொள்ளவும். இரண்டாவதாகக் கோத்த முதல் மணியின் முன் பக்கத்திலிருந்து பின் பக்கமாக ஊசியை நுழைத்து இழுத்துக்கொள்ளவும். இப்படியாக மூன்று தடவை இரண்டு மணி. இரண்டு மணியாகக் கோர்த்துத் தைக்கவும். தட்டுக்கு ஆறு மூலையாக அமையும்படிச் செய்துகொள்ள வேண்டும்.

ஊசியை நுழைத்துப் பின்பக்கமாக வாங்கி 2-வது கோத்த முதல் மணியினூடாக இழுக்கவும். இன்னும் 2 மணி கோத்தால் 6மூலை அமையும். கடைசி



தட்டுகளில் உபயோகிக்கக் கூடிய மணி மூடி.

கடைசியில் ஒரு மணியைக் கோத்து முதலில் வரும் அடி மணியிலும் கடைசியில் வரும் அடிமணியிலும் ஊசியை நுழைத்து இழுத்து வட்டம் அமையும்படிச் செய்ய வேண்டும்.

படம் 3



பின்னும் இரண்டு மணிகளைக் கோத்து முந்தின வரிசையில் குறுக்காக வரும் மணியில் ஊசியை நுழைத்துப் பின்பக்கமாக எடுத்துப்புதிதாகக் கோத்திருக்கும் முதல் மணியினூடாக இழுக்கவும். திரும்பவும் இரண்டுமணி கோத்து முன் கோத்த இரண்டாவது மணியின் முன்புறத்தில் யில் ஒரு மணியைக் கோத்து இன்னொரு வட்டம் அமையும்படிச் செய்து கொள்ளவும்.

வலதுகைப் பக்கமாகவே திருப்பித்திருப்பித்தைக்கவும்.

படம் 4



இப்போது 3-வது 'வட்டத்திற்கு ஆரம்பம். பின்னும் இரண்டுமுறை 2, 2 மணி கோத்து முன் வைத்தவாறே தைத்து வரவும். ஆனால் ஒவ்வொரு வட்டத்திற்குள்ளும் ஆறு மூலைகள் இருக்கவேண்டும். சரியாய் ஆறு மூலைகள் அமையாவிடில் தட்டின் உருவம் கோணலாக அமையும். அதை நன்றாகக் கவனித்துக் கொள்ளவும்.

ஒவ்வொரு மூலை அமையும் போதும் கடைசியில் ஒரு மணியைக் கோத்து முதல் மணியிலும் கடைசி மணியிலும் சேர்த்துத் தைக்க மறந்துபோகாமலிருக்க வேண்டும். அப்போது தான் வட்டம் நன்றாய் அமையும். மத்தியில் ஒரு சின்ன வட்டமும் அமைந்து அழகாகத் தோன்றும்.

இவ்வாறே தைத்துக் கொண்டு போக ஒவ்வொரு கட்டமாக அதிகரித்துப் பெரிதாகவும் அழகாகவும் தட்டுகளில் உபயோகிக்கக்கூடிய மணி மூடியாய் இருக்கும். [illegible]

## வெண்குஷ்டம், பெரு வியாதி

இம்மருந்தை உபயோகித்தால் இவ்விரு வியாதிகளும் ஒழியும். ஹக்கீம்கள், வைத்தியர்கள், கவிராஜர்களின் வைத்தியத்தில் பலனேற்படாமல் போயிருந்தால்கூட இதை உபயோகியுங்கள். பலனில்லையேல் ரூபா 500 இனம். விலை ரூபா 2.

**Vaidyaraj Akhil: Kishore Ram,**
**No. 32/5, P. O. Katrisarai (Gaya)**

வாசனை எண்ணெய்கள் நீங்களே தயாரித்து பணத்தை மீதி செய்யலாம்!



கீழ்க்கண்ட ஏதாவது ஒரு [illegible] மோஹினி எஸன்ஸை 16 அவுன்ஸ் [illegible] வெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் அல்லது விளக்கெண்ணெய் கடலை எண்ணெயில் கலந்தால் உங்களுக்கு சிறந்த வாசனை எண்ணெயாகும் விலைகளோ மிகவும் குறைவு.

சுத்தமான மோஹினி எஸன்ஸுகளின் பெயர்களும் விலைகளும்.

| | | | |
|---|---|---|---|
| சாம்பாக் | ரூ. 2-0 | போகுல் | ரூ. 1- |
| காஷ் | ,, 2-0 | ஹீனு | ,, 1- |
| கேவ்டா | ,, 2-0 | வில்வி | ,, 1- |
| மஸ்க் | ,, 2-0 | தாமரை | ,, 1- |
| கதம்பம் | ,, 1-8 | கோலோன் | ,, 1- |
| மல்லிகை | ,, 1-8 | மோத்தியா | ,, 1- |
| ரோஸ் | ,, 1-8 | ஸ்வீட் | ,, 1- |

அரை அவுன்ஸ் பாட்டில்களாகக் கிடைக்கும். பாக்கிங், தபால் சார்ஜ், வி. [illegible] செலவு வேறு.

S. PAUL & Co., Perfumers
(Dept. S. W.) 4, Hospital Stre[illegible]
Dharamtola, Calcutta.



ராமசுப்பு ஹீனஸ்வரத்துடன் "அப்பா நாசு! வேண்டாம், அறியாப் பையன். அவனை மன்னித்து அனுப்பிவிடு" என்று சொன்னார். தனது அறைக்குள் கொண்டுவரப்பட்ட திருட்டுப் பையனை ராமசுப்பு திரும்பிப் பார்க்கவே துணியவில்லை.

# தாயைக்கொண்ட தனயன்

——:[o]:——

(ஸ்ரீமான் எம். என். கணேசய்யர்)

அடே ராமசுப்பு!

எம்மா?

இந்த ஒரு அணாவைக் கொண்டுபோய்க் கோவிலுக்கெதிரில் கூடியிருக்கும் ஏழைப் பிச்சைக்காரர்களுக்குத் தலைக்கு ஒரு பை கொடுத்துவிட்டு வா!

"ஆஹா" என்று கூறி, ஒரு அணாவைக் கொண்டு சென்ற ராமசுப்பு, "நானும் ஒரு ஏழை தானே! நானே இந்த ஒரு அணாவையும் எடுத்துக்கொண்டால் என்ன!" என்று சொல்லிக்கொண்டு அதற்கு ஜிலேபி வாங்கிச் சாப்பிட்டுவிட்டான்.

"அடே ராமசுப்பு! கடைக்குப்போய் ஒரு வீசை சர்க்கரை வாங்கிக்கொண்டுவா" என்று சொல்லி அதன் கிரயம் ஆறணாவையும் கொடுத்தனுப்பினாள் அவன் தாயார் "போய் வர எனக்குக் கூலி வேண்டாமோ" என்று சொல்லிக்கொண்டு முக்கால் வீசை சர்க்கரையை வாங்கிக்கொண்டு வந்து கொடுத்துவிட்டுப் பாக்கி நின்ற காசுக்குத் தின்பண்டம் வாங்கிக்கொண்டான்.

ஒருநாள் ராமசுப்புவின் தாயார் காய்கறி வாங்கின பிறகு மீந்திருந்த சில்லரை காலணாவைச் சமையல் அறை [illegible] வைத்திருந்தாள்.

அதைக்கண்ட ராமசுப்பு, தாயார் வெளியில் போயிருக்கையில் "எல்லாப் பையன்களுக்கும் வாரம் கால் அரை பெற்றோர்கள் கொடுக்கவில்லையா! நான் ஏன் இந்த காலணாவையும் எடுத்துக்கொள்ளப்படாது" என்று சொல்லிக்கொண்டு அதை எடுத்துக்கொண்டுபோய் ஒரு பம்பரமும் கோலிக் குண்டுகளும் வாங்கிக்கொண்டான்.

ஒரு விஜயதசமியன்று ராமசுப்புவைப் பள்ளிக்கூடத்தில் வைத்தார்கள்.

காலக்கிரமத்தில் அவன் பெரியவன் ஆனதும் அவனை மாணவர் சங்கத்தின் காரியதரிசி ஆக்கினார்கள். "வேலை பார்க்க எனக்குக் கூலி வேண்டாமா?" என்று சொல்லிக்கொண்டு ஒரு ரூபாய் சாமான் வாங்கினால் ஒன்றரை ரூபாய் என்று பொய்க்கணக்குச் சொல்லி அரைரூபாய் எடுத்துக்கொள்வான்.

சுருங்கக் கூறுமிடத்து எந்த வியாபாரத்திலும் லாபம் இல்லாமல் தலையிட்டுக்கொள்ள மாட்டான். பள்ளிக்கூடத்துப் படிப்பு முடிந்தது. ஊறுகாய், அப்பளாம், குழம்புப் பொடி குசால்தாஸ் கம்பெனியில்,




## வயோதிகக் கோளாறுகள்

### அவற்றைத் தடுத்துக் கொள்ளுங்கள்

வயோதிகர்கள் பல கோளாறுகளால் கஷ்டப்படுகின்றனர். நடுத்தர வயதினர்கூட பித்த மயக்கம், வலுவிழந்த கண்கள், ஹிருதய மெலிவு, பலவீனம் முதலியவற்றால் அவதியுறலாம். நரம்புகளிலுள்ள இரத்தக் கொதிப்படைவதாலேயே இக்கோளாறுகள் உண்டாகின்றன. இது மிக ஆபத்தான நிலையாகவும் மாறலாம்.

இக்கோளாறைப் போக்க சுலபமான வழியிருக்கிறது. இரத்தக் கொதிப்பை அடக்குவதற்கு அவசியமான சத்துக்கள் கல்ஸானா மாத்திரைகளில் அடங்கியிருக்கின்றன. இதனால் நோயின் மூலகாரணமே ஒழிந்து தேகம் சுகத்தையடைகிறது.

கல்ஸானாவின் குணங்களை யறிந்த பிரபல வைத்தியர் ஒருவர் கூறுவதாவது:

"நாம் உப்பில்லாமல் எதையும் சாப்பிடுவதில்லை; அது போல் தினமும் கல்ஸானா மாத்திரைகளைச் சாப்பிட வேண்டும். முக்கியமாக வயோதிகர்கள் ஆரோக்கியமாகவும், வலுவுடனுமிருக்கக் கண்டிப்பாக கல்ஸானா மாத்திரைகளை உட்கொள்ளவேண்டும்."

எனவே, தாமதம் வேண்டாம். உங்கள் மருந்து வியாபாரியிடமிருந்து உடனே ஒரு புட்டி கல்ஸானா மாத்திரைகளை வாங்கிக்கொள்க. முன்னைவிட அதிக ஆரோக்கியமும், சந்துஷ்டியும் அடைவீர்கள்.

# Kalzana

மேலான ஆரோக்கியத்திற்கான உலோக உணவு.

கைபடாமல் தயாரிக்கப்படுவது.



## இரங்கோன் கலர் சிந்தடிக்கற்கள் மணிமாலைகள்




இந்தியாவில் எல்லா பாகங்களிலும் ஏராளமாய் விரும்பக்கூடிய தற்கால நாகரீகத்துக்கேற்றவாறு கெமிகல் கோல்டினால் புதுமாதிரியாய் தயார் செய்தவை. இதை ஸ்திரீகள் குழந்தைகள் சேர்த்தியாய் அணிந்து கொள்ளலாம்.

25" நீளமுள்ள கலர் கல்மாலை 1க்கு ரூ. 4-0-0
டை பெண்டன்டு போட்டது 1க்கு ,, 5-0-0
ஜாவர் ஒட்டியாணம் பெரியது 1க்கு ,, 6-8-0
நெ.1. சாதா தேஜ்ஜை ஒட்டியாணம் 1க்கு 5-8.
நெ. 2. 1க்கு 3-8-0 நெ. 3. 1-க்கு 2-8-0
கைவளையல்கள் பெரிய சைஸ் ஜதை 1-க்கு 2-8-0. கெமிகல் கோல்ட் ரங்கோன் டைமண்டு 14 கற்கள் உள்ள கம்மல் ஜதை 1க்கு 6-0-0. எல்லாவற்றிற்கும் 5 வருஷம் உத்தரவாதம். F. M. O. ஆர்டருக்கு முன் பணம் அனுப்பவும்.

கே. நாதமுனி & சன்ஸ்,
(ஸ்தாபிதம் 1910.)
168, சைனா பஜார் ரோட் மதராஸ்.

வெளியூர்களுக்குப் பார்சல்கள் அனுப்பும் குமாஸ்தாவாக ஏற்பட்டான். பிரதி தினமும் நூற்றுக் கணக்கான கடிதங்களும், பார்சல்களும் அவன் மூலமாய்ப் போக நேர்ந்ததால், ஸ்டாம்புகளைத் திருடி விற்றுச் சம்பளத்திற்கு மேல் பணம் அடைந்து வந்தான். தஸ்கரபதியாக விருந்தபோதிலும் மிகவும் கெட்டிக்காரனாக விருந்ததால் படிப்படியாக வேலையில் உயர்ந்து பணம் சேர்த்துக் கடைசியில் குசால்தாஸின் ஊறுகாய், அப்பளாம் குழம்புப் பொடிக் கம்பெனியையே விலைக்கு வாங்கிக் கொண்டு விட்டான். அது முதல் அக்கம்பெனியிலிருந்து வெளிப்படும், அப்பளாம், ஊறுகாய், குழம்புப் பொடி முதலிய டப்பிகளில் "அரிச்சந்திரன்" என்ற வியாபாரக் குறி தெளிவாகக் காட்டப்பட்டு வந்தது. ஏனெனில், அந்தச் சாமான்கள் தயாரித்தனுப்பப்படும் கம்பெனியின் சொந்தக்காரன் அரிச்சந்திரனைப்போன்ற மகா சத்தியவந்தன் அன்றோ!

காலக்கிரமத்தில் ராம சுப்புவுக்குக் கலியாணம் நடைபெற்றது. சில நாட்களுக்கெல்லாம் அவனுக்கொரு குழந்தையும் பிறந்தது. அதை ராம சுப்பு கண்ணுக்குக் கண்ணாக வளர்த்துவந்தான். அக்குழந்தையின் பெயர் ரமணி. ஐந்து வயதானதும் அக்குழந்தையின் ஜன்ம நட்சத்திரத்தன்று அதன் தாய் ஸௌந்திரவல்லி தன் புருஷனைப் பார்த்துக் "குழந்தையினிடம் ஒரு அணாக் கொடுத்தனுப்புங்கோ; ஏழை பரதேசிகளுக்குக் கொடுத்துட்டு வரட்டும்! கோவிலுக்கு முன்னே வேண்டிய ஏழைகள் உண்டு!" என்றாள். தூக்கிப் போட்டது ராமசுப்புவுக்கு! ஏனெனில், தான் சிறுவனாக இருந்தபோது தன்னிடம் தனது தாயார் தருமம் செய்யும்படிக் கொடுத்த ஒரு அணாவுக்குத் தான் ஜிலேபி வாங்கிச் சாப்பிட்டுவிட்டது அவனுக்கு நியாபகம் வந்து அவன் மனதைத் துன்புறுத்தியது. தகப்பனது குணம் அவன் குழந்தைக்கு ஞாபகம் ஏற்பட்டுவிட்டால் என் செய்வதென்று பயந்து நடுங்கினான்.

"என்ன! நான் சொன்னது காதில் விழவில்லையா என்ன? கொடுத்து அனுப்புங்கோ! பீடை போகும்" என்றாள் அவன் மனைவி.

மிக்கக் கவலையுடன் தனது குமாரன் ரமணியினிடம் ஏழைப்பரதேசிகளுக்குக் கொடுத்து விட்டு வரும்படிச் சொல்லி ஒரு அணாவைக் கொடுத்தான். அது ஜிலேபியில்தான் செலவாகும் என்று நிச்சயித்துக் கொண்டான். ஏனெனில் தகப்பன்பிள்ளையே அன்றோ அவன். எல்லோரும் தான் அப்படிச் சொல்லி வந்தார்களே!

பற்பல தடவைகளில் ரமணியை அவன் தாயார் கடைகளில் சாமான்கள் வாங்கிக் கொண்டு வரக் காசு கொடுத்து அனுப்புவதுண்டு. அப்பொழுதெல்லாம் ராமசுப்புவின் மனது துடிக்கும்.

ரமணியைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தார்கள். அவனும் காலக்கிரமத்தில் தகப்பனார் இருந்ததுபோலவே மாணவர் சங்கக் காரியதரிசியாகத் தெரிந்தெடுக்கப் பட்டான். மாணவர் சங்கத்தில் ஒரு வியாசப் போட்டிப் பரீட்சை நடந்தது. அதில் பரிசளிப்பிற்காகப் பதினைந்து ரூபாய் வசூலாயிற்று. பரிசுப் பொருள் கம்பராமாயணத்தின் விலை பத்து ரூபாய்தான். வசூலான தொகையையும் புத்தகத்தின் கிரயத்தையும் பற்றி ரமணி தனது தகப்பனிடம் கூறினான்.

"சரி! நான் சிறுவனாகவிருந்தபோது பல தடவைகளில் செய்திருந்ததுபோலவே எனது செல்வக் குமாரனும் செய்து அதிகமாக வசூலான ஐந்து ரூபாயையும் எடுத்துக் கொண்டு விடுவான்" என்று பல தடவைகளிலும் தனக்குட் சொல்லிக்கொண்டு அவன் பட்ட கஷ்டம் கடவுளுக்குத் தான் தெரியும்!

ரமணியின் படிப்பு முடிந்த சிலநாட்களுக்கெல்லாம் அவன் தனது பிதாவை யணுகி "அப்பா! நான் ஏன் வீண் பொழுது போக்கவேண்டும். பார்சல், கடிதம் முதலியன அனுப்பும் குமாஸ்தா வேலையை நான் பார்க்கிறேனே" என்றான்.

என்ன செய்வான் ராமசுப்பு!

"அப்பா வேண்டாம்! அந்த வேலை உனக்கு எதற்கு! பின்னர் ஏதாவது நல்ல வேலையில் அமரலாம்" என்று பதில் அளித்தான்.

நமது கம்பெனியில் குமாஸ்தா வேலை நல்ல வேலைதானே! அதை நான் ஏன் செய்யப் படாது?

ராம சுப்பு:—தனிகனான எனது குமாரனுக்கு ஏற்ற வேலை அல்ல அது நாலுபேரும் சுட்டிக்காட்டிக் கேலி பண்ணுவார்கள். "லோபி, செலவைக் குறைக்கத் தன் மகனையே குமாஸ்தா வேலையில் அமர்த்திக் கொண்டான்" என்று கூறுவார்கள். அது எனது கௌரவத்துக்குக் குறைவு!

ரமணி:—மற்றவர்களுக்கு அது ஏன் தெரியவேண்டும்?

ராமசுப்பு:—நீ சொல்வதன் தாத்பரியம் எனக்கு ஏற்படவில்லை

ரமணி:—உங்களுக்குச் சொந்தமில்லாத ஒரு மூன்றாம் பெயர்வழியென எல்லோரும் நினைக்குமாறு ஏற்பாடு செய்துவிட்டாலோ? உங்களது கம்பெனியிலுள்ளவர்கள் ஒருவருக்குமே என்னை அடையாளம் தெரியாது. என் பெயரை மாற்றி என்னை அந்தக் குமாஸ்தா வேலையில் நியமித்துவிடலாமே!

ராமசுப்பு எவ்வளவோ சொல்லிப்பார்த்தான். பிரயோசனப்படுவதாகக் காணோம். ரமணியும் அவனது தாயாரும் ஒரே பிடிவாதமாக வற்புறுத்தினார்கள்.

"சரி! விதியை யாரால் வெல்லமுடியும்! எனது குமாரன் நான் பாலியத்தில் செய்ததுபோல் ஸ்டாம்புகளைத் திருடுவதென்னமோ நிச்சயம்? ஆனால் நான் சாமர்த்தியமாகத் தப்பித்துக் கொண்டதுபோல் தப்பித்துக் கொள்ளுவானா என்றது சந்தேகம், ஐய்யோ! எனது ஒரே குமாரன் நற்குண நற்செய்கைகளுடன் கூடியிருக்கப் படாதா, விதி! விதி! நான் செய்த பாபம்" என்று கூறிக் கண்ணீர் விட்டழுதான். தனது மனைவியினிடமும் மகனிடமும் தனது பயத்திற்குக் காரணத்தைச் சொல்லிக் கெடுதல் ஏற்படுவதைத் தடுக்க முயற்சி செய்ய அவன் மனம் துணியவில்லை! தனது துற்செயல்களைப் பிரகடனம் செய்யத் தைரியம் ஏற்படவில்லை. தன்னைப்பற்றி அவர்கள் என்ன நினைப்பார்கள் என்று பயந்து நடுங்கினான்.

சந்துரு என்ற பெயருடன் ரமணி முந்திய ஊறுகாய் அப்பளாம் குழம்புப் பொடி. குசால்தாஸ் கம்பெனியில் பார்சல் குமாஸ்தாவாக ஏற்படுத்தப் பட்டு வேலை பார்த்துவந்தான்.

பிரதி தினமும ராம சுப்பு நடுநடுங்கிக் கொண்டிருந்தான். எந்த சமயத்தில் கையுங்களவுமாகப் பிடிபட்டுத் தன் அருமை மகன் தன்னிடம்கொண்டுவரப் படுவானோ என்ற திகில் அவன் மனதை விட்டு நீங்கவில்லை. சில நாட்கள் சென்றன. கம்பெனியிலுள்ளவர்கள் ஒருவர் பாக்கியின்றிச் சந்துருவை நேசித்துப் புகழ்ந்தார்கள். அழகிய வசீகரமான முகம். எல்லோரிடமும் மிக்க மரியாதை, சாந்த குணம், யார்தான் சந்துருவினிடம் வாஞ்சையின்றி இருக்க முடியும்! ஆனால் ராம சுப்புவுக்கோ, தனது குமாரனது வசீகரமான முகம், மரியாதை, சாந்த குணம் முதலியவைகளின் மறைப்பில் திருட்டு சுபாவம் நகைத்துக் கொண்டிருந்ததாக அபிப்பிராயம்.

ஒரு நாள் ராம சுப்பு தனது ஆபீசறையில் உட்கார்ந்திருந்தான். அவனது மானேஜர் மிகவும் பரபரப்புடன் வந்து "ஸார்! யஜமானே! கையுங்களவுமாக அகப்பட்டுக் கொண்டு விட்டான். தங்களிடம் சொல்லி விட்டுப் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஆள் அனு

(27-ம் பக்கம் பார்க்க)


பிரபல ஜோதிஷர்



மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசுபெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூபா 2. 1 வருஷ மாதவாரிப் பலன் எழுத ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், 58, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், மதராஸ்.



மல்லிகாவின் பாக்யமே பாக்யம்!

போன வருடம் ஐயோ! அப்பா! என்று கஷ்டப்பட்டவள் இவ்வருடம் ஒரு குழந்தையை அன்புடன் அணைகிறாள்



"வேலன்ஸ் ஸ்திரீ ஸோதரி"

ஸ்திரீகளுக்கு மாதக்குளி காலத்தில் உண்டாகும் சூதக வாய்வு, சூதக பந்தம், சூதகக்கட்டினால் உண்டாகும் வயிற்று வலி, பேதி, பசியின்மை. வாந்தி, மயக்கம், தலைவலி, ஜ்வரம், உடல் ஸ்தூலித்தல் முதலிய எல்லா கர்ப்பாசய வியாதிகளையும் கண்டித்து மலட்டுப் பூச்சிகளைக்கொன்று, கருப்பைக்கு பலந்தந்து ரக்ஷித்து சந்தான பாக்யத்தையளிக்கும் உன்னத ஔஷதம். பத்தியமில்லை, சேட் விலை ரூபா 5.



வேலன்ஸ்மெடிகல் ஹால் 61, காரணீஸ்வரர் கோயில் தெரு மைலாப்பூர், சென்னை



# நவ நாகரீகம்

## மேஜை அலங்காரம்

(காசினி எழுதியது.)

* * * 'எங்கள் பக்கத்தாத்து மாட்டுப்பெண் மேஜை அலங்காரத்தைப் பற்றிப் பேச்சுவாக்கில் ஏதோ சொன்னாள். அவள் இன்ன சொல்லுகிறாள் என்பது எனக்குச் சரிவரப் புரியவில்லை. மேஜையின்மேல் கிண்ணங்கள், வாஸ்கள் முதலியவற்றில் பூக்களை வைத்து ஜோடித்து வைக்கிறார்கள் என்பது என்னவோ எனக்கும் தெரியும். ஆனால், அவள் அப்படி வைக்கவேண்டும்; ஆனால் தான் பார்வைக்கு நாசூக்காகவும், நன்றாகவும இருக்கும் இப்படிப் பூக்களை ஒரே மொத்தையாகவைத்தால் அவ்வளவு நன்றாக இருக்காது' என்று என்ன, என்னமோ சொன்னாள். இதற்குப் பரிசுகள் உண்டு என்றும் சொன்னாள். விஷயம் என்ன என்று நீ கேட்டிருக்கிறாய்.

சமீபத்தில் மேஜை அலங்காரப்போட்டி ஒன்று மைசூரில் நடைபெற்றதாகத் தினசரிப்பத்திரிகைகளில் போட்டிருந்ததை நீ பார்க்கவில்லையா? இதைப்பற்றித் தான் உங்கள் பக்கத்தாத்து மாட்டுப்பெண் சொல்லி இருக்கவேண்டும் என்று எண்ணுகிறேன். அவள் சொன்னதும் இன்னும் ஒரு விஷயத்திலும் வாஸ்தவம் தான். கிண்ணங்களில் பூக்களை வைத்தால்மட்டும் போதாதே? அவைகளைச் சரியான முறைகளில் ஜோடித்து வைத்தால்தானே சோபையாக இருக்கும். இவ்விதம் சிங்காரிக்கப்பட்ட மேஜைகளை என் சிநேகிதி ஒருத்தி போய்ப்பார்த்தாளாம். அவள் தான் பார்த்ததில் இரண்டு, மூன்று மேஜைகளை அன்று எங்களுக்கு



திருச்சியில் யுத்தநிறுத்த தினத்தன்று ஸ்திரீகள் ''பாப்பி'' புஷ்பங்கள் விற்ற காட்சி.

வர்ணித்தாள். அதைக் கீழே எழுதி இருக்கிறேன்.

மேஜைகள் எல்லாம் ஒரே அளவான மேஜைகள்தான். ஒரு மேஜையை இந்தப் போட்டியில் கலந்துகொண்ட மாதர்களில் ஒருத்தி இக்தியர் மோஸ்தரில் அலங்காரம் செய்திருந்தாளாம். மேஜையின்மேல், அழகிய சரிகைப் பூவேலை செய்யப்பட்ட ஒரு காசிப்பட்டை விரித்து, இதன்மேல், ஒரு தட்டில் வெற்றிலை, பாக்கு, பழம் தேங்காய், மற்றொரு தட்டில் குங்குமம், சந்தனம், மஞ்சள் முதலியவைகள் வைத்த கிண்ணங்கள் நடுவில் ஒரு தட்டில் தொடுத்த ரோஜா, மல்லி, முதலிய புஷ்பங்கள், ஒரு பக்கமாக, ஒரு தட்டில் வர்ணக் கோலப் பொடியில் கோலம் போட்டு, இதைச் சாய்த்து வைத்து, அலங்காரம் செய்திருந்தாளாம். இது பார்வைக்குப் பகட்டாகவும், அழகாகவும் இருந்ததாம். மற்றொருத்தி டாம்பீகமே இல்லாமல் தன் மேஜையை அலங்கரித்திருந்தாளாம் இதுதான் முதல் பரிசு பெற்றது என்று நினைக்கிறேன். மேஜையின் மேல், துயவெள்ளையான ஒரு சலவை செய்த மேஜைத் துணியை விரித்து, இதன்மேல் இலேசான பச்சை நிறத்தில் ஒரு 'ரன்னரை' விரித்திருந்தாளாம். 'ரன்னர்' என்றால் உனக்குத் தெரியுமோ என்று சந்தேகமாக இருக்கிறது. இது ஒரு ஆங்கிலப் பதம். சாதாரணமாக விரித்திருக்கும் மேஜைத் துணியின்மேல் கறைபடாமல் இருக்கும்பொருட்டும், அலங்காரத்தை உத்தேசித்தும், விரிக்கப்படும் மற்றொரு துணிக்கு 'ரன்னர்' என்று பெயர் சொல்லுகிறார்கள். இது முதல் துணியைவிட அளவில் சிறியதாகவே இருக்கும் என்பது நான் கூறாமலே விளங்கும். இதற்குச் சரியான தமிழ் வார்த்தை எனக்குத் தெரியவில்லை. மேஜை நடுவில் கனமான, கண்ணாடிக் கிண்ணம் ஒன்று, வைத்து, அதில் புல் கதிர்களையும், இலைகளையும் அழகாகச்


ஸ்தாபிதம் 1913

சவரன் மாத்து தங்கத்துக்கும், அசல் வெள்ளி சாமான்களுக்கும், மேன்மையான வேலைப்பாட்டுக்கும் உத்திரவாதமுள்ள இடம்.

**கரம்சந்த் சபில்தாஸ் & ஸன்**

நகை வியாபாரிகள்

175, சைனாபஜார் ரோட் — மதராஸ்.

காட்லாக்குக்கு எழுதவும்.



**பிரபல ஸங்கீத வித்வான் எழுதியது.**

முசிரி-ஸுப்ரஹ்மண்ய ஐயர், 6, ஆலிவர் ரோடு
மயிலாப்பூர், 2-5-35.



என் குடும்பத்தினர் நெடுநாளாகக் கேசவர்த்தினியை உபயோகித்து வருகின்றனர். கூந்தலை உதிராமல் தடுத்து, நன்றாக வளரச்செய்வதை அனுபவத்தில் கண்டு, இதைப் புகழ்ந்து சிபார்சு செய்து வருகின்றனர். ஸகல கேச உபாதிகளையும் இது தீர்க்கவல்லது என்பதைத் தெரிவிப்பதில் எனக்குப் பரம திருப்தி.

(கையொப்பம்) முசிரி-ஸுப்ரஹ்மண்ய ஐயர்.

மாத உபயோகத்துக்குப் போதிய கேசவர்த்தினி விலை அணா 12;
கேசவர்த்தினி ஷாம்பு விலை அணா 12; மேற்செலவு வேறு

தென் இந்திய ரஸாயன சாலை,
லஸ்ரோடு, மயிலாப்பூர், சென்னை.

சிங்காரித்து வைத்திருந்தாளாம். கண்ணாடிக் கிண்ணத்துக்குப் பட்டைகள் தீர்த்திருந்ததாம். மேஜையின் ஓரமாக, சிறிய 'சாப்பல்—தட்டு' ஒன்று வைத்திருந்தாளாம். இவ்வளவுதான் இவள் செய்த மேஜை அலங்காரம். காரியத்தை வெகு துரிதமாகவே இவள் செய்து முடித்திருக்க வேண்டும். இது பார்வைக்கு வெகு சாதுரியமாகவும், நாஜூக்காகவும், அழகாகவும் இருந்ததாம். மற்றொருத்தி மேஜையின் மேல் ஒரு வெள்ளைத் துணியை விரித்து, இதன் மேல் வர்ணக் கோலப் பொடியினால் நாலு பக்கமும் கோலம் போட்டிருந்தாளாம். நடுவிலும் ஒரு கோலம் போட்டு, இதன் மேல் ஒரு வாஸ் வைத்துச் சில பூக்களை வைத்திருந்தாளாம். இதுவும் அழகாக இருந்ததாம். இப்படி, மேஜை அலங்காரங்களை இவர்கள் பல தினுசில் செய்திருந்தார்களாம்.

இதை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்த லேடி சின்னையா, 'ஆமாம், எந்த ஒரு அலங்காரத்திலும், அவரவர்களுடைய மனப்பான்மை தெரியத்தானே செய்யும்? இப்படி நாமும் ஒரு போட்டி வைத்தால் என்ன?' என்றாள்.

'வைக்கலாம்; ஆனால் அதற்கு இப்பொழுது என்ன அவசரம் வந்தது? அடுத்த வருஷம் புஷ்பக் காக்ஷியின் போது நாமும் இவ்விதப் போட்டி வைக்கலாம். சௌகரியமாக இருக்கும்' என்றாள் ஆனரபிள் சிவன் மனைவி.

'புஷ்பக் காக்ஷிக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?' என்று நான் கேட்டேன்.

'அது தெரியாதா உங்களுக்கு? அம்மாவுக்கு வரும் புஷ்பக் காக்ஷியில் சேர்ந்து, ஒரு பரிசு வாங்க வேண்டும் என்று ஆசையாக இருக்காம். இதற்காகத் தோட்டக்காரனுடன் யோசித்துச் சில செடிகளைத் தயாரித்துக்கொண்டிருக்கிறாள். இது என்னது என்று நாங்கள் பார்க்கக் கூடக் கூடாதாம். அந்தப் பக்கமே நாங்கள் வரக்கூடாது என்று திட்டம் செய்திருக்கிறாள். அப்பொழுது, இந்தப் பூக்களில் சிலவற்றை மேஜை அலங்காரமாக வைத்து, இரண்டு பரிசு அடிக்கலாமே என்று நினைக்கிறாப்போலிருக்குது. அப்பொழுது வைச்சால் தானே, புஷ்பக் காக்ஷிக்குத் தயாரிச்சும் செடிகள் பூக்கும்? என்று அவளுடைய பெண் சிரித்துச் சொன்னாள். இது விஷயமாக நாங்கள் அவளைப் பரிகாசம் செய்யவே, பேச்சு இதர விஷயங்களில் மாறிவிட்டது.

பூக்களைச் சிங்காரித்து வைக்க ஒன்று சுபாவத்திலேயே தெரியவேண்டும் அல்லது பார்த்துக் கற்றுக் கொள்ள வேண்டும். வெறுமனே, ஒரு வாஸில் வைத்தால் மட்டும் போதாது.

### வளையல்

கண்ணாடி வளையல்களில் அன்று இன்னும் ஒரு புதிய தினுசு பார்த்தேன். இது இப்பொழுதுதான் இங்கே விலைக்கு வந்துகொண்டிருக்கிறது. இந்த வளையல்கள் சாதாரண வளையல்கள் மாதிரியில்தான் இருக்கின்றன, அதாவது அதிக அகலமாகவும், கனமாகவும் இல்லை. இவைகள் நீண்ட மணிகளை ஒன்றோடொன்று சேர்த்து இணைத்த மாதிரியில் செய்யப்பட்டிருக்கின்றன. பல அழகிய இலேசான வர்ணங்களில் இந்த வளையல்களைச் செய்து விற்கிறார்கள். புதிய மோஸ்தர் ஆனதினால் தற்சமயம் இவைகள் ரூபாய்க்கு ஐந்து அல்லது ஆறு ஜதைகளுக்குமேல் கிடைப்பதில்லை. பார்வைக்கு இவைகள் முத்துக்கள் கோத்த மாதிரியில் மிகவும் அழகாக இருக்கின்றன. லேடி சின்னையாவின் மகள், ஒருவித இலேசான நீல வர்ணத்தில், இதில் இரண்டு ஜதைகள் வாங்கி, இரண்டு எனமல் வளையல்களுக்கு நடுவில் போட்டுக் கொண்டாள். எனமல் வளையல்களுக்குக் கோடு கோடாகக் கறுப்பு எனமல் பூசி இருந்தது. வளையல்கள் அவள் கையில் மிகவும் நேர்த்தியாக விளங்கிற்று.

அகலமான, ஒத்தை வளையல்களைப் போட்டுக் கொள்ளும் வழக்கமும் இன்னும் இருந்துகொண்டுதான் இருக்கு. ஆனரபிள் சிவன் பெண் இந்தத் தினுசில் போன வாரம் ஒரு ஜதை வாங்கினாள். வளையல் சுமாருக்கு இரண்டு விரல் அகலம் இருந்தது. ஆழ்ந்த நீல நிறமாக இருந்தது. நீலம் என்று கூறுவது அவ்வளவு பொருத்தமில்லை; கத்தரிப் பூ வர்ணம் என்றும் கூறலாம். இதில், நடுவில், சூரியன் மாதிரியில் சரிகைப் பூக்கள் போட்டிருந்தன. ஜதை வளையலின் விலை இரண்டு ரூபாய்கள் என்று வளையல்காரன் சொன்னான்; பேரம் பண்ணி, ஒன்றரை ரூபாய்க்கு வாங்கினாள். ஆனரபிள் சிவன் மனைவி மட்டும், இரண்டு வளையல்கள் எதுக்கு! உங்களுக்கு ஒரு கையில் ஒரு வளையலும் மற்றக் கையில் கடிகாரமும் போட்டுக்கொண்டால் தானே நாஜூக்கு? இனிமேல், வளையல்களை ஜதையாக வாங்காமல், ஒத்தை ஒத்தையாக வாங்குங்களேன் என்று கேட்டாள். இரண்டும் எனக்கு இல்லை. பத்மாவுக்கு ஒன்று கொடுத்துவிடப் போகிறேன், என்றாள் அவளுடைய மகள். இது ஒரு நாஜூக்கு. மற்ற விஷயங்கள் அடுத்த கடிதத்தில்.


இந்தியா கவர்ன்மெண்டில் மேடிகல் ஸன்னதுடன் வைத்தியப் பட்டம் பெற்றவரும், கவர்ன்மெண்டு இந்திய வைத்திய கவர்னிங் பாடி & ஸெண்டிரல் போர்டு மெம்பரும், கவர்ன்மெண்டு வைத்திய கலாசாலை & I. M. S. ஹாஸ்பிடல் பரீக்ஷாதிகாரியுமான

வைத்தியரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரியாருடைய



(Sastriar in Govt. Medical dress)

**மஹா பில்வாதி லேகியம்**

பித்தவாயு, கீல் பிடிப்பு, பித்த மயக்கம், பலஹீனம், அன்னத் துவேஷம், அஜீர்ணம், மலச் சிக்கல் இவைகளைக் கண்டிக்கும். 1 சேர் கொண்ட டப்பி 1-க்கு ரூபா 3. வி. பி. வேறு.

**ஆனந்த பற்பொடி**

குணம், ருசி, வாசனை இவைகளில் இது ஒன்றுதான் மார்க்கெட்டில் சிறந்தது. டப்பி 1-க்கு 0—2—9. ஒரு டஜன் கொண்ட பெட்டி 1-க்கு ரூபா 1—14—0. வி.பி.வேறு. எங்கும் கிடைக்கும்.

**ஆனந்த பற்பசை**

ஆனந்த பற்பொடியை பசை ரூபமாக செய்யப்பட்டிருக்கிறது. ட்யூப் 1க்கு 0-8-0 வி. பி. வேறு எங்கும் கிடைக்கும்.

கனம் சீப் ஜஸ்டிஸ் ஸர் M. வேங்கடசுப்பராவ், Kt., சென்னை ஹைகோர்ட்டு அவர்கள் எழுதுகிறார்:—

"நான் வைத்திய ஸித்தாச்ரமத்தைப் பார்வையிட்டேன். அது செய்து வரும் வேலைகளுக்கு எல்லா அபிவிருத்திகளையும் நான் கோருகிறேன். இவருடைய பிரயத்தினங்கள் இந்த பூர்வீகமான ஆயுர்வேதத்தை சாஸ்திரியமாக பயின்று அனுபவத்தற்குக் கொண்டுவரும் மார்க்கத்தில் ஆதரவுக்கும் அபிவிருத்திக்கும் தகுந்தவைகளே."

கனம் ராஜா of சிவகங்கா அவர்கள் எழுதுகிறார்:—

"வைத்தியரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்தரிகளை மிக்க சந்தோஷத்துடன் நான் பொது ஜனங்களுக்கு சிபார்சு செய்கிறேன். இவருடைய மருந்துகளை உபயோகிக்கும்படி ஸந்தர்ப்பம் நேர்ந்து அவைகளை உபயோகித்து அம்மருந்துகளால் நான் ஜெயமடைந்து இருக்கிறேன். வைத்தியமுறையில் ஒவ்வொரு ஸந்தர்ப்பங்களிலும் அவர் எனக்கு பரிபூர்ணமான திருப்தியைக் கொடுத்திருக்கிறார்."

சகல ஆயுர்வேத ஔஷதங்களும் கிடைக்கும். கேட்லாக் இனம்.

**வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரி,**

வைத்திய ஸித்தாச்ரமம், 39, பஜார்ரோட், மயிலாப்பூர், மதராஸ்.



**குமார சஞ்சீவினி**
ரிஜிஸ்டர்ட்
குழந்தைகளின்
**ஈரல்-குலை-ஜுரக்கட்டி**
வியாதிகளுக்கு
**நிகரற்ற குணமுடையது**
வைத்தியர். அண்ணாமலை முதலியார்
வைத்தியர் அண்ணாமலை தெரு, மயிலாப்பூர், சென்னை



DIAMONDS ESTD 1910 JEWELLERY

ஆர். ராமஸ்வாமி முதலியார்,
மிராசுதார், வானூர்
(தென்னாற்காடு ஜில்லா)

இத்துடன் ரூ. 1483-8-0-க்கு செக் அனுப்பியுள்ளேன்; பெற்றுக் கொள்ளவும். தாங்கள் சப்ளை செய்த வைரங்கள் எனக்குப்பரம திருப்தி அளித்திருக்கின்றன.

பாபாலால் & கம்பெனிக்கு,

**BAPALAL & Co**
216. China Bazaar. MADRAS.




பிரஞ்சிந்திய கவர்னர் சமீபத்தில் காரைக்கால் மின்சார சப்ளை கம்பெனிக்கு விஜயம் செய்தபோது எடுத்த படம்.

# இந்திய வர்த்தமானம்

—:[o]:—

**பட்டத்துறவு**

திவான்பகதூர் டி. ஏ. ராமலிங்கம் செட்டியார் காங்கிரஸ் சார்பில் சென்னை மாகாண சட்டசபைத் தேர்தலில் அபேக்ஷகராக நிற்க பார்லிமெண்டரி போர்டுக்கு மனுப் போட்டிருக்கிறார். அந்த போர்டார் அபேக்ஷகர்கள் பட்டதாரிகளாக விருக்கக்கூடாதென அறிவித்ததால் அந்தப் பட்டத்தைத் தாம் துறந்துவிடுவதாகவும் அது சம்பந்தமான சன்னதுகளையும் விருதுகளையும் திருப்பியனுப்புவதாகவும் ஒப்புக்கொண்டுவிட்டார். அதன்படியும் செய்துவிட்டார்.

* * * *

**விடுதலை பெற்றவருக்கு பந்தோபஸ்து**

வங்காள கவர்னர் போக்ராவுக்குச் சென்றதை முன்னிட்டு பந்தோபஸ்திலிருந்து விடுதலை செய்யப்பட்ட பல அறிந்த வாலிபர்கள் மீண்டும் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டனர். கவர்னர் அங்கே தங்கியிருக்கும் வரையில் வீட்டை விட்டு வெளியேறலாகாதென்று பலருக்கு நோட்டீஸ்கள் சாதரா செய்யப்பட்டுள்ளன.

* * * *

**செஞ்சட்டையினர் சட்ட ரீதியாக நடக்க வேண்டும்**

வடமேற்கு எல்லைப்புற மாகாண சட்ட சபையின் கடைசிக் கூட்டத்தில் கவர்னர் ஸர் ரால்ப் கிரிப்பித் செஞ்சட்டை இயக்கத்தைப்பற்றிக் குறிப்பிட்டார். வரப்போகும் தேர்தலில் செஞ்சட்டையினர் கலந்துகொள்வதை சர்க்கார் வரவேற்கின்றனர். ஆனால் தேர்தலில் அவர்கள் சட்ட ரீதியான முறையில் கலந்து கொள்ள வேண்டும். ஏனெனில் இந்நிபந்தனைக்குட்பட்டே இம்மாகாணத்தில் காங்கிரஸ் கட்சிக்கு இருந்துவரும் தடையை நிறுத்தி வைக்க சர்க்கார் ஒத்துக்கொண்டிருக்கின்றனர். சட்ட ரீதியாக நடக்கும் நிபந்தனைக்குட்பட்டு எவ்வளவு காலம் நடக்கிறார்களோ அவ்வளவு காலம் இக்கட்சியினருக்கும் சட்டப்படி இம்மாகாண ராஜிய வாழ்க்கையில் பங்கு பெற சகல உரிமைகளும் உண்டு.

அரசியல் திட்டத்தில் ஒத்துழையாமைக்கே இடமில்லை. ஒத்துழையாமை எந்த ரூபத்திலிருப்பினும் அது சர்க்காரை அறை கூவியழைப்பதற்கு ஒப்பாகக் கருதப்படும். இந்த அறைகூவலை சர்க்கார் ஏற்றுச் சமாளிப்பார்களென்பது நிச்சயம்.

* * * *

**"உலக யுத்தம் வெகு தூரத்திலில்லை"**

யுத்த நிறுத்த தினத்தை முன்னிட்டு சென்னை அடையாற்றில் பிரம்மஞான சங்கத்தார் கூட்டமொன்று நடைபெற்றது. அதில் சமீபத்தில் ஐரோப்பிய சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டுத் திரும்பிய டாக்டர் ஜி. எஸ். அருண்டேல் பின்வருமாறு குறிப்பிட்டார்:—

உலகிலுள்ள எல்லா நாடுகளிடையிலும் துவேஷம் பயம், சந்தேகம், கஷ்டம் முதலியவை மிகுந்து கிடக்கின்றன. இவை யெல்லாம் இருபது வருஷங்களுக்கு முன்பேற்பட்டதை விட பன்மடங்கு கோரமான யுத்தத்தில் நம்மை யிழுத்து விட்டு விடும்போல் காண்கிறது. இதே சமயத்தில் சமாதானத்திலும் ஜனங்களுக்கு ஆர்வம் மிகுந்திருக்கிறது. ஆடவரும் பெண்டிரும் உலகில் அமைதியே நிலவ வேண்டுமென்று ஆத்திரப்படுகிறார்கள். ஆனால் வெகு சீக்கிரத்தில் யுத்தமேற்படுவதற்கான சின்னங்களே இப்போது காணப்படுகின்றன. சென்ற ஐரோப்பிய மகா யுத்தத்தில் தங்கள் உயிரைத் தியாகம் செய்த வீரர்களைப்பற்றி நாம் இன்று நினைப்போமாக. இனி வாலிபர்கள் யுத்தத்தில் கலந்துகொள்ள நேராதிருக்க வேண்டுமென்பதே என்னுடைய பிரார்த்தனை.

* * * *

**சர்க்கரை வரி**

சர்க்கரை மீது விதிக்கப்படும் பாதுகாப்புவரி 1938-ம் வருஷம் பிப்ரவரிமாதத்தில் காலாவதியாகிறது. இத்தொழிலைப்பற்றி 1937-ம் வருஷ ஆரம்பத்தில் விசாரணை செய்ய வேண்டிய அவசியமும் நேர்க்

வெண் குஷ்டம்
பெருவியாதி

எவ்வளவு கடுமையானதாயினும், எவ்வளவு நாட்பட்டதாயினும் நாலே வாரத்தில் குணம். கவர்ந்தக்கு உத்தரவாதம்.

வியாங்களுக்கெழுதுக.

KAMAL\ WORKS (\. M.)
Pan h nta—Kengal India.

திருத்தமுக்கும் தர்மாவரம் சேலைகள்


D. R. புதிய மோஸ்தர்கள் சாம்பில் பாருங்கள்.

இனி மோஹினி, இந்திராணி, சுனந்தா பார்டர், ஒரு பூனு, ஒரு பெண்களுக் தலைப்பு புடவைகளையே உபயோகியுங்கள்.

உத்தியோகஸ்தர்களுக்கு மாதிரி புத்தகம் உசிதம்.

கைத்தறி பட்டு

D. R. Narayanaswamy & Sons, Darmavaram (Anantapur Dt


புத்த சித்த தினத்தன்று பம்பாயில், பம்பாய் கவர்னர் பிரார்த்தனைக்குச் சென்று பிறகு துருப்புகள் அணிவகுப்பையும் பார்வையிட்டார்.

திருக்கிறது. சர்க்கரை இறக்குமதி வரி முந்திய வருஷத்தைவிடச் சென்ற வருஷம் 57-லக்ஷம் ரூபாய் குறைந்துவிட்டது. இதற்காகப் பாதுகாப்பு வரிபோர்டொன்றையமைப்பது பற்றி சர்க்கார் யோசனை செய்துவருகிறார்கள்.

* * * *

பம்பாய் கலவரம்

பம்பாய் கலவரம் மத்தியில் அடங்கியிருந்தபோதிலும் சென்ற வாரம் மறுபடியும் கலவரமேற்பட்டுப் பலர் தாக்கப்பட்டனர். சிலர் இறந்துபோய்விட்டனர். போலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவும் நேரிட்டது. இப்பொழுது போலிஸார், ராணுவம் ஆகியோரது முயற்சிகளால் அமைதி நிலவிவருகிறது. தீபாவளியன்று வருஷாவருஷம் பல வர்ண விளக்குகளால் எங்கும் அலங்காரம் செய்யப்பட்டிருக்கும் பம்பாயில் இவ்வருஷம் ஒன்றுமேயில்லை வியாபாரம் மிகவும் தடைப்பட்டுப் போய்விட்டது. பம்பாய் கவர்னர் தம்பதிகள் உள் நாட்டு மெம்பருடன் சமீபத்தில் கலவரம் நடந்த பிரதேசங்களைப் பார்வையிட்டனர். பம்பாய் போலிஸ் கமிஷனர் நகர போலிஸ் சட்டப்படி நவம்பர் 15-ந் தேதி முதல் இன்னும் இரண்டு வாரத்திற்குக் கத்திகளையும், ஈட்டிகளையும், தடிகளையும், அம்பாக்கிசளையும், [illegible]களையும் நகரில் எந்தப் பொது இடத்திலும் தூக்கிச் செல்லக்கூடாதென்றும் சேர்த்து வைக்கக்கூடாதென்றும் உத்தரவிட்டிருக்கின்றார்.

* * * *

அப்துல்லா காந்தி மீண்டும் ஹிந்துவானார்

சமீபத்தில் இஸ்லாத்தைத் தழுவிய மகாத்மா காந்தியின் மூத்த புதல்வரான ஹரிலால் அப்துல்லா காந்தி மீண்டும் ஹிந்து மதத்தில் சேர்ந்துவிட்டார். அவரை மீண்டும் ஹிந்துமதத்திற்கு மாற்றும் சடங்கு பம்பாய் ஆர்ய சமாஜத்தில் நடைபெற்றது.

* * * *

பிராரில் ஹைதராபாத் நிஜாமுக்கு ஆதிக்கம்

இந்திய சர்க்காருக்கும் நிஜாம் மன்னருக்கும் பிராரில் ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தம் வெளியிடப்பட்டிருக்கிறது. இவ்வொப்பந்தப்படி ஹைதராபாத் மன்னர் "பிரார் நிஜாம்" என்றும் அழைக்கப்படுவார். அவரது பட்டத்து இளவரசருக்கு "பிரார் இளவரசர்" என்ற பட்டமிருக்கும். மத்திய மாகாணத்திற்கும் பிராருக்கும் கவர்னரை நியமிக்கு முன்பு நிஜாம் கலந்து கொள்ளப்படுவார். பிராரில் பிரிட்டிஷ் கொடியோடு நிஜாம் கொடியும் பறக்கும். அங்கே தர்பார்களை நடத்தவும் அவருக்கு உரிமையுண்டு.

* * * *

ஹரிஜனங்களுக்கு ஆலயப்பிரவேச உரிமை வழங்கப்பட்டது

தமது இருபத்தைந்தாவது பிறந்தநாள் கொண்டாட்டத்தையொட்டித் திருவிதாங்கூர் மகாராஜா வெளியிட்டுள்ள பிரகடனத்தின் மூலம், சமஸ்தான நிர்வாகத்திலுள்ள எல்லா ஆலயங்களிலும் ஹிந்துக்களனைவரும் போய் வழிபாடு செய்யலாமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஸ்ரீமத் ராமானுஜர் காலத்திற்குப்பின் இதுவே ஹிந்து சமூகத்தில் மிகப் பெரிய சீர்திருத்தமாகும். ஆலயங்களில் பணியாற்றச், சகாயம் புரியும் பிரமுகர்களைக் கலந்துகொண்டே இவ்வறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. இச்சீர்திருத்தம் இந்தியா முழுமையிலும் விசேஷ விளைவுகளை உண்டு பண்ணுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

மகாராஜாவின் பிரகடனம் வருமாறு:—நமது மதம் இறைவன் விடும் வழிப்பட்டது; சமரச உணர்ச்சி கொண்டது மத வழக்கங்கள் காலத்திற்கேற்றுப்போல் மாறி வந்திருக்கின்றன. ஹிந்து மதத்தின் பெருந்தன்மையை நாம் உணர்கிருக்கிறோம். பிறப்பு அல்லது ஜாதி காரணமாக எந்த ஹிந்துப் பிரஜைக்கும் மத வழிபாட்டில் தடையிருக்கக் கூடாதென்பது நம்முடைய அபிப்பிராயம். உற்சவங்கள், பூஜைகள் முதலியவை சம்பந்தமாக அவ்வப்போது நாம் செய்யும் விதிகளுக்குட்பட்டு சமஸ்தான நிர்வாகத்தின் கீழுள்ள ஹிந்து ஆலயங்களில் புகுந்து வழிபட எந்த ஹிந்துவுக்கும் ஜாதி, பிறப்பு காரணமாகத் தடையிருத்தலாகாதென்று நாம் உத்தரவிடுகிறோம்"

* * * *

ஜவஹர் கூட்டத்தைத் தடுக்க சூழ்ச்சி

பண்டித ஜவஹர்லால்நேரு சென்றவாரம் தமது ஆந்திர ஜில்லாக்கள் சுற்றுப் பிரயாணத்தை முடித்துக்கொண்டார். பொப்பிலியில் அவரது கூட்டத்தைத் தடுக்கச் சூழ்ச்சிகள் செய்யப்பட்டன.

பொப்பிலி முழுவதும் ராஜாவுக்குச் சொந்தமாகையால் பண்டித ஜவஹர்லால்நேரு அங்கு வந்து பிரசங்கம் செய்ய ஸ்தலம் கிடைக்கவில்லை. பிறகு இதற்கென்று ஒரு காலி மனை வாங்கப்பட்டது. ஆனால் இந்த இடத்திற்குச் செல்லும்பாதைகளெல்லாம் சமஸ்தானத்திற்குச் சொந்தமாகையால் வேலி போட்டு அடைக்கப்பட்டுவிட்டன. முன்னேற்பாட்டின்படி பண்டித ஜவஹர்லால் நேரு பொப்பிலிக்கு வந்ததும் பிரபல காங்கிரஸ்காரர் ஸ்ரீமான் ஜி. வெங்கடாசாரியின் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவரைத் தரிசிக்கவும் அவரது பிரசங்கத்தைக் கேட்கவும் திரளான ஜனங்கள் தெருவில் கூடியிருந்ததால் பண்டிதர் அந்த வீட்டு வாசற்படியிலிருந்தே பிரசங்கம் செய்தார்.

கூட்டம் நடக்குமிடத்திற்கருகில் பல யானைகளும் ஆயுதந் தாங்கிய சிப்பாய்களும் தயாராகக் காத்திருந்தனர். போலிஸ் டெபுடி சூபரின்டெண்டு பார்வதிபூர் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் முதலியவர்கள் போலீஸ் படையுடன் பண்டித ஜவஹரைலால் விஜயநகரம் டிவிஷன் முழுதும் தொடர்ந்து வந்தனர்.

பண்டித நேருவின் பிரசங்கம் முடிந்து ஸ்ரீமான் சாம்பமூர்த்தி அதைமொழிபெயர்க்க எழுந்ததும் சிலர் கூட்டத்திற்கு வந்து பலமாகத் தம்பட்ட மடிக்க வாரம்பித்தனர். பண்டித நேரு அவர்களிருந்த விடத்திற்குப் பார்த்து தம்பட்டமடிப்பதை நிறுத்துமாறு சொன்னார். அவர்கள் உடனே நிறுத்திவிட்டனர். ஆனால் கில்லேதார் யானைகளையும் சிப்பாய்களையும் கூட்டத்திற்குள் கொண்டுவந்து விட்டார் கூட்டத்தில் மிகுந்த பீதி யேற்பட்டுக் கலவரம் நேர்ந்துவிடும்போலிருந்தது. ஆனால் போலிஸ் டெப்டி சூபரின்டெண்டும் சர்க்கிள் இன்ஸ்பெக்டரும் போலீஸ் படையுடன் வந்து கலவரத்தை யடக்கி துரிதமாக அமைதியை நிலைநிறுத்தினார்கள்

பண்டித ஜவஹர்லால் பொப்பிலியிலிருந்து புறப்பட்டுச் சென்றபின் அவரால விடப்பட்டு போன ஏராளமான மாலைகளைத் தடைப்பாங்கள் மீது வைத்து ஊர்வலமாகக் கொண்டு சென்றனர்.


ஸ்திரீகளின் வியாதிகளைப் போக்க "லோத்ரா"வை விடச் சிறந்த உண்மை நிவாரணி வேறில்லை. இது மாதவிடாயை ஒழுங்குப்படி கிரமமாக வரச் செய்கிறது; அளவுடன் மாதவிடாயை வெளிப்படுத்துகிறது; அதிகமாகப் போவதைத் தடுக்கிறது. மாதவிடாய்க் காலத்தில் ஏற்படும நோயையும், வயிற்று நோ, முதுகு நோய்களையும் நீக்கிறது; இவை எல்லாவற்றுடன் சாதாரணமாக தேக சுகத்தையும் பலவீனத்தையும் இதைத் தொடு உயர்ந்த பலனளிக்க வல்ல 'டானிக்' மருந்தாகவுமிருக்கிறது.


லோத்ரா

மாதவிடாய் கோளாறுகளுக்குரிய சிறந்த டானிக்


ஒவ்வொரு வீட்டிலும் இது இருக்க வேண்டியது

கேஸரி குடீரம்

எழும்பூர் :: :: மதராஸ்



"ஸோனேரா ஸன்ஸார்" என்ற தேவகி போஸ் படத்தில் நடிக்கும் மிஸ்டர் குல் ஹமீத் பி. ஏ.



ஆர். கே. ஓ. ரேடியோ கம்பெனியின் நடிகர் மிஸ்டர் ப்ரூஸ் காபட்



"ப்ரேம்பந்தன்" என்ற ஹிந்தி பேசும் படத்திலிருந்து ஒரு காட்சி. மிஸ். சிதாரா, மிஸஸ் புட்லி ஆசிரியர் டி. மானக் முதலியோர் முக்கிய நடிகர்கள்.





அலெக்ஸாண்ட்ரா பார்க்கில் டெலிவிஷன் காமிரா முன்பு மிஸ்டர் ஆர்ச்சி காம்ஸ்டன் என்ற பிரபல "கால்ப்" விளையாட்டுக்காரரும் மிஸஸ் கேஜ் என்பவரும் கோல்ப் ஆடினர். அது டெலிவிஷன் யந்திரத்தின் மூலம் அனுப்பப்பட்டது.


(வலது பக்கம் மேல் படம்) அலெக்ஸாண்ட்ரா டெலிவிஷன் ஸ்டேஷன்.

(கீழ்படம்) டெலிவிஷன் ஸர்விஸ் மூலம் ஒரு ஸினிமாப் படத்தை இருவர் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

# லண்டன் டெலி
# ஸர்விஸ்










லண்டன் ஒலிம்பியாவில் சமீபத்தில் ரேடியோ பொருட் காட்சி யொன்று நடை பெற்றது. அதில் டெலிவிஷன் யந்திரங்கள் முக்கிய ஸ்தானம் பெற்றன. ஒரு யந்திரத் தில் மோட்டர் ஓட்டப் பந்தயத்தை இருவர் பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

(இடது பக்கம் கீழ் படம்) டெலிவிஷன் "ரிஸீவிங் வால்வ்." இதன் விலை 25 பவுனாகிறது.

(கீழ் படம்) ஒரு விவாக உத்ஸவம் டெலிவிஷன் ஸர்விஸ் மூலம் அனுப்பப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்படும் காட்சி.

## டெலிவிஷன்
## ர்விஸ்







சமீபத்தில் இந்தியாவுக்கு வந்து சேர்ந்த பிரிட்டிஷ் ' துருப்புகள். பம்பாய் துறைமுகத்தில் எடுத்த படம்.



ஹாம்பர்க் நகரின் விமானத் தோற்றம.





மன்னர் பிரான் பார்லிமெண்டைத் திறந்துவைக்கச் சென்ற காட்சி. வலது பக்கத்தில் மன்னர் பிரான் லார்டு சபைக்கு பிரவேசிப்பதைக் காணலாம்.

# பிரபஞ்ச வர்த்தமானம்

—:[ 0 ]:—

மற்ற பக்கங்களில்

—:—


| | |
|---|---|
| கிருஷ்ண தேவராயர் | 2 |
| பம்பாயில் டெலிவிஷன் ஸர்வீஸ் | 3 |
| தானே கிடைத்த தனலக்ஷ்மி | 4 |
| ஸங்கீதப்பகுதி | 6 |
| விநோதக்கதை | 9 |
| உடனே பதில் | 10 |
| கண்ணோட்டம்- பிரமுகர்கள் | 11 |
| தையல் வேலை | 12 |
| தாயைக்கொண்ட தநயன் | 13 |
| ஸவநாகரிகம் | 15 |
| இந்தியவர்த்தமானம் | 17 |
| அதிசயம் ஆனால் உண்மை | 25 |
| மெட்ராஸ் காலிங் (சிறுவர் பகுதி) | 28 |
| நாட்டு நடப்பு-சித்திரக் கண்ணாடி | 30 |
| ராதா (புதிய தொடர்கதை) | 32 |
| பெண்ணின் பங்கு முன்னேற்ற முயற்சிகள் | 35 |
| கைவிரல்களில் கிரகங்களின் சம்பந்தம் (ரேகைசாஸ்திரம்) | 37 |


**பரிபூர்ண வெற்றி கிடைக்கும் வரை யுத்தம்**

சென்ற வாரம் காமன்ஸ் சபையில் ஸர் தாமஸ் இன்ஸ்கிப் பிரிட்டனின் தற்காப்புப் பிரச்னைகளைப்பற்றிப் பேசினர். அவர் கூறியதாவது:—தற்காப்புப் படைகளில் மற்ற எதையும்விட முக்கியமாக விளங்குவது கடற்படைதான். எனினும் அப்படையும் ஆகாயப் படையும் ஒத்துழைக்க வேண்டியது அவசியமாகும். அந்நிய விமானங்கள் படையெடுக்கையில் அவற்றை எதிர்க்க நமக்கு வசதியிருக்க வேண்டுமென்பதே இப்பொழுது நமது ஆகாயப் படையைப் பலப்படுத்தி வருவதன் நோக்கம். நம்மீது அந்நியரெவரும் படையெடுக்கத் துணியாத முறையில் அவ்வளவு தூரம் நமது படையை விஸ்தரிக்க எண்ணியுள்ளோம். ராணுவத்திற்கு ஆள் சேர்க்கும் வேலை துரிதமாக நடைபெறவில்லையாயினும் கடற்படை, ஆகாயப் படை இவற்றில் ஆள் பலம் திருப்திகரமாகப் பெருகி வருகிறது. விமானப் படையில 20,000 விமானிப் பதவிகள் காலியாகவிருக்கின்றன. ஆனால் இதற்கு 60,000 பேர் மனுச் செய்து கொண்டிருக்கின்றனர். பிரிட்டன் இன்னொரு யுத்தத்தில் கலந்துகொள்ள நேருமாயின் தனக்குபயமேதேற்படும்வரை அந்த யுத்தத்திலிருந்து விலகிக்கொள்ளவதற்கில்லை. நமக்குப் பரிபூரண வெற்றியேற்படும் வரை நமது பலம் முழுவதையும் பிரயோகித்துத் தீவிர முயற்சி செய்ய வேண்டுமென்பதே அதன் பொருள்.

இதே சம்பந்தமாக லார்டு மேயர் விருந்தில் மிஸ்டர் பால்டுவின் பேசுகையில் ஐரோப்பிய நாடுகள் தங்கள் யுத்த தளவாடங்களை மேன்மேலும் பெருக்கி வருவதைப் போன்ற முட்டாள்தனம் எதுவுமில்லை யென்றும், அரசாங்கங்கள் தங்கள் ஜனங்களின் நிலையை மறந்து ஆயுதப் பெருக்கிலேயே கவனம் செலுத்தி வருமாயின் அவர்களிடை அதிருப்தியும் சோர்வும் அதிகமாகிவிடுமென்றும், மேன்மேலும் ஆயுதங்களைப் பெருக்குவதால் யுத்தம் துவங்க அனுகூலமான நிலை ஏற்படுகிறதென்றும், யுத்தத்தால் ஜனங்களின் நிலை வரவரக் கேவலமாகி அராஜகமும் குழப்பமும் விளையுமென்பது ஐரோப்பாவிலுள்ள அனைவருக்கும் தெரியுமென்றும், அந்நிலையில் ஒற்றுமைப்பட்டு ஐரோப்பாவைக் காப்பதே தங்களது கடமையென்றும் கூறினர்.

* * * *

**ரஷ்யாவில் பாஸிஸ்டு கட்சி ஏற்படுத்தச் சதி**

ரஷ்யாவில் பாஸிஸ்டு கட்சி ஏற்படுத்துவதற்கான சதியொன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அந்நாட்டின் பல்வேறு பாகங்களிலுமுள்ள பலர் அதில் சம்பந்தப்பட்டிருக்கின்றனராம். ஜெர்மனியர், ஆஸ்திரியர், ஸ்விடன், போலந்து இந்நாடுகளைச் சேர்ந்தவர்கள் உள்பட ஏராளமான அந்நியர் கைது செய்யப்பட்டிருப்பதாக உத்தியோக முறையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. சர்க்காருக்கு விரோதமான பிரசாரம் முதலிய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததாக அவர்கள்மீது குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது.

* * * *


30வருஷ பிரசித்தி பெற்றது

**வாயுமுக்தா**

வலி பைத்தியம் இவற்றிற்குச் சிறந்த நிவாரணி

ஆயிரக்கணக்கான ஸ்திரீகள்-பலவீனர்களும். கர்ப்பிணிகளும்—பிதற்றல், அழுகுரல் கிளப்பல், அடித்துக்கொள்ளுதல், நரம்பு பலவீனம், பித்தமயக்கம், வலி, இவற்றால் கஷ்டப்படுகிறார்கள். இவ்வளவையும் இம் மருந்து 24 மணி நேரத்தில் நிறுத்திவிடுகிறது. பிரக்ஞையின்மை, இழுப்பு 10 நிமிஷத்தில் மறைகின்றன.


10 நாள் மருந்து ரு. 2.
30 நாளுக்கு ,, ரு. 5.

தபால் செலவு தனி. ஆங்கிலத்திலேயே கடிதமெழுதுக.

C. L NAMAWALLA
Palace Road, Baroda



'EVEREST'
COPYING & LEAD PENCILS
'EVEREST'
Carbon Papers are the best in the Market.
Sole Distributors in INDIA
P. R. NATHAM & Co., High Class Stationers.
Phone 2305 China Bazaar Road, MADRAS.



சென்னை சேப்பாக்கத்தில் ராஜதானிக் கலாசாலையின் கிரிக்கெட் விளையாடுமிடத்தை ஜஸ்டிஸ் கே. பி. லக்ஷ்மணராவ் திறந்து வைத்தார்.

### "தேர்தலில் அதிகாரிகள் தலையிடமாட்டார்கள்"

காமன்ஸ் சபையில், தேர்தலில் அதிகாரிகள் தலையிட்டைப்பற்றிப் பிரஸ்தாபித்துக் கேள்வி கேட்டதற்கு உதவி இந்தியா மந்திரியான மிஸ்டர் ஆர். ஏ. பட்லர் பின் வருமாறு பதிலளித்தார்:—

"சர்க்காருக்கோ, இந்தியா மந்திரியான லார்டு ஸெட்லந்துக்கோ உத்தியோக முறையில் இந்தியத் தேர்தல்களில் தலையிட வேண்டுமென்ற விருப்பம் சிறிதும் கிடையாது. இந்திய அரசியல் சட்டம் நிறைவேறுகையில், அத்தேர்தல்கள் இனிது நடந்தேறுவதற்கான வசதிகளனைத்தையும் அளிப்பதாக சர்க்கார் தெரிவித்தனர். இப்பொழுதும் அவர்கள் அதே மனோபாவத்துடன் தானிருந்து வருகின்றனர்.

ராஜீய இயக்கங்களில் கலந்து கொள்ளக் கூடாதென சர்க்கார் ஊழியர்களது நடைமுறை விதிகளில் தெளிவாக வற்புறுத்தப்பட்டிருக்கிறது. இவ் விதிகளின்படி அவர்கள் நடந்துகொள்ளவேண்டுமென்பதே சர்க்கார் கருத்து. இவ்விஷயமாக சிறிதும் சந்தேகத்துக்கு இடமில்லாதிருக்கும் பொருட்டு, அவ்விதிகளை சர்க்கார் ஊழியர்களுக்கு எடுத்துக்காட்ட எல்லா மாகாணங்களிலும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது

* * * *

### இத்தாலியின் அந்திக்க ஆதரவு.

ஆஸ்திரியா, ஹங்கேரி, இத்தாலி இம் மூன்று நாடுகளின் பிரதிநிதிகளடங்கிய மகாநாடொன்று வியன்னாவில் நடைபெற்றது. அதனிறுதியில் ஆயுத முஸ்தீப்புச் செய்து கொள்ள ஆஸ்திரியாவுக்கும் ஹங்கேரிக்கும் உரிமையுண்டெனப் பிரகடனம் செய்யும் முறையில் ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது. அவ்வறிக்கையில் மேலும் பின் வருமாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது:— "அபிஸீனியா இத்தாலியின் அங்கீகாரத்திற்குட்பட்டதென ஆஸ்திரியாவும் ஹங்கேரியும் அங்கீகரிக்கின்றன. அபிஸீனியாவிலுள்ள பொருளாதார வசதிகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகளில் இவ்விரு நாடுகளும் கலந்துகொள்ள விரும்புகின்றன. டான்யூப் பிரச்னை சம்பந்தமாக இத்தாலியும் ஜெர்மனியும் ஒத்துழைப்பதென முடிவு செய்திருப்பது கண்டு தாங்கள் திருப்தியடைந்திருப்பதாக ஆஸ்திரியா ஹங்கேரிப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.'

* * * *



சினிமாத் தொழில் அபிவிருத்திக்காக உழைத்து வந்த ஸ்ரீமான் எஸ். ரங்கசாமி அய்யங்கார் சென்ற 14-ந் தேதி சென்னையில் காலமானார்.

### பிரேஞ்சு பார்லிமெண்டில் அடிதடி.

பிரெஞ்சுப் பிரதிநிதிகள் சபைக் கூட்டத்தில் உள்நாட்டு மந்திரியான மிஸ்டர் ஸாலங்ரோ முன்னர் ராணுவத்திலிருந்தபொழுது எவ்வாறு நடந்துகொண்டாரென்பதைப் பற்றி விவாதம் நடந்தபொழுது அடிதடி ஏற்பட்டு விவாதம் முடிவாகாமலேயே சபை கலைந்தது.

மகா யுத்தத்தின் பொழுது அவர் பயங்கொள்ளித்தனமாக நடந்துகொண்டதாக சமீபத்தில் சில பத்திரிகைகள் வரைந்திருந்தன. இதன் பேரில் சர்க்காரால் நியமிக்கப்பட்ட ஒரு கமிஷன் இதைக் குறித்து விசாரித்து இக்குற்றச் சாட்டுக்குச் சிறிதும் ஆதாரமில்லையென அறிவித்தது.

இன்றைய விவாதத்தில் யுத்தத்துக்கு முன் மிஸ்டர் ஸாலங்ரோ ஒரு புரட்சிக்காரராகவும், ராணுவ விரோதியாகவும் இருந்து வந்ததாக மிஸ்டர் பெக்கார்ட் கூறினார். இதன் பேரில் சபையில் சச்சரவு வலுத்து, அடிதடி நடந்தது. இதில் சுமார் ஐம்பது அங்கத்தினர்கள் கலந்துகொண்டனர்

* * * *

### நடு நிலைமைப் பிரச்னை

ஸ்பானிய நடுநிலைமைக் கமிட்டியின் கூட்டம் லண்டனில் நடைபெற்றது. அதன் முடிவில் ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது. அதில் நடு நிலைமை ஒப்பந்தத்தை மீறு திருக்க ஸ்பெயினில் ஒரு மேற்பார்வை முறையை அமுலுக்குக் கொண்டு வருவதற்கான திட்டத்தை அக்கமிட்டி அங்கீகரித்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

* * * *

### ஸ்டாலினைக் கோல்லச் சதி செய்தவருக்கு மரண தண்டனை

மிஸ்டர் ஸ்டாலினைக் கொல்லச் சதி செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட சோவியத் ரகசியப் போலீஸ் அதிகாரிகளில் ஒருவரான மிஸ்டர் ஸான்ஸ்கோஸ்கி சுட்டுக்கொல்லப்பட்டுவிட்டதாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

* * * *

### ஹிட்லர் வேடிகுண்டு

வெர்ஸேல்ஸ் உடன்படிக்கையில் சில ஜெர்மன் நதிகளை மற்ற நாடுகள் உபயோகித்துக் கொள்ளுவதுபற்றி உள்ள பிரிவுகளை இனித் தாம் மதிக்கப்போவதில்லையென ஹெர் ஹிட்லர் ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார். அவ்வுடன்படிக்கையின் முக்கியமான பிரிவுகளில் பலவற்றை அவர் ஏற்கனவே மீறிவிட்டார். எஞ்சியுள்ள ஒரு சில பிரிவுகளும் இனி ஜெர்மனியைக் கட்டுப்படுத்தாதென்பதே அவர் விடுத்த அறிக்கையின் பொருள்.

* * * *


## ஸ்வர்ணப்ரக சிலாஜதுவடி

(A Renowned Specific for Diabetes)

இது நீர் வியாதிக்கு நிகரற்ற ஔஷதம்.

இதில் தங்கம், சுத புடாப்ரகம், கோமூத்திர சிலாஜது முதலிய சிறந்த திரவியங்களைச் சேர்த்து ஆயுர்வேத முறைப்படிச் சித்தப்படுத்தியது. இதை உபயோகிக்கத்துடங்கிய முதல் வாரத்திலேயே குணமடைவதைக் காணலாம்.

ஒரு மாதம் உபயோகிப்பதால் நீரில் உள்ள சர்க்கரை முதலிய கெடுதிகள் தொலையும். 3 மாதம் உட்கொண்டுவிட்டால் இக்கொடிய நோய் அறவே ஒழியும். பல நற்சாக்ஷிப்பத்திரங்களிருக்கின்றன. பத்தியமில்லை.

ஒரு மாதத்திற்குத் தேவையான 60 மாத்திரைகளடங்கிய புட்டியின் விலை தபாற் செலவு உள்பட ரூபா 10 தான்.

ஆயுர்வேதபூஷண Pandit K. சுப்ரமணிய சாஸ்திரிகள் A. K. A. C

18, கவவ செட்டித் தெரு, சிந்தாதரிப்பேட்டை, மதராஸ்.

# அதிசயம் ஆனால் உண்மை




1 போர்ச்சுகல் தேசத்தில் வீடுகளுக்கு முன் பக்கத்தைக் கட்டுவதற்குச் சர்க்கார் அநுமதி வேண்டும். இதனால் முன் பக்கம் மட்டும் கட்டப்படாத பல வீடுகளை அங்கு காணலாம்.

2 கௌஹாத்தி (அஸ்ஸாம்)யில் இருவர் சண்டையிட்டுக்கொண்டிருந்தனர். திடீரென ஒரு மின்னல் மின்னியபோது இவர்கள் தாக்கப்பட்டு அதனால் ஊமையாக்கப்பட்டனர்.

3 1665-ம் வருஷத்தில் இங்கிலாந்தில் பிளேக் அதிகமாயிருந்தபோது சிறுவர்களும் சிகரெட், சுருட்டு முதலியவற்றை உபயோகிக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர். அவ்விதம் செய்தால் பிளேக் நோயைத் தடுத்துக்கொள்ள முடியுமாம்.

4 மெக்ஸிகோவில் மோட்டார்களைவிடக் குதிரை வண்டிகள் அதிகமாக விருக்கின்றன. அங்கு வெய்யிலுக்கும் மழைக்கும் குதிரைகளுக்கும் பாதுகாப்பு அமைக்கப்பட்டிருக்கிறது.

## வெற்றி கிட்டியது

என மிஸ்டர்..........22-6-36உ பம்பாயிலிருந்து எழுதுகிருர்.

"தங்கள் "திபேத் மூலிகை" யால் தான் நான் மெட்ரிக் பரீக்ஷையில் தேறினேன்."

"திபேத் மூலிகை"யால் கீழ்க் கண்டவை சித்தியாகின்றன; லாமா யோகியின் வரப்பிரசாதம்.



வசீகரன். ஆண் பெண் இரு பாலருக்கும் இடையில் துன்பமயமான காதலை உடனே விளைவிக்கும். இதை அணிபவர் அதன் ஆச்சரிய சக்தியை விரைவில் அறிவர். விலை ரூபா 3-8-0

2. வியாபாரமும், தொழிலும்:— நிச்சயமான தொழில பிவிருத்தியும், இலாபமும்சித்திக்கும். விலைரூ. 3-8-0

3. வியாஜ்யங்கள்:—இதன் சக்தியால் நம்பமுடியாத எவ்விதவியாஜ்யங்களும் ஜெயமாகும். விலை ரூ. 3-8-0

4. வியாதிகள்:— முடியாதெனக் கைவிடப்பட்ட சகலவித கொடிய ரோகங்களும் அடியோடு நீங்கும். விலை ரூபா 3-8-0 5. உத்தியோகம்:—வேலையில்லாத் திண்டாட்டத்தில் அவதிப்படும் இளைஞருக்கு அவரவர் ஸ்திதிக்குத் தகுந்தபடி உத்தியோகம் கிடைக்கும். சம்பள உயர்வும் உத்தியோக மேன்மையும் நிச்சயம். விலை ரூ. 3-8-0 6 பரீக்ஷைகள்:- எவ்விதப் பரீக்ஷைகளிலும் நிச்சயமாய்த் தேறலாம். விலை ரூபா 3-8-0 7. சத்ருக்களை ஜெயித்தல்:—எவ்வளவு அபாயகரமான விரோதிகளும் இதை அணிபவர் முன், முழந்தாளிட்டுப் பணிவர். விலை ரூபா 3-8-0 8. கிரஹ தோஷம்:-எல்லாவிதமான கிரஹ தோஷங்களும் சாந்தியாகும். விலை ரூபா 3-8-0 9. ஆரோக்யமும், செல்வமும்:—எளிதில் சித்திக்கும். விலை ரூ. 3-8-0

அறிவிப்பு:—இந்த சாஸ்திரங்களில் நம்பிக்கை உள்ளவர்கள் மாத்திரம் தங்கள் நோக்கம் இன்னதென்பதைக் குறித்து எழுதவும். ஒவ்வொரு நோக்கத்துக்கும் தனிப்பட்ட மூலிகை அவசியம். ஒரு மூலிகையின் விலை ரூபா 3-8-0. தபால் சார்ஜு வேறு. ஒரே தடவையில் 3 மூலிகைகள் வாங்கினால் தபால் சார்ஜ் உள்பட ரூ. 9-6-0.

**BIJOYA LODGE, (S.M.W.)**
P. O SALKIA HOWRAH



## கெற்ப சஞ்சீவி எண்ணெ

ஸ்திரீகளுக்கு மாதாந்தரத்தில் வரும் பொறுக்கமுடியாத வயிற்று வலியை அந்த க்ஷணமே நிறுத்தும். சூதக க்ஷயம், சூதக சூலை, சூதக ஜுரம், சூதக வாய்வு, சூதக கட்டு, சூதகச் சிக்கல், சூதகத் திரக்ஷி, சூதகக் கட்டினால் உண்டாகும் தலைவலி, உடம்புவலி, கைகால் பொருத்துகள் உளைவு, மேலெல்லாம் குத்து, குடைச்சல், உடம்பு ஸ்தூலித்துப் போதல், வயிர் பெருத்தல், காந்தல், எழுந்திருக்க முடியாமை, திகைப்பு, மூச்சு, மயக்கம், பசியின்மை, சாப்பாட்டில் வெறுப்பு, ஒருசெம்பு ஜலங்கூட தூக்கமுடியாத பலஹீனம், சூதக ஜன்னி முதலிய வியாதிகளையெல்லாம் தீர்த்து கெற்பப்பை சுத்திகரிக்கப்பட்டு, கெற்ப உற்பத்தியை உண்டுபண்ணும். 6-வித மலடு தீரும். கெற்பம் தரிக்கவிடாது பண்ணும் கிருமிகளைக் கூட்டுடன் வெளியிலகற்றிவிடும். திடகாத்திரமும், பூரண ஆயுளுமுள்ள குழந்தை தரிக்கும்.

1 நபருக்கு 3 புட்டி வேண்டும்.

1 புட்டி ரூ. 2. 3-புட்டி ரூ. 5. செலவு வேறு

குணம் இல்லாவிடில் ரூபா 5 வாபீஸ்

பழனி வைத்திய ஆசிரியர்

**ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,**

சித்த வைத்திய சாலை,

146, புரசவாக்கம் ஹைரோட், சென்னை.

தலைமை ஆபீஸ், பழனி



## "குஜராத்சமாச்சார்" (தினப் பதிப்பு) "பிரஜாபந்து" (வாரப் பதிப்பு)

[1898-ல் ஸ்தாபிக்கப்பட்டவை]

குஜராத்தில் பிராபல்யம் வாய்ந்தவை. ஆமதாபாத்திலிருந்து பிரசுரிக்கப்படுபவை.

குஜராத்தில் உங்கள் வியாபாரம் பெருக வேண்டுமானால்
இப்பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்யுங்கள்.
ஆங்கிலத்திலேயே கடிதங்கள் எழுதவேண்டும்.

Manager, **Gujarat Samachar & Praja Bhandhu**
AHMEDABAD.






## கே. ஏ. ஸமாஜம் ஆஸ்பத்திரி.

ஷோரனூர் (P.O.) S. I. RY

ஸ்தாபிதம்—1916.

சிறந்த ஆரோக்ய ஸ்தலம்.
பாரத நதிக்கரையில் வனப்பு மிகுந்த காகஷிகளுக்கு மத்தியில்

| நம்பிக்கை வாய்ந்த ஆயுர்வேத ஸ்தாபனம் | எல்லாவித ஆயுர்வேத மருந்துகளையும் தயாரிப்பவர்கள் |
| --- | --- |

இந்த சமாஜம் வைத்தியசாலை, கொச்சி சமஸ்தானத்தில் பட்டசெருதுருத்தியிலுள்ளது. ஆகையினால் எக்ஸைசு நியமத்துக்கு விரோதமான உப்பு புகையிலை வகையரா தீர்வையுள்ள சாமான்களை பிரிட்டிஷ் இலாகாவிலிருந்து வைத்திய சாலைக்குள் கொண்டுவருவது நியமத்துக்கு விரோதமாகும்.

கொச்சி கவர்ன்மெண்டாரின் சகாயமும் மேற்பார்வையுமுண்டு, பொதுஜன உதவியால் நடத்தப்படுவது. கேரளத்திலுள்ள பிரபல வைத்தியர்கள் டைரக்டர்களின் போர்டிலிருக்கின்றனர்.

புகழ்பெற்ற பிரம்மஸ்ரீ வைத்யரத்ன இ. டி. நாராயணன் மூஸ் அவர்கள், கேரள அஷ்டவைத்யர், கொச்சி சமஸ்தான வைத்யர், பிரதம வைத்யர்.

இடவசதிகள் அளிக்கப்படும். தாரா, நாஸ்யம், சிரோவஸ்தி, பிழிஞல், நவாகழி, வஸ்தி முதலிய மலையாள ஆயுர்வேத முறையில், நமையான மேற்பார்வையில் வைத்யம் செய்யப்படும். தங்கும் செலவு வியாதியஸ்தர்களது.

மற்ற விவரங்களுக்கு, பதிலுக்கு ஸ்டாம்புடன் மானேஜருக்கு எழுதவும்.



## ரூ. 100 இனும்

(மாந்திரீக மோதிரம்)




காதல் விஷயங்களில் வெற்றியைத் தரும். பரீக்ஷையில் தேர்ச்சி உண்டாகும், உத்தியோகம், புத்திர பாக்கியம், செல்வம் முதலியவைகளைத் தரும். வியாஜ்ஜியங்களில் வெற்றி, வியாதிகள் நீங்கும். அதிர்ஷ்டம் உண்டாகும். இதை வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். விலை ரூ. 2.

BENGAL MESMERISM HOUSE,
(S. M.)Panchpota, BENGAL



## ரூ. 500 இனும்!

திமிர் குஷ்டமும்,
வெண்குஷ்டமும்.

உலகக் கியாதி வாய்ந்த எனது மருந்துகளை 15 தினங்களுக்கு உபயோகித்தால் எல்லாவிதமான திமிர் குஷ்டமும், வெண்குஷ்டமும் நிரந்தரமாக நிவர்த்தியாகிவிடும். பற்பல டாக்டர்கள், கவிராஜர்கள், ஹகீம்களும் கைவிட்டதானல்கூட பரவாயில்லை. எனது அற்புத மருந்துகளை உபயோகியுங்கள். பலனில்லை என நிரூபிப்பவருக்கு ரூ. 500 இனும். 7 நாள் மருந்து ரூ. 2—8; 15 நாள் மருந்து ரூ. 4. தபால் செலவு தனி

SRI SWAMI & Co,
(34) Panchpota, Bengal.



உயர்ந்த
வைரங்கள்

**T. R.**

ஜோஷி & சன்ஸ்,

**Diamond Merchants**

38, எகாம்பரேசுவரர் அக்ரஹாரம்
பி. டி. மதராஸ்.

## தாயைக் கொண்ட தனயன்

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

ப்பலாம் என்று வந்தேன்'' என்றுன்

"அய்யோ! அய்யோ! ரமணி ரமணி! இதோ உன் கதி!,' என்று கூறிக் கொண்டு புலம்பினுன் ராமசுப்பு.

தனது யஜமானனுக்குச் சட்டெனப் பயித்தியம் பிடித்து விட்டதென்று அவன் மானேஜர் நினைத்தான்.

இதற்குள் கையுங்களவுமாக அகப்பட்ட திருடனை ராமசுப்புவின் அறைக்குள் கொண்டுவந்தார்கள்.

"யஜமானே! இவனைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பி விடவா?'' என்று கேட்டான் மானேஜர்.

"அடே ராமசுப்பு! என்ன சொல்லுகிறுய் இப்பொழுது! பார்த்தாயா உனது துஷ்கிருத்தியத்தின் பலனை!'' என்றது அவனது மனச் சாட்சி! "அய்யோ பாவி! வெட்கத்தை விட்டு முன்னமேயே என் மனைவியிடமும், குமாரனிடமும் எனது பாலிய துஷ்கிருத்தியங்களைப்பற்றிச் சொன்னேனு! சொல்லியிருந்தால் இது ஏற்பட்டிராதே என்று நினைத்து நினைத்துக் கண்ணீர் உதிர்த்தான்.

மானேஜர்:—சுவாமி! என்ன செய்வது? போலீஸ்.

ராமசுப்பு:—(ஹீன ஸ்வரத்துடன்) அப்பா நாசு! வேண்டாம் அப்பா! அறியாப்பையன்! போனது போயிற்று! அவனை மன்னித்து அனுப்பி விடு! இந்த உதவி நீ செய்தால் போதும்!

தனது அறைக்குள் கொண்டுவரப்பட்ட திருட்டுப் பையனை ராமசுப்பு திரும்பிப்பார்க்கவே துணியவில்லை

மானேஜர் நாசு "சரி! நமது யஜமானனுக்குச் சித்தம் சுவாதீனம் இல்லை'' என்று தன் மனதில் சொல்லிக்கொண்டு திருட்டுப் பயனுடன் அங்கிருந்தகன்றுன். பிறகு அவனைப்பார்த்துப் "பயலே! நல்லகாலம் தப்பினுய்! ஓடிவிடு! நின்ருயாகில்'' என்பதற்குள் அந்தத் திருட்டுப் பையன் ஓட்டம் பிடித்தான்.

"ரமணி! ரமணி! என் செல்வப் புதல்வா! நீ பிறவாமலிருக்கப்படாதாடா!''என்று சொல்லித் தேனில் விழுந்த ஈயைப்போல் ராமசுப்பு தத்தளித்துக் கொண்டிருக்கையில் ஒரு வேலைக்காரன் ஓடிவந்து" யஜமானனே! அந்தத் திருட்டுப் பயலைக் கடவுளே தண்டித்துவிட்டார். ஓட முயற்சிசெய்து தெருவைத் தாண்டுவதற்குள்ளாகவே ஒரு மோட்டார் வண்டியால் தாக்குண்டு மரணகாயமடைந்தான். இதோ ஒரு பலகையின்மேல் போட்டுக் கொண்டு வருகிறுர்கள்'' என்றுன்.

"அய்யோ! அய்யய்யோ! ரமணி! ரமணி! என் அருமைக் குழந்தாய்! இதுவோ உன்கதி! ஓடு! ஓடு! அதிசீக்கிரத்தில் ஒரு டாக்டரை அழைத்துக் கொண்டு வருகிறவனுக்கு ஆயிரம் ரூபாய் வெகுமதி'' என்று கதறினுன் ராமசுப்பு.

"சரி! பைத்தியம் முத்திவிட்டது'' என்று மனதிற் சொல்லிக்கொண்டான் மானேஜர் நாசு. சிலர் டாக்டரை அழைத்துக்கொண்டுவர ஓடினுர்கள்.

இதற்குள் காயம்பட்டவனை அறைக்குள் கொண்டு வந்தார்கள். புத்திரவாஞ்சையால் தூண்டப்பட்ட ராமசுப்புவும் ஓடோடியும் சென்று அவனருகில் மண்டிபோட்டு உட்கார்ந்து "அப்பா! அப்பா! அப்பா ரமணி! இதுவா உன்—

தூக்கிப்போட்டது ராமசுப்புவுக்கு! "இவன் யார்?'' என்று கேட்டான்

'மூன்றுவது பார்சல் குமாஸ்தா'' என்றுன மானேஜர் நாசு.

"முதல் குமாஸ்தா சந்துரு?''

அவன் தன்னிடத்தில் வேலை செய்துகொண்டிருக்கிறுன்.

"அவன் உடனே இங்கு வரட்டும்'' என்றுன் ராமசுப்பு.

சந்துருவும வந்து "யஜமானே! எதற்காகக் கூப்பிட்டீர்கள்?'' என்றுன்.

ராமசுப்புவும அவனைக் கட்டியணைத்துக்கொண்டு "ரமணி! ரமணி! என் அருமைக் குழந்தாய்'' என்று கதறினுன்

"அப்பா, எல்லோருக்கும் தெரிந்து விடப் போகிறதே!'' என்றுன் சந்துரு என்ற ரமணி காதோடு காதாய்.


"ரமணி! ரமணி! நீ எனது சுபாவத்தைக் கொள்ளவில்லை, நீ தாயைக் கொண்ட தனயன் என்று கூறி அவனை இறுகக் கட்டித் தழுவிக் கொண்டான் ராமசுப்பு.

"என்ன அப்பா! நான் பச்சைக் குழந்தையா, எதற்காக என்னை இப்படிக் கட்டிக் கொண்டு முத்தமிடுகிறீர்கள்?'' என்றுன் ரமணி.

"புத்திர வாஞ்சை'' என்றுன் ராமசுப்பு.


"அவன் படுத்துகிறுன் . . .
மற்ற பிள்ளைகளைப்போல் ஏன் அவன் சந்தோஷமாக இருக்கக்கூடாது?''





பலவீனப்பட்டிருக்கும் குழந்தைக்கு சிறந்ததென நிரூபணமாகியுள்ள இம்முறையையே டாக்டர்கள் சிபார்சு செய்கிறுர்கள்.

வெடு வெடுப்பு, "நரம்பு'' பலவீனம், சோர்வு—இவற்றிற்குக் காரணம் குழந்தையின் ஆகாரத்தில் முக்கியமான சத்துக்கள் சில இல்லாததே எனக் கூறுகின்றனர். இந்தக் குறையை நீக்கி, வலுவூட்டினுல் சந்துஷ்டியும், சுறு சுறுப்பும பிறக்கும.

இங்கிலேயில் ஸ்காட்ஸ் எமல்ஷனை விடச் சிறந்த டலன தருவது வேறெதுவுமில்லை. காட்லிவர் ஆயில் சாதாரணமாக வலுவூட்டும்; அதில் போஷாக்குச் சத்தும், வேண்டிய அளவுக்கு விட்டமின்கள் A அண்டு Dயும் நிறைந்திருக்கின்றன. அத்துடன் ஸ்காட்ஸ் எமல்ஷனில் கால்ஷியம் உப்புகளும், பாஸ்பரஸும் இருக்கின்றன. இது தேகத்திற்கு வலுவும், எலும்புகளுக்கு உறுமும் அளிக்கிறது. பலவீனப்பட்டுள்ள நரம்புகளுக்கு உத்வேக மூட்டுகிறது. வாய்க்கு ருசியானது; எளிதில் ஜீரணமாகக் கூடியது சாதாரண காட்லிவர் ஆயிலை விட ஸ்காட்ஸ் எமல்ஷன் மூன்று மடங்கு பலன் தரத்தக்கது!

பெற்றோர்களுக்கு சில குறிப்புகள்:—
எலும்புக்கு வலுவூட்டும் ஸ்காட்ஸ் எமல்ஷன
—வெண்ணெய் அல்லது சுத்தப் பாலைவிட 80 மடங்கு அதிக பலனளிப்பது.
—முட்டையை விட இருபடங்கு அதிக பலன் தருவது.
தேக வளர்ச்சிக்கு
—வெண்ணெயை விட 8 பங்கு அதிக பலன் தருவது.
—ஆரஞ்சிப் பழத்தைவிட 100 பங்கு பலன்.


பூரணமான வேலை

காட்லிவர் ஆயிலிலிருந்து பூரா அனுகூலத்தையும அடையத்தக்க சிறந்த சத்துக்கள் ஸ்காட்ஸ் எமல்ஷனிலிருக்கின்றன. சாதாரண காட்லிவர் ஆயிலைச் சாப்பிட்டால், இதர வகைகளில் கால்ஷியம் முதலியவற்றை உட்கொள்ளவேண்டும். ஸ்காட்ஸில எல்லாம் அடங்கியிருக்கிறது. பெரியவர்களுக்கும் சரி, குழந்தைகளுக்கும் சரி பலவீனத்தைப் போக்க இதுவே சிறந்தது. ஸ்காட்ஸ் எமல்ஷன இன்புளுவென்சா, ஜலதோஷம், இருமல் முதலியன வராமல் தடுக்கிறது அறுபது வருஷங்களுக்கு மேலாக டாக்டர்களால் சிபார்சு செய்யப்படுவது.

மொத்த டிஸ்டிரிபியூட்டர்கள்:—
இம்பீரியல் கெமிக்கல் இண்டஸ்டிரீஸ் (இந்தியா) லிமிடெட்.,
கல்கத்தா —பம்பாய்
மதராஸ் —லாகூர்
ரங்கூன் —கொழும்பு
கான்பூர் —பாடலீபுரம்
ஆமதாபாத் —கொச்சி
கள்ளிக்கோட்டை —விசாகப்பட்டணம்
கராச்சி —அமிருதசரஸ்

SCOTT'S
Emulsion
சுத்த காட்லிவர் ஆயில் சேர்ந்தது.

சிறுவர் பகுதி



# மெட்ராஸ் காலிங்!

## "கிட்டு பேசுவது"

"என். ஆர்."

அண்ணன் தம்பிகளே! அக்கா தங்கைகளே! இன்னும் நான் பள்ளிக்கூடத்தைப் பற்றியே சொல்லப் போகிறேன். வர வர நமது கைகளைப் பலமாக வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. மற்றப் பையன்களுடன் சண்டை போடுவதற்காக அல்ல; புஸ்தகங்களைத் தூக்கிச் செல்வதற்காகத் தான். முதல் கிளாஸில் படித்தாலும் எத்தனை புத்தகங்கள் எத்தனை நோட்டுகள் வாங்க வேண்டியிருக்கிறது தெரியுமா? சில சமயம் வாத்தியாருக்கு எந்தப் பாடம் நடத்துவதென்று தெரிவதில்லை "பாய்ஸ்! நாளைக்கு எல்லாப் புஸ்தகங்களையும் கொண்டு வந்துவிட வேண்டியது" என்கிறார். நாம் புஸ்தகங்களை எல்லாம் ஒரு வண்டியில் போட்டு இழுத்துக் கொண்டு போக வேண்டும் போலிருக்கிறது!

பள்ளிக்கூடம் திறந்ததும் வாத்தியார் சொல்லும் புஸ்தகங்களை கிறோம். பிறகு இரண்டு மாதங்கழித்து இன்னும் இரண்டு புஸ்தகம் வாங்கச் சொல்லுகிறார் வாத்தியார். அப்பாவிடம் சொன்னாலோ, "போடா! எல்லாம் முன்னமே வாங்கிக் கொடுத்தாச்சு. உனக்கும்



வேலையில்லை, அந்த வாத்தியாருக்கும் வேலையில்லை" என்கிறார்.

அப்பா சொல்வதிலும் கொஞ்சம் நிஜம் இருக்கத் தான் இருக்கிறது. ஒரு நாள் என் வாத்தியார் பெருக்கல் வாய்ப்பாடு கொண்டு வரவில்லையென்று கோபித்துக்கொண்டார். மறு நாளைக்கு ஒன்று வாங்கிக்கொண்டு போனேன். அதைக் கண்டதும் அவருக்கு வந்த கோபத்தைப் பார்க்கணுமே!



"ஏய்! கிட்டு! தங்கப்ப சாஸ்திரி வாய்ப்பாடு உன்னை யார் வாங்கச் சொன்னது? நம் பெருமாள் நாயுடு வாய்ப்பாடு தான் வேண்டும்" என்று சொல்லிக் கோபித்துக் கொண்டார்.

எந்த வாய்ப்பாடாயிருந்தால் இவருக்கென்ன? இதிலொரு பெருக்கல், அதிலொரு பெருக்கல் போட்டிருக்குமா என்று கேட்கிறேன்.

புஸ்தகங்கள் வாங்கியாகிவிடுகிறது. வேறு விதியில்லை என்று படிக்கிறோம். பாட்டுக்களை நெட்டுருப் பண்ணுகிறோம். ஆனால் பாடங்கள், கதைகள் எல்லாவற்றையும் ஒரு வார்த்தைவிடாமல் எதற்காக நெட்டுருப்பண்ண வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை பக்கத்தாத்து மணி ஒரு நாளைக்குப் படித்துக்கொண்டிருந்தபோது நான்


"குப்த மந்திரம்"
ரூபா 100 இனம்.

லக்ஷம் லக்ஷமாகப் பணத்தைச் செலவழித்துச் சாதிக்க முடியாத காரியங்களை இந்த மந்திரத்தை ஏழு தடவை ஜபித்துச் சாதிக்கலாம். கஷ்டமெதுவுமில்லை. முன் தயாரிப்பு அவசியமில்லை. யாவரும் உங்களை நேசிப்பார்கள். இது ஓர் 'வசீகரண மந்திரம்' உங்களுக்கு அதிர்ஷ்டமுண்டாகும்; வியாஜ்யத்தில் வெற்றியும், வியாபாரத்தில் லாபமும் அளிக்கும். பலனில்லையென நிரூபிப்பவர்க்கு ரூ 100 இனம். தபால் செலவு உள்பட ரூ 2-7

SIDDHA MANTRA ASHRAM
No 33/C, P.O. Katrisarai (Gaya)



கொசு வலைகள்.



பிரத்யேக வலுவான வெள்ளை வலைகளானவை. நல்ல தையல். நீடித்துழைப்பவை. வெளுத்த பச்சை, நீலம், சிகப்பு, மஞ்சள் முதலிய பல கலர்களிலும் கிடைக்கும். வெள்ளையா கலரா என்பதைக் குறித்தெழுக.

| நீளம் அடி | அகலம் அடி | உயரம் அடி | சாதா ரூ. | உயர்த்தது ரூ. | மேலானது ரூ. |
|---|---|---|---|---|---|
| 6 | $3\frac{1}{2}$ | $3\frac{1}{2}$ | 1-4 | 1-8 | 2-4 |
| 6 | 4 | 4 | 1-8 | 1-12 | 2-6 |
| $6\frac{1}{2}$ | $4\frac{1}{2}$ | $4\frac{1}{2}$ | 1-12 | 2-4 | 2-12 |
| 7 | 5 | 5 | 2-4 | 2-12 | 3-4 |
| $7\frac{1}{2}$ | 6 | 6 | 2-12 | 3-4 | 4-4 |

தபால் செலவு தனி. பாக்கிங் இலவசம். இலவசம் ஏககாலத்தில் மூன்று வலைகள் வாங்குவோருக்கு 6X4X4 வலை ஒன்று இலவசம்.

Bally Mosquito Net Factory,
P. O. Bally Dist. HOWRAH.



ஜலதோஷத்தால் தூக்கம் கெட்டால்

உஷாராகவிருங்கள்!



ஜலதோஷத்தால் ராத்தூக்கம் கெட்டால் உங்கள் தேக வலிவு குன்றி, ஜீவசக்தி அழியும். மூக்கு அடைபட்டுக் கிடந்தால் மிஸ்டலை உபயோகிக்கத் தொடங்குங்கள். ஜலதோஷம் பரவாது. விரைவில் சுவாச கஷ்டம் நீங்கி, அயர்ந்து தூங்குவீர்கள். இலவச டிராப்பருடன் கூடிய ஒரு புட்டி மிஸ்டலை இன்றே வாங்கிக்கொள்க.




Mistol

REG. TRADE MARK

ஜலதோஷத்தை முளையிலேயே கிள்ளி விடுகிறது.

M10


போனேன். அவன் கண்ணை மூடிக்கொண்டே "நான்காம் பாட புத்தகம். ஆவைராதநாயகம் அய்யர் எழுதியது. டெக்ஸ்ட் புக் கமிட்டி அங்கீகாரம் பெற்றது விலை அணா பத்து. முதல் பாடம். நாம் வசிக்கும் இந்தப் பரந்தபூமிக்கு..." என்று சொல்லிக்கொண்டே இருந்தான். நான் அவனைத் தோளில் மெதுவாகக் கிள்ளி "என்னடா, இப்படிப் படிக்கிறாய்?" என்றேன். அதற்கு அவன் "வாத்தியார் இன்று பாடம் ஒப்புவிக்கச் சொல்லப் போகிறாராம். முதலிலிருந்து கடைசி வரையில் எது வேண்டுமானாலும் கேட்பேன் என்று சொல்லியிருக்கிறார்" என்றான். வாத்தியார் ஒரு வேளை "புஸ்தகத்தின் விலை என்ன?" என்றுகூடக் கேட்கலாம். யார் கண்டார்கள்?

இப்படி எவ்வளவோ கஷ்டப்பட்டுப் படிக்கிறோம். அதனால் நமது மூளை சிரமப்படுகிறது; இதற்காகத் தானே நமக்குச் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் லீவு விடுகிறார்கள்? நமது அப்பாவுக்கும் அம்மாவுக்கும் இந்த சங்கதி தெரிவதில்லை. லீவு நாளில் கொஞ்சம் விளையாடிவிட்டால் போதும். "புஸ்தகத்தை எடுத்து வைத்துக்



கொண்டு படிடா" என்று சொல்லிச் சொல்லிப் பிராணனை வாங்கிவிடுகிறார்கள். விளையாட்டும் இருந்தால்தான் படிப்பு நன்றாக வரும் என்று அவர்களுக்குத் தெரியமாட்டேன் என்கிறது.

இந்த லீவைப்பற்றி இன்னும் எத்தனையோ சொல்ல வேண்டியிருக்கிறது. இன்று எனக்குச் சாவகாசமில்லை. அப்பா எனக்குத் தெரியாமல் ஒளித்து வைத்திருக்கும் இரண்டு பட்டாஸ் கட்டையும் எடுத்துச் சுடப் போகிறேன். இல்லாவிட்டால் தங்கை எடுத்துக் கொண்டுவிடுவாள். ஆகையால் நான் இப்பொழுது போய்க்கொண்டே இருக்கிறேன். குட்நைட் எவ்வரிபாடி!

இரத்தத்தில் விஷம்
சரும வியாதி
இவற்றைப் போக்குக.

ஜாம்-பெக் சிறந்த குணமூட்டும் கிருமி நாசினி.

'வெறும் காயம் தானே' என அலட்சியமாக இருந்தால் அது விஷமாக மாறி விடலாம் சகிக்க முடியாத வலியும், தொந்தரவும் உண்டாகலாம். எனவே, விரைவில் ஜாம்-பெக் தடவி குணப்படுத்துங்கள். கத்தி வெட்டுகள், புண்கள் எதற்கும் உதவும். எரிச்சலை யடக்கி, தழுமபின்றி ரணமாற்றும் ஜாம்-பெக் நமைச்சல், சொறி, சிரங்கு, கத்தி வெட்டு, தீப்புண் முதலியவற்றிற்கும் கூட. எல்லா மருந்து வியாபாரிகளிடமும் ரூ. 1 அல்லது ரூ. 2—4-க்குக் கிடைக்கும்.




மிருகக் கொழுப்பற்றது.

ஜாம்பெக்
Zam-Buk


14, ஸகா அவுஸ், மாடுங்கா, பம்பாய்

ஸ்ரீகா கஸ்தூரி கோரோஜனை மாத்திரை
"பூலக்ஸ்" பேதி மாத்திரை
"யூனிகான்" டானிக்




காரைக்குடிக்குச் சமீபமாயுள்ள கோவிலூரில் சமீபத்தில் நகரத்தார்கள் மகாநாடு நடைபெற்றது.


# நாட்டு நடப்பு சித்திரக் கண்ணாடி



யார்மௌத்தில் 3 000 மீன் பிடிப்பவர்கள், சம்பள உயர்வு கோரி வேலை நிறுத்தம் செய்தனர். அதனால் அவர்கள் உபயோகிக்கும் பீப்பாய்கள் துறைமுகத்தில் வைக்கப்பட்டிருந்த காட்சி.



[illegible] சுல்தான் சுலேமான் இங்கிலாந்துக்கு வந்திருக்கிறார். வைத்தியத்திற்காக இவர் வந்திருக்கிறாராயினும் பிரிட்டிஷார், மலேயாவின் பழக்க வழக்கங்களில் தலையிடுவதை அதிகாரிகளிடம் கண்டித்துக் கூற உத்தேசித்திருக்கிறாரென்று கூறப்படுகிறது.



“யுத்த எதிர்ப்பு தினக்” கொண்டாட்டத்தை யொட்டிச் சென்னை [illegible] மாளிகையில் ஸ்ரீமான் கே. நாகேஸ்வரராவ் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது.




[illegible] நகரசபையினர் ஆதரவில் சுகாதார வாரக் கொண்டாட்டமும் குழந்தைகள் வாரமும் நடைபெற்றது. மிஸஸ் என். வி. ப்ரௌன் பரிசுகள் வழங்கினர்.

## உடனே பதில்

(10-ம் பக்கத் தொடர்ச்சி.)

கடிதங்கள் ஓரிருபதாவது சேர்ந்திருக்கும். கையிலகப் பட்டால் அதை மறுபடி ஒரு தரம் வாசித்துப் பார்ப்பேன். அப்போது ரமணன் கேட்டுள்ள கேள்விகளுக்குப் பதில் சொல்லவேண்டிய அவசியமேயிராது. எனக்கும் வேறு என்னதான் சமாசாரம் எழுதுவது என்றும் தெரியாது. எதாவது முக்கிய சமாசாரம் அகப்படும் வரையில் பதில் எழுதுவது ஒத்திவைக்கப்படும்.

ரமணன் கடிதத்துக்கு முந்தி வந்த ஓரைம்பது கடிதங்களுக்கே இன்னும் பதில் எழுதப்படாமலிருக்கையில் ரமணன் கடிதத்துக்கு மட்டும் என்ன அவசரம்? நியாயப்படி அந்த ஐம்பதுக்கும் பதில் எழுதியான பின் அன்றோ ரமணனுக்கெழுதவேண்டும்?

இப்படி ஒரு மாதத்திற்கு மேலாகி விடும். இதுவரையில் ரமணன் கடிதத்துக்குப் பதில் போடாதது தவறுதான் என்று மனதில் ஒரு புறத்தில் தோன்றும். "அவ்வளவு நல்ல சிநேகிதனுக்குக் கடிதங் கூடப் போடாமலிருந்தது பிசகு தானே! அவன் என்ன நினைப்பான்? இவ்வளவு நாள் கழித்துப் பதில் எழுதுவதும் தப்புத்தான். என்ன செய்வது? பேசாமலிருந்து விடலாம். கேட்டால் அந்தக் கடிதம் வந்து சேரவேயில்லை என்று சொல்லிவிடலாம். இன்னஞ் சில நாளில் ரமணன் தானகவே மறுபடியும் எழுதுவான். அதற்கு ஜரூராய்ப் பதில் எழுதிவிட வேண்டும் என்று தீவிரமாய் யோஜனை செய்துகொண்டு, கடிதத்தைப் பழயபடியே மேஜைமேல் போட்டுவிட்டு, ரமணனுடைய நட்பின் மாட்சியைப் பற்றிய சிந்தனைகளில் ஒரு அரைமணி நேரம் செலவிடுவேன். நான் அவனிடம் வைத்திருக்கும் அன்பு அவனுக்குத் தெரியும். எனவே கடிதம் எழுதாவிட்டாலும் பாதகமில்லை.

இன்னும் ஒரு மாதம் நான் எதிர்பார்த்தபடி ரமணனிடமிருந்து கடிதம் வரவில்லை. வந்திருந்தால் அதற்கு உடனே பதில்போட நான் தயாராயிருந்தேன். நான் எண்ணியபடி என்னிடம் அவனுக்கு அவ்வளவு அன்பில்லையோ என்னமோ எனினும் நானக 'முதலில்' எழுதும் உத்தேசமில்லை.

இப்படி ராங்கியில் கொஞ்ச நாள். திடீரென்று மனதில் ஒன்று படுகிறது. நான் இறந்துபோய்விட்டேன் என்றும் அதனல் தான் பதில் எழுதவில்லையென்றும் நம்பியிருக்கிருனே ரமணன்? நான் உயிருடனிருப்பதை யவனுக்குத் தெரிவிக்கவேணும், தந்தி யடிக்கலாமா? வேண்டாம். நான் உயிருடன் தான் இருக்கிறேன். நான் இறந்துபோய்விட்டதாக இப்பொழுது ரமணன் நம்பியிருந்தால் நான் உயிருடனிருப்பதை யறிந்து அளவிலா சந்தோஷங் கொள்ளுவான். என் மனதில் அவனைப்பற்றி உண்மையாகவே உள்ளதை யெல்லாம் கோத்து ஒரு நாள் அவனுக்கு ஒரு நீண்ட கடிதம் எழுத வேண்டும். இப்பவே யெழுதக் கூடாது. நாள் ஆக ஆக நம் நட்பும் வளருகிறது இன்னும் கொஞ்ச நாள் போனல் அந்த நீண்ட கடிதம் நன்ருக எழுத முடியும்.

மறுபடியும் ஒரு நாள் அந்தக் காகிதக் கட்டைப் புரட்டிப் பார்ப்பேன். ரமணன் ஞாபகந்தான் சதா என் மனதில் குடிகொண்டு உளது. ஆனல் பதில் கடிதம் எழுதித்தானக வேண்டும் என்ற வலுக்கட்டாயம் இப்போதில்லை. ஆனலும் நான் பதில் எழுதுவதாகத்தான் உத்தேசித்திருக்கிறேன். அந்தக் காகிதக் கட்டில் போன வருஷக் கடிதங்கள் பல கண்ணில் படும் அவைகளுக்குப் பதில் அப்பவே எழுதியிருக்கவேண்டும். இனி அவைகளால் யாதொரு பிரயோசனமும் கிடையாது. கிழித்துப் போட்டுவிடுவேன்......" ரமணனுக்கு எத்தனை குழந்தைகள்? நாலா? ஐந்தா? நல்லவன். தங்கமான மனுஷன்."

இத்தனை நாட்களில் மானஸீகமாய் ரமணனுக்கு எவ்வளவோ கடிதங்கள் எழுதியாய் விட்டது. ஆனல் பதில எழுதுவதில் முதலில் இருந்த ஆர்வம் போய்விட்டது. சிநேகிதர்களுக்கு ஆர்வம் இல்லாதபோது கடிதம் எழுதவே கூடாது. ஆர்வமாய் எழுதிய கடிதங்களாலேயே சிநேகம் விருத்தியடையும். "எழுதணுமே" யென்று வேண்டா வெறுப்பாக எழுதிய கடிதத்தை ரமணன்தான் மதிப்பானு?

அடுத்த மாதம் ரமணன் எழுதியிருந்த சமாசாரம் முழுவதும் மறந்தேபோய்விட்டது. அந்தக் கடிதத்தைப் பொறுக்கி யெடுத்துத் திரும்பவும் ஒரு தரம் படிப்பேன். எவ்வளவு நன்ருய் எழுதியிருக்கிருன் ரமணன்? அவன் கெட்டிக்காரன்தான். ஆனல் அந்தக் கடிதத்துக்கு இப்போது பதில் எழுதுவது அர்த்தமில்லாத காரியம். புது வருஷம் பிறக்கப் போகிறது. அப்போது எப்படியும் ஒரு கடிதம் எழுதியாக வேண்டும். சேர்த்து எழுதிவிடலாம்.

மானஸீகமாக ரமணனுக்கு எழுதிய பல கடிதங்களையும் ஒரு நாள் திரும்பவும் படித்துப் பார்ப்பேன். நானும் அவனவ்வளவு நன்ருகத்தான் எழுதியிருக்கிறேன். இந்தக் கடிதங்களை ரமணன் உண்மையிலேயே வாசித்துப் பார்ப்பானுகில் என்ன நினைப்பான்? என்னைப்பற்றி யவன் மதிப்பு ஒரு படி ஏறும் என்பது நிச்சயம். என் அன்பன் ஆர்வத்தில் அவன் களி கொள்ளுவான்.

கடிதங்கிடைத்து ஆறேழு மாதங்களுக்கப்புறம் ஒரு நாள் ஒரு ஆவேசத்திலே ரமணனுக்குக் கடிதம் எழுதிப் போட்டுவிட்டுத்தான் பாக்கி வேலையென்று தீர்மானம் ஆய் விட்டது. பேனவை அலம்பி மசி போட்டு, பேபரும் எடுத்து வைத்து எழுத ஆரம்பிப்பேன். முதலிரண்டுதரம் எழுத சரியாக வராது. பின் இரண்டு தரம் வாக்யங்கள் தெளிவாய் அமையாது, ஐந்தாவது பேபரில் எழுதும்போது எழுத ஒன்றுமே தோணுது. எழுதியவரையில் நன்ருகவும் இராது:

ஆருயிர் நண்பா

நீ கடிதமே என் போடவில்லை? ஆறேழு மாதத்திற்கு முன் போட்டதுதானே. நீ அடிக்கடி எழுது. உன்னிடம் எனக்கு எவ்வளவு......"

இந்தமாதிரிக் கடிதத்தை எப்படிப்பட்ட சிநேகிதனுனும் கவனிக்கமாட்டான் என்றே தோன்றும். பேனவை பல்லமுந்த கடித்தாலும் அது ஓட மாட்டேன் என்று சொல்லிவிடும். அளவிலா அன்பு எழுத்துக்குக் குறுக்கே நிற்கும்...

வாசலில் சைகிள் மணி தந்தி. தந்தி ஸார் தந்தி. மணி நீர்தானு?"

ஆம். நான் தான் மணி. ரமணனிடமிருந்து தந்தி வந்திருக்கிறது. நாளைக்குக் குடும்பத்துடன் வந்து என்னைப் பார்த்துவிட்டுப் போவதாகத் தந்தியடித்திருக்கிருன். பாதி எழுதப்பட்ட என் பதிலை கிழித்தெறிந்துவிட்டேன். இன்னம் இருபத்திநாலு மணி நேரத்தில் அவனைப் பற்றிய எல்லாப் புது சமாசாரங்களும் எனக்குத் தெரிந்துவிடும்— அவன் மனைவி கருப்பா சிவப்பா? அவனுக்கு எவ்வளவு பெண், பிள்ளைகள்? அவன் என்னைப் போல அகமுடையாளுக்கு அடங்கியவனு இல்லையா?—சகலமும் தெரிந்துவிடும். கடித மூலம் அவ்வளவு முக்கிய சமாசாரங்களை யெப்படித் தெரிந்து கொள்வது?...

பதில் எழுதுவதில் இதுவே என் வழக்கம்.........

இதைத் தொடர்ந்து ஒரு கதை எழுதவேணும்—ருசிகாமான கதை கடைசியில் அவர்களை விட்டுப் பிரிய நேரிடுமே எனும் பயத்தில் ஒருவன் தனக்குப் பிரியமான யாரையும் பார்க்கப்போவதே கிடையாதாம்!.........


## சிறந்த கூந்தல் ஆகாரம்



உடலுக்கு எப்படி நல்ல உணவு அவசியமோ அதே மாதிரி கூந்தலுக்கும் சிறந்த ஆகாரம் அவசியமானது. எனவே உலகப்புகழ்பெற்ற காமினியா ஆயில் (ரிஜிஸ்டர்ட்) உபயோகியுங்கள். கூந்தலின் ஆரோக்கிய வளர்ச்சிக்கு அத்யாவசியமான சத்துக்கள் பல சேர்ந்தது. மூளைக்குக் குளிர்ச்சி ; துல்லிய மணம் நிறைந்தது.

விலை புட்டி 1-க்கு ரூ. 1.
,, 3 புட்டிகள் ரூ. 2-10.

வி. பி. சார்ஜ் தனி.

தபால் செலவுக்காக அரையணு ஸ்டாம்பு அனுப்புவோர்க்கு சாம்பிள் இலவசம்.

ப்ராசீன மலர்களின் சுவாசனையும், புத்தப் புதிய இனிமையும் வாழ்விற்கு மகிழ்ச்சியூட்டுபவை; இவ்வளவையும் கீழ்க்கண்டதன் வாசனையில் நன்கு அனுபவிக்கலாம்.

## ஆட்டோ டில்பஹார்

(ரிஜிஸ்டர்ட்)

ஒரு சில துளிகள் பல நாட்களுக்கு அழியாத வாசனையூட்டும்; ஏனெனில் ஆட்டோ டில்பஹாரில் விரைவில் ஆவியாக மாறிவிடும் ஆல்கஹால் கிடையாது.

விலை ¼ அவுன்ஸ் ரூ. 1-4. 1 டிராம் 12 அணு.

தபால் செலவு தனி.

சோல் ஏஜெண்டுகள்:—

**The Anglo Indian Drug & Chemical Co**
**BOMBAY 2.**

**நமது புதிய தொடர் கதை.**



# ராதா.

(திருமலை ஸ்ரீமான் சுந்தரம் பிள்ளை.)

ராதா

முன் கதைச் சுருக்கம்.

மகேந்திரத்தில் பாரெஸ்ட் ரேஞ்சராயிருந்த நந்தகோப முதலியாரின் குமாரி ராதா ஒரு பெண் பள்ளிக்கூடத்தில் படித்து வருகிறாள். பள்ளிக்கூட ஹெட்மாஸ்டர் மரியதாஸர் ஒருநாள் அவருடைய ஸ்நேகிதர் அமரேசன் செட்டியார் அங்கு வருகிறார். ராதாவின் மனதில் அமரேசன் அவளுடைய மாதா பிதாவைப் போலவும் அண்ணனைப் போலவும் தோழனைப்போலவும் தோன்றினான். நந்தகோபர் தமது குமாரிக்குத் தமிழ் படிப்பிப்பதற்காக ஒருவரை ஏற்பாடு செய்யும்படி மரியதாஸரிடம் கூறுகிறார். அவரும் அமரேசனை ஏற்பாடு செய்கிறார். அமரேசன் ராதாவுக்குப் பாடம் கற்பித்து வருகின்றான். சில காலத்தில் அவன அக்குடும்பத்திற்கே உற்றதோழனாகிறான்.

## 3. பண்ணை வீடு

நந்தகோபரின் பிறப்பிடமாகிய பாற்கடல் சென்னை நகரத்திலிருந்து மேற்கே செல்லும் மதராஸ் ரெயில்வேயிலுள்ள ஒரு பிரதான ஸ்டேஷன். இங்கே தொண்டமண்டல முதலிமார்களின் கூட்டமும் முன் குடுமிப் பிராமணர்களின் கூட்டமும் அதிகம். இங்கே பண்ணை வீடு என்ற பரம்பரையான பெயருடன் ஒரு பெரிய குடும்பமுண்டு. பாற்கடற் பட்டணத்தில் "பண்ணைச் சத்திரம்" என்று பிரசித்தி பெற்ற பெரிய அன்னதானச் சத்திரம் இந்தக் குடும்பத்தாரால் ஸ்தாபிக்கப்பட்டு அவர்களால் நெடுநாளாய்ப் பரிபாலிக்கப்பட்டு வந்தது.

பாற்கடலிலும் அதைச் சார்ந்த அயலூர்களிலும் நடக்கும் திருவிழா கல்யாண முதலிய விசேஷங்களில், பண்ணையாருக்குத்தான் முதல் விபூதியும் தாம்பூலமும் கொடுப்பார்கள். இந்தக் குடும்பத்தார் நந்தகோபருடைய குடும்பத்தார்க்குப் பல தலைமுறையாய்ச் சம்பந்தக் காரர்கள். அவருடைய பிதாவின் சகோதரியொருத்தியைப் பண்ணைவீடு பவாநந்த முதலியார் விவாகம் செய்திருந்தார். அவருடைய மக்கள் இருவர். மூத்தவர் பெயர் ராஜாதிராஜ முதலியார், இளையவர் பெயர் நச்சாடரவலிங்க முதலியார். பவாநந்த முதலியார் இருக்கும்பொழுதே மூத்த மகன் ராஜாதிராஜ முதலியார், தண்டபாணியென்ற ஒருவயதுக் குமாரனை விட்டுவிட்டு, தேக வியோகமாயினார். பின்பு நான்கு வருஷங்களுக்குள் பவாநந்தரும் காலஞ்சென்றார். இவருள்ளவரை பாற்கடற் பண்ணை வீடு அளவற்ற பெருமையும் புகழும் பெற்றிருந்தது. அந்த சமயம் பண்ணை வீட்டைச் சேர்ந்த பூஸ்திதியும் ரொக்கமும் சேர்ந்து ஏழு எட்டு லக்ஷ ரூபாய் வரை மதிப்பிடப்பட்டது. இத்துடன் பாற்கடல் முனிசிபு மணியம் வேலையும் பரம்பரையாய் இருந்து வந்தது. ஏகதேசமாய், பவாநந்தமுதலியார் பாற்கடல் முனிசிபல் செயர்மெனாகவுமிருந்தார். பண்ணையார் பவாநந்த முதலியார் என்ற பெயர் சுற்றுக்கு நூறு மைல் வரை தொனிக்கும். அப்படிப்பட்டவர் இறக்கவும் அந்தச் சொத்துக்களையெல்லாம் இளைய மகன் நச்சாடரவலிங்க முதலியார் என்ற நச்சு முதலியார் கைப்பற்றினார். மூத்த மகன் பிள்ளை பேரனாகிய தண்டபாணியின் பெயருக்கு மணியம் வேலை தாக்கல் செய்யப்பட்டு, நச்சு முதலியார் மைனர் குமாஸ்தாவாய் நியமிக்கப்பட்டார்.

நச்சு முதலியார் அதிகாரத்துக்கு வரவும், பண்ணை வீடு அழியும் காலமும் வந்து விட்டது. ஏனெனில், நச்சு முதலியார் சிறு பிள்ளை முதலாகவே மிகவும் கெட்ட பெயரெடுத்துவிட்டார். பெரிய முதலியார் இறந்தபொழுது நச்சு முதலியாருக்கு நாற்பத்தைந்து வயதிருக்கும். பிதா ஜீவதசையிலிருக்கும்பொழுதே, அவருடைய கட்டுப்பாட்டுக்குள்ளடங்காமல், நச்சுமுதலியார் பாற்கடலிலும் அக்கம்பக்கங்களிலும் செய்த அக்கிரமங்களுக்கு அளவில்லை. அதி பால்யத்திலேயே ஒழுக்கம் கெட்டுத் துஷ்டச் செயல்களில் பிரவேசித்துவிட்டார். இந்த வயதுக்குள் அவர் நான்கு முறை விவாகம் செய்து முதல் மூன்று மனைவிமாரும் கணவன் கொடுமையைச் சகியாது தத்தம் பிறந்த வீட்டிற்குச் சென்று வாழாக்குடியாய் வருந்தி மரணமானார்கள். நான்காவது மனைவிமட்டும் ஒரு பெண் குழந்தையைப் பெற்றிருந்தாள். பிதா காலஞ்சென்று ஒரு வருஷத்திற்குள் நச்சு முதலியார் பாற்கடலில் அநேகக் கக்ஷிகளை உண்டாக்கிவிட்டார். அதனால் அவர் அநேக வழக்குகளில்சம்பந்தப்பட்டு ஆயிரம் பதினாயிரமென்று அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்துத் தப்பிக்கொண்டுவந்தார். லக்ஷக்கணக்கான சொத்துள்ளவனிடம் குடி கொலை முதலிய தீச்செயல்களும் சேர்ந்துவிட்டபடியால், ஏழை ஜனங்கள் நச்சு முதலியாரை எமன்போற் கருதிப் பயப்பட்டார்கள். முதலியார் என்ற பெயரும் போய் ஊரெங்கும் முதலியென்ற பெயர் வந்துவிட்டது. பெரிய முதலியார் காலத்திலிருந்த மதிப்பும் மரியாதையும் கீழே இறங்கியதுபோலவே, ஏழெட்டு லக்ஷ ரூபாய் சொத்தும் மளமளவென்று கீழே இறங்கத் தொடங்கிற்று.

இந்தச் சமயம்பண்ணைச் சத்திரம் விசாரிப்பு வேலைபார்த்து வந்த பிச்சுவையன் என்ற ஒரு முன் குடுமிப் பிராமணன் நச்சு முதலிக்கு அந்தரங்க ஸ்நேகிதனானான். இவன் ஒரு அசாத்தியமான கைக்காரன்; பேசுவதில் மகாசமர்த்தன்; சமயத்திற்குத் தக்கபடி ஆட்களைக் குல்லாப் போடுவதிலும், காதுகுத்துவதிலும், முதுகு தட்டுவதிலும், காலை வாருவதிலும், பூச்சி பிடிப்பதிலும் இணையற்றவன்; தன் கையிலிருந்து கால் காசு செலவு செய்யாமல், அநேக பிரஸித்திபெற்ற நாஸிகளை வசப்படுத்தின மன்னன். பாற்கடற் பட்டணத்தில் அவனைக் கண்டறியாத விலைமாதரும் அவன் குடித்தறியாத கள்ளுக்கடையுமில்லை. இங்கிலீஷ், தெலுங்கு, தமிழ், மலையாளம் இந்துஸ்தானி ஐந்து பாஷைகளும் தனக்குத் தெரியுமென்று சொல்லிக் கொள்வான்; காசி, ஹரித்துவாரம், காஷ்மீரம், டில்லி, கண்டி, கதிர்காமம், ரங்கூன், சிங்கப்பூர் முதலிய அநேக பட்டணங்களில் வசித்திருப்பதாய் உருட்டுவான். அநேக பெரிய உத்தியோகஸ்தர்களுடைய பெயரையும் பிரபுக்களுடைய பெயரையும் சொல்லி, அவர்களெல்லாரும் தன்னோடு வாசித்த பள்ளிக்கூடத் தோழர்களென்று கண்டமட்டும் அடித்து வீசுவான். ரெயில்வே வேலைக்காரர்களை ஸ்நேகம் செய்துகொண்டு, டிக்கெட்டில்லாமலே சென்னபட்டணம் போய்த் திரும்பிவிடுவான். மூன்றாவது வகுப்பு டிக்கெட்டுடன் இரண்டாவது முதலாவது வகுப்பு வண்டிகளிலும்கூட நிர்ப்பயமாய்ப் பிரயாணஞ் செய்யும் நிரமும்; அகப்பட்டுக்கொண்டால், காலைப்பிடித்துக் கெஞ்சிப் பல்லைக் காட்டி எப்படியாவது மீண்டு வந்துவிடும் புஜபல பராக்ரமும் அவனிடம் யதேஷ்டமாயுண்டு! இத்தனை பெருமையும் வாய்ந்த நண்பர் பிச்சுவையன்மீது நச்சு முதலியாருக்கு அளவற்ற பக்ஷமும் மதிப்புமுண்டு. இருவரும் எங்கே சென்றாலும் ஒன்றாகவே செல்வார்கள். பாற்கடற்பட்டணத்திலுள்ள பட்டவாளிப் பையன்களெல்லாரும் பிச்சுவையன் மூலமாய் நச்சு முதலிக்கும் நண்பராய்விட்டார்கள். "நச்சும்பிச்சும் கூடினால்நாசம்" என்று ஒரு பழமொழியே உதித்துவிட்டது.

இவ்வாறாக, பவாநந்தர் காலத்தில் இராமாயணப் பிரசங்கமும் பெரிய புராணக் காலக்ஷேபமும் நடந்த பண்ணை வீட்டு மெத்தையில், நச்சு முதலி காலத்தில் தாசிகளின் சதிரும், பாட்டுக் கச்சேரியும் சீட்டுக் கச்சேரியும், குடிகாரர்கள் கூட்டமும் ஆட்டமும் அதிகப்பட்டுவிட்டன. இத்தோடு போய்விட்டதா? என்ன கெட்ட காலத்தினாலோ, ராஜாதி ராஜ முதலியார் மனைவியும் சிறுவன் தண்ட

**மனோரஞ்சனி**

இது ஒரு மாதாந்த நாவல் சஞ்சிகை. இராஜலக்ஷ்மி என்னும் நாவல் தொடர்ச்சியாய் வெளிவந்துகொண்டிருக்கிறது. இதன் வருட சந்தா ரூ. 1-8. மாதிரிக்காபி இனும்!

எம். எஸ். ராமுலு கம்பெனி,
286, எஸ்பிளனேட், மதராஸ்.

பாணியின் தாயுமாகிய விதவை பஞ்சணையென்பவளும் கூடாவொழுக்கத்திலிறங்கிப் பண்ணை வீட்டின் மரியாதையைக் கெடுக்கத் துணிந்தாள். நச்சுமுதலி தன்னளவிற் கூடாவொழுக்க முடையவனாயினும் தன் தமயன் மனைவி பெண்பாவினளாகிய பஞ்சணையின் நடையைக் கண்டிக்கத் தொடங்கினான். இதைக்கண்ட பஞ்சணை ஒரு தந்திரம் செய்தாள். குடும்பத் தலைவனாகிய நச்சுமுதலியின் கண்டிப்புக்குப் பயந்து களையும் வைத்துக்கொண்டான். தாயையிழந்த காளத்தியும் அங்கேயே வளர்ந்தாள்.

இனி, பண்ணை வீட்டுச் சம்பந்தக்காரராகிய நந்தகோபமுதலியார் அதி பால்யத்திலேயே தகப்பனையிழந்துவிட்டதுமன்றி, தன் தமக்கையொருத்தி—காணமற் போன கற்பகம் என்பவள்—விவாக விஷயமாய் நச்சுமுதலியினுடைய மனஸ்தாபத்திற்கும் ஆளாகும்படி நேர்ந்தபடியால் சிறு வயதிலேயே



தண்டபாணிக்கு ராதாவைப் பெண்பேச மகேந்திரம் வரப்போவதாய் நச்சு முதலியார் தெரிவித்தார். அதற்கு நந்தகோபர், "அப்படியே வாருங்கள். அமைப்பிருந்தால் நடக்கட்டும்" என்று உபசாரமொழி கூறிக் கிளம்பினர்.

தானடைந்து வந்த இன்பத்தை இலகுவில் இழக்க விரும்பாதவளாய் அவனையே தன் கண்ணியில் வீழ்த்த எண்ணினாள். எண்ணியபடியே நச்சுமுதலியும் வசப்பட்டான். இந்த ரகஸ்யம் மெல்ல வெளிப்படவே, நச்சுமுதலியின் நான்காவது மனைவிக்கும் பஞ்சணைக்கும் பகையுண்டாயிற்று. நச்சுமுதலியும் தீயொழுக்க முறையின்படியே பஞ்ணையின் சார்பிலிருந்துகொண்டு மனைவியை இம்சித்தான். இம்சையைப் பொறுக்க முடியாமல் நச்சு முதலி மனைவி ஒரு நாளிரவில் எழு வயதுள்ள காளத்தியென்னும் தன் பெண் குழந்தையை நித்திரைசெய்யவிட்டுவிட்டு, தற்கொலை செய்துகொண்டாள். அது முதலாக நச்சுமுதலி தனக்கு இயல்பாயுள்ள எண்ணற்ற சோர நாயகிகளின் ஜாப்தாவில் பஞ்சணையின் பெயரையும் தாக்கல் செய்து அவளிடத்திலேயே போஜனாதி ஜீவனார்த்தமாய்த் தெலுங்கு தேசத்திற்குப் போய்விட்டார். போய்ச் சில வருஷங்களுக்குள் நந்தகோபர் நன்னிலைமைக்கு வந்து பாற்கடலில் சொத்துக்கள் வாங்கத் தொடங்கவே, நச்சு முதலி அவரைச் சமாதானம் செய்து தன் வசப்படுத்திக் கொண்டார். கோழைப் பக்தியுடைய நந்தகோபரும் நச்சு முதலியின் பகையால் தமக்கேதேனும் கேடு வருமென்றஞ்சியவராய் அவரோடு உறவாடினர்; உறவு அதிகப்படவே தான் புதிதாய் வாங்கிய சொத்துக்களை நச்சு முதலியின் மேற்பார்வையில் விட்டிருந்தார். அதிலும் நச்சு முதலி அவ்வளவு நம்பிக்கையாய் நடந்துகொள்ளவில்லை. நந்தகோபர் அடிக்கடி அனுப்பிக்கொண்டு வந்த தொகைகளில் நூற்றுக்கு இருபத்தைந்துக்குக் குறையாமல் நச்சு முதலியார் தான் வாயிற் போட்டுக்கொண்டு


—நீலகிரி—

# காப்பிக்கொட்டை

கீழ்க்கண்ட ரகங்களை சகல சார்ஜும் உள்பட சென்னை ராஜதானியில் அல்லது பம்பாய்க்குத் தெற்கேயுள்ள எந்த ஸ்டேஷனுக்கு வேண்டுமானாலும் அனுப்பப்படும்:—

— வி. பி. ரெயில்வே பார்சல் மூலமாய் —

| | | |
|---|---|---|
| 10 lb எக்ஸ்ட்ரா போல்டு தட்டைக்கோட்டை | ரூபா | 5—2—0 |
| கூட்ஸ வண்டி மூலமாக (Goods Train) | | |
| 1×30 lb மூட்டை நீலகிரி "O" சைஸ் | ,, | 14—4—0 |
| 1×30 lb மூட்டை ,, எக்ஸ்ட்ரா போல்டு | ,, | 12-11—0 |

இன்னும் இதர காப்பிப்பொடி டீ தினுசுகளின் விலை விவரங்களுக்கு
:: :: கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :: ::

யுனைடெட் காப்பி சப்ளை கம்பெனி, லிமிடெட்.,

மானேஜிங் ஏஜெண்ட்ஸ்

T. ஸ்டேன்ஸ் & Co, Ltd., கோயம்புத்தூர்.





உங்களுக்கு புத்துயிர் அளிக்கிறது!




போலி களைக் கண்டு உஷார்

TOMCO

டாம்கோ விற்பனை இலாகா
19-A வாணியர் தெரு, மதராஸ்.

சிறந்த இந்திய வெஜிடபிள் ஆயிலைக் கொண்டு தயாரிக்கப் படுகிறது. மிருகக் கொழுப்பே கிடையாது.

ஹமாம்

டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட், டாடாபுரம் & பம்பாய்.

T S 538

பலவிதமான கணக்கெகாப் பித்து விடுவார். அப்படியிருந்தும், நச்சு முதலி வாயிற் போட்டுக் கொண்டது போக, நந்தகோபருக்கு அறுபது அல்லது எழுபதாயிரம் ரூபாய் பெறும் சொத்துக்கள் சேர்ந்துவிட்டன. இதற்குள் பண்ணை வீட்டுச் சொத்துக்கள் ஆற்று வெள்ளம் போல் படிப்படியாய் இறங்கிவிட்டன. நச்சு முதலியே பண்ணை வருமானமும் சத்திரத்து வருமானமும் காணுமல் சுமார் இரண்டரை லக்ஷ ரூபாய் வரை நாட்டுக்கோட்டைச் செட்டிகளிடம் நூற்றுக்கு இரண்டு வட்டி மூன்று வட்டிக்குக் கடன் வாங்கியிருந்தார்.

இத்துடன், தண்டபாணியும் தலையெடுத்துவிட்டபடியாலும், அவனை ஒழுங்காய் வளர்ப்பதற்குப் பிதாவில்லாதபடியாலும், அவனும் துஷ்டர்களுடன்கூடிச் சிற்றப்பனுக்கு மேலான பெயர் வாங்கிவிட்டான். அவனும் தன் துஷ்டச் செயல்களுக்காக ரகஸ்யமாய்க் கடன் வாங்கத் தொடங்கினன். ஆனல் தண்டபாணி கடன் வாங்கும் விதம் மிகவும் விநோதமாயிருக்கும். அவன் தன் சிறிய தகப்பனுக்குத் தெரியாமல் கள்ளக்கடன வாங்க வேண்டியிருப்பதால், நூறு கொடுத்தவர்களுக்கு ஐந்நூறுக்கும் ஆயிரங் கொடுததவர்களுக்கு மூவாயிரத்துக்கும் நோட்டெழுதிக் கொடுத்துப் பாக்கியை இனமாய் விட்டுவிடுவான் சுமார் முப்பதாயிரம் ரூபாய் பெறுமான ஒரு கிராமத்தை மூவாயிரம் ரூபாய்க்கு ஒரு பிராமணனுக்குக் கிரயம் செய்து கொடுததுவிட்டான. பிராமணன் கிராமத்தை அனுபவிக்கத் தொடங்கினன். காரியம் நசசு முதலிக்குத் தெரிந்தது. மைனர் கிரயம் செல்லாதென்று நச்சு முதலியார் ஆக்ஷேபிக்கவே, கலகங்களும், கிரிமினல் வழக்குகளும் ஸிவில் வியாஜ்யங்களும் தொடுபிடியாய்க் கிளம்பின. இதற்குள் தண்டபாணிக்குக் கள்ளக்கடன் கொடுத்த பிரபுக்களும் காலாவதிக்குள் நோட்டுகளையெடுத்துக்கொண்டு கோர்ட்டுகளுக்குப் புறப்பட்டார்கள். எல்லாக் கணக்கும் பார்த்தபொழுது, தம்பி தண்டபாணியொருவனுக்கே சுமார் எண்பதாயிரம ரூபாய்க் கடனிருப்பதாய் வெளியாயிற்று. உடனே, மகா விவேகியாகிய நச்சு முதலி பண்ணை வீட்டுக்கு ஆபத்து வந்துவிடுமென்றஞ்சி, தனது அந்தரங்க நண்பனுகிய சத்திரம் விசாரணைப் பிச்சுவையன் பேருக்குச சில சொத்துக்களை மலாரணையடமானம் செய்துவைத்தார். இந்த மலாரணை ரகஸ்யம வெளியே புடைக்கவும், நச்சு முதலிக்குக் கடன் கொடுத்த எல்லாச் செட்டிகளும நப்பர் தாக்கல் செய்துவிட்டார்கள். இவ்வாறு, அப்பன் வியாஜ்யங்களும மகன் வியாஜ்யங்களும் ஒன்று சேரவே, நச்சு முதலியின் எண்ணற்ற விரோதிகளும் செட்டிகளுடன் ஒன்று சேர்ந்து வேண்டுமுதவிகள் செய்தார்கள். வியாஜ்யங்களெல்லாம் பாற்கடல் சப்கோர்ட்டிலேயே நடந்தன. எல்லாக் கடன்காரர்களும் தத்தம் முழுத் தொகைக்கும் டிக்கிரி பெற்றுப் பண்ணை வீட்டுச் சொத்துக்களையெல்லாம் ஜப்தி செய்து வாழ்வித்தார்கள். சொத்துக்கள் காணுதபடியால் பிச்சுவையன் மலாரணையடமான விஷயம் விசாரிக்கப்பட்டது ஒன்றரை லக்ஷ ரூபாய் பெறக்கூடிய சொத்தை அடமானம் வாங்கக்கூடிய சக்தியும் பொருளும் நித்ய தரித்ரனுகிய பிச்சுவையனிடம் கிடையாதென்று ருஜுவாகவே, எல்லாச் சொத்துக்களும் ஜப்தியாய் ஏலம் போடப்பட்டன. முடிவில், பண்ணை வீட்டைச் சேர்ந்த சில கட்டிடங்களும், பண்ணைச் சத்திரத்திற்குத் தருமமாய் விடப்பட்ட அக்தார் பாத்தியமுள்ள சில சொத்துக்களும் தவிர மற்றவையெல்லாம் ஒரேயடியாய்க் கடன்காரர்கள் வசப்பட்டுவிட்டன.

இத்துடன் போகப்படாதா? நச்சு முதலியின் விரோதிகள் சிலர் செட்டிகளை ஏவிவிட்டு மோசடி அடமானத்துக்காகக் கிரிமினல் பிரியாது கொண்டுவந்தார்கள். இந்தக் கேஸில், நச்சு முதலிக்கும் பிச்சுவையனுக்கும் அவ்வாறு மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அப்பீல் செய்தும் பயன்பெறுமல், இருவரும் ஆறுமாதகாலம் சிறையிலிருந்து விட்டு வெளியே வந்தார்கள். நினைத்திராமல், இத்தனை துன்பங்களுக்காளான மைத்துனரைப் பார்க்கவேண்டுமென்று மகேந்திரத்திலிருந்து வந்த நந்தகோபர் நச்சுமுதலிக்கு வேண்டிய சமாதானம் கூறியதுமன்றி, இனியாவது சத்திரத்துச் சொத்துக்களை வைத்துக்கொண்டு ஒழுங்காய்ப் பிழைக்கும்படி மருமகன் தண்டபாணிக்கும் புத்திமதி சொன்னர். நநதகோபர் மகேந்திரம் புறப்பட்டபொழுது நச்சு முதலி தன் மகன தண்டபாணி கெட்டவர்களுடன் கூடிக் கெட்ட செய்கைகள் தொடங்கிவிட்டதாயும், சிக்கிரம் அவனுக்கு விவாகம் செய்யக் கருதியிருப்பதாயும், அவனுக்கு ராதாவைப் பெண்பேச மகேந்திரத்திற்கு வரப்போவதாயும் தெரிவித்தார். அதற்கு நந்தகோபர். "அத்தான் அப்படியே வாருங்கள். அமைப்பிருந்தால் நடக்கட்டும்" என்று உபசார மறுமொழி கூறிவிட்டு, மகேந்திரத்திற்குத் திரும்பிவிட்டார்.

:(தொடரும்)


# நீரிழிவு, மதுமேகம்

முதலிய சகல நீர் ரோகங்களுக்கு

பண்டிட் ஸ்வாமி ஸ்ரீநிவாஸய்யங்காரின்

## மயூரகாய கற்பம்

ஒரு தெய்வீக சஞ்சீவி !!

இதுவரை இதன் நன்மையைப் பிரபுக்கள் மட்டுமே பெற்று வந்தனர். இப்போது சகல ஜனங்களும் பயன்பெறவேண்டி 20 டோஸ் கொண்ட பொட்டணம் ரூ. 15-8-0 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. 10 நாளைக்கு வரும். அதற்குள் கண்கூடாகக் குணங்காணும். பிரபல இங்கிலீஷ் டாக்டர்களுடையவும், குணமடைந்த பலருடையவும் உயர்ந்த உண்மை அபிப்பிராயங்கள் கொண்ட இலவசப் புத்தகத்திற்கு

இன்றே எழுதுங்கள்.

ஸ்கந்தாசிரமம்

தபால் பெட்டி, 759 : : எழும்பூர், மதராஸ்







சோல்ஜர் உருவம் இல்லாத டின் பிளிட் அல்ல.

தென்னிந்தியாவிற்கு சோல் டிஸ்டிரிபியூட்டர்கள்:—

டி. டி. கிருஷ்ணமாச்சாரி, 11-14, அரமனைக்காரத் தெரு, மதராஸ்.






உங்கள் கூந்தல் ஒளியிழந்திருக்கிறதா ?—அதனுல் உங்களுக்கு வயது அதிகமாகிவிட்டாற்போல் தென்படுகிறதா ?—அப்படியாயின் உங்கள் மருந்து வியாபாரியிடம் ஓடி ஏதாவதொரு சாயத்தை வாங்கித் தடவிக்கொள்ளாதீர்கள். கேஷ்கலாவை உபயோகியுங்கள். அற்புதமான கூந்தல் லோஷன்.

Obtainable from:—

அப்பா & கம்பெனி, சைனுபஜார் ரோட், மதராஸ். வி. ஜே. சேத், பந்தர் தெரு, மதராஸ் டி. ஷேகுஸ்தான் & கம்பெனி, பெங்களூர் சி & டி கண்டோன்மெண்டு. ஸ்ரீ கணேஷ் மார்ட், ராஜா தெரு, கோயமுத்தூர். எக்ஸ்-பி-பேல்வா, பிரின்ஸ் தெரு, கொழும்பு.

Further Inquiries to:—

KESHKALA CHEMICAL CO., P.O. Box No. (M)5506. Bombay 14.

தென்னிந்தியப் பிரமுகர்கள்

# மாயூரம் எஸ். வேதநாயகம் பிள்ளை



நாவல் எனப்படும் நவீனத்தை முதன் முதலில் எழுதிய மாயூரம் வேத நாயகம்பிள்ளை தமிழில் அளவு கடந்த அபிமானம் கொண்டவர். சிறு பிராயத்திலிருந்தே கவிபாடும் திறமை இவரிடமிருந்து வந்தது. மஹா வித்துவான் பிள்ளையவர்களாலும் கோபால கிருஷ்ணபாரதியாராலும் பாராட்டப்பட்ட இவர் இயற்றிய பலநூல்களில் அநேகம் உயர்ந்த பாவங்கள் காணக்கிடக்கின்றன. அவற்றுள் ஒன்றான, "பிரதாப முதலியார் சரித்திரம்" தமிழ் உலகிலேயே ஒரு புத்துணர்ச்சியையும் பரபரப்பையும் உண்டு பண்ணிற்று. இவரது ஜீவிய சரித்திரத்தைக் கீழே காணலாம்.

(1824 — 1889)

(கே. எஸ். ஆர்.)

### நாவலை முதலில் எழுதியவர்

"நாவல் எனப்படும் நவீனத்தை முதலில் எழுதியவர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை யாவார். அவருடைய வசன நடை எளியதாகவும் சுவையுடையதாகவும் இருக்கின்றது" என்று சில வருஷங்களுக்கு முன்பு மஹாமஹோபாத்யாய டாக்டர் சாமிநாதையர் தமது பிரசங்கத்தில் கூறியுள்ளார். வேதநாயகம் பிள்ளைக்குப் பின்பு அனேகர் நவீனங்களை இயற்றி வந்துள்ளனர். காலஞ்சென்ற நடேச சாஸ்திரிகளைப்போன்ற சிலர் இத்துறையில் மிகுந்த கீர்த்தியைச் சம்பாதித்துக் கொண்டவர்கள். நவீனத்தைப்பற்றிய முக்கிய அம்சம் என்னவென்றால் அது படிப்போரின் உள்ளத்தை ஆகர்ஷிக்கவேண்டும். வெறும் பொழுது போக்காக மட்டுமே இராமல், புத்திபுகட்டுவதாக இருப்பது மிகப் போற்றத்தக்கது சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பு வேதநாயகம் பிள்ளை தமது பிரதாப முதலியார் சரித்திரத்தை எழுதி வெளியிட்டு, தமிழுலகில் ஒரு புத்துணர்ச்சியையும் பரபரப்பையும உண்டு பண்ணினார். அவருக்கு முன்பு இந்தப் புதிய வழியைக் கையாண்டவர் ஒருவரும் இல்லை என்று நாம் அறிகிறோம். இவர் எழுதிய இப்புத்தகத்தில் நாம் அனேகம் அருமையான விஷயங்களைக் காண்கிறோம். இந்த நவீனத்தல் கிடக்கும் விஷயங்கள் யாவும் புதியவையல்ல; இவர் நம்மிடையே இதுகாறும வழங்கி வரும் அநேகம் பழைய கதைகளை ஒன்று சேர்த்துத் திரட்டி, அவற்றிற்குகந்த பழமொழிகளுடன் சந்தர்ப்பத்திற்கேற்ப அமைத்து வெளியிட்டிருக்கிறார். இந்தப் புத்தகம் படிப்பதற்கு இன்பம் மட்டுமே அளிப்பதாகவில்லாமல், வாழ்க்கைப் பயணுக்கு வழி காட்டியாகவும் இருக்கிறது எனச் சொல்லலாம். சிறுவர்களுக்கு முக்கியமாக இப்புத்தகம் அவசியமாகும். அராபிய இராக்கதைகளுக்கும், ஆங்கிலத்தில் புனியன எழுதிய "பில்கிரிம்ஸ் ப்ரோக்ரஸ்" போன்ற மதாபிமான சரிதைகளுக்கும் சமமாக இதை நாம் தமிழில் சொல்லலாம். அநேகம் உயர்ந்த பாவங்கள் இதில் காணக்கிடக்கின்றன.

### தமிழில் ஆர்வம்

எல்லாவற்றிற்கும் மேலாக வேதநாயகம் பிள்ளைக்கு தமிழில் அளவுகடந்த அபிமானம் இருந்து வந்தது. "அகஸ்தியர் நாவிலே பிறந்து, ஆரியத்தின் மடியிலே வளர்ந்து, ஆந்திரம் முதலிய பாஷைகளின் தோழமை பெற்று, சங்கப் புலவர்களுடைய நாவிலே சஞ்சரித்து, வித்வான்களுடைய வாக்கிலே விளையாடி, திராவிட தேசம் முழுதும் ஏக சக்ராதிபத்தியஞ் செலுத்தி வந்த தமிழ் அரசியை இப்போது இகழலாமா? நம்மைப் பெற்றதும் தமிழ்; வளர்த்ததுந் தமிழ். நம்மைத் தாலாட்டித் தூங்க வைத்ததும் தமிழ். நம்முடைய மழலைச் சொல்லால் நமது தாய் தந்தையரைச் சந்தோஷிப்பித்ததும் தமிழ்" என்றவாறு இவர் தாய் பாஷையாகிய தமிழின் பெருமையை தமது நவீனத்தில் விஸ்தரித்துள்ளார். ஆயினும் இதே சந்தர்ப்பத்தில் இவ்வாசிரியர் சம்ஸ்கிருதத்தை அந்நிய பாஷையாகக் கருதி எழுதியிருப்பது எங்கும் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது. இது நிற்க இவருக்கு தமிழ் பாஷை மேன்மையுடன் வளர வேண்டும் என்பதே தீவிரமான அபிலாஷையாகும். ஆகவே இவரது ஆர்வத்தில் குறை காணுவது தகாது. இவ்வார்த்தைகளுக்கு தமிழர்கள் ஆங்கிலம் போன்ற இதர பாஷைகளைத் தாராளமாகப் பிரயோகிப்பதே காரணம்போலும்! இவர் அநேகம் தமிழ் கிரந்தங்களை இயற்றினர்; அவை வசன ரூபமாகவும் காவிய ரூபமாகவும் அமைந்துள்ளன. தமது காலத்திலேயே இவர் புகழ் பெற்று விளங்கியவர்; பலரும் இவரை மரியாதையுடன் வரவேற்று வந்தனர்.

### சிறு பிராயத்திலேயே கவிபாடும் திறமை

ஸ்ரீமான் வேதநாயகம் பிள்ளை 1824-ம் வருஷத்தில் திருச்சிராப்பள்ளிக்கடுத்த வெள்ளான்குளத்தூரில், வேளாளர் மரபில், ரோமன் கத்தோலிக் கிறிஸ்துவர் குடும்பத்தில் பிறந்தார். இவரது பூர்வீகர்கள் இதற்கு சுமார் 100 வருஷகாலத்திற்கு முன்பே மதம் மாறியவர்கள். இவரது பூர்வீகர்கள் சோழநாட்டு கங்காகுலத்து சைவ வேளாளர்களாம். இவர் பிறந்த குடும்பம் மிக சாதாரணமானது. இவர் அவ்வூரிலேயே தமது பத்தாவது பிராயம்வரை இருந்து தமிழ் படித்தார். பின்பு தமது 11-வது வயதில் இவர் திருச்சிராப்பள்ளியில் பவுஸ்தாரி டிரான்ஸ்லேட்டரும் இங்கிலீஷில் பூரண ஞானம் படைத்தவருமான ஸ்ரீமான் தியாகுப் பிள்ளை அவர்களிடத்தில் போய் இங்கிலீஷ் பாஷையை அப்யஸிக்கலானர். இளமையிலிருந்தே இவர் புத்தி கூர்மையும் சூக்ஷ்ம கிரஹணமும் வாய்ந்தவர் பற்றி வெகு சீக்கிரத்தில் அப் புதிய பாஷையில் பாண்டித்தியம் அடையலானர். இவரது மதிப்பும் கல்வியும் நாள் தோறும் அபிவிருத்தி யடைந்து வந்தன. சிறு பருவத்திலேயே இவருக்கு கவிபாடும திறமும் அமைந்திருந்தது.

### சட்ட சாஸ்திரப் பயிற்சி

1848-ல் இவருக்கு திருச்சிராப்பள்ளி பிரின்ஸிபல் சதர் அமின் கோர்ட்டில் 5 வராகன் ($17\frac{1}{2}$ ரூபாய்கள்) சம்பளமுள்ள ரிகார்டு கீபர் (தஸ்தாவேஜி பாதுகாப்பாளர்) உத்தியோகம் கிடைத்தது. 1850-ல் திருச்சிராப்பள்ளி டிஸ்டிரிக்டு கோர்ட்டின் பவுஸ்தாரி டிரான்ஸ்லேட்டர் பதவி இவருக்குக் கிடைத்தது. 1856-ல் புதிதாக ஏற்படுத்தப்பட்ட "ப்ளீடர்ஷிப்" பரீக்ஷைக்கு சுமார் 70, 80பேர்கள் ஆஜராயினர். இந்த டிப்ளோமா பரீக்ஷைக்குப் பரீக்ஷகராக விருந்தவர் கும்பகோணம் ஜில்லா ஜட்ஜியாகவிருந்த மிஸ்டர் பீச்சாம்ப் என்பவர். இந்தப் பரீக்ஷைக்கு இவருடன் உட்கார்ந்தவர்களுள் ஜஸ்டிஸ் ஸர் டி. மத்துஸ்வாமி அய்யரையும், திவான்பஹதூர் ஆர். ரகுநாதராயர் அவர்களையும் குறிப்பிடவேண்டும். இப் பரீக்ஷையில் இவரும் மேற் குறிப்பிடப்பட்ட இருவர்களும தேறி சர்டிபிகேட்டுகள் பெற்றுக் கொண்டனர். இதனல் சட்ட சாஸ்திரத்தில் இவருக்கிருந்த நைபுண்ணியம் விளங்கும். (பிற்காலத்தில் இவர் மாயவரத்தில் இருந்தபோது ஸர் டி முத்துஸ்வாமி அய்யரும் அவ்வூரில் அடிக்கடித் தமது காலத்தைக் கழிப்பது வழக்கம். அப்போது அவரும் இவரும் ஒருவரோடொருவர் நெருங்கிப் பழகி, தமிழ் முதலிய பல விஷயங்களைப்பற்றியும் சதா சம்பாஷிப்பது வழக்கமாம்).

### முன்சீப் உத்தியோகம்

பரீக்ஷையில் தேறிய பின்பு 1857-ல் இவர் தரங்கம்பாடியில் முனிசீபாக நியமிக்கப்பட்டார். மறு வருஷம் இவர் சீர்காழியில் முனிசிபாகவும் இருந்தார்; 1859-ல் இவர் மாயூரம் முனிசிபாக நியமிக்கப்பட்டார் இவ்வாறு இவ்வுத்தியோகத்தில் 1872-ம் வருஷம் வரையில் இருந்து நீதி நடத்தி வந்தார். இச்சமயத்தில் இவருக்கும் ஜில்லா ஜட்ஜியாகவிருந்த மிஸ்டர் செல்லன் துரைக்கும் மனஸ்தாபம் மிக ஏற்பட்டது. இதனல் மனவருத்தமுற்ற இவர், தமது தேக ஸ்திதியையும் காரணி

பென்ஷன் பெற்றுக்கொள்வதே தகுதியாகும் என நிச்சயித்து, அவ்வாறே உபகாரச் சம்பளத்துடன் விலகிக்கொண்டுவிட்டார். பென்ஷன் பெற்றுக்கொண்டபோது இவர் முதலாவது கிரேட் முனிசிபாகவிருந்தார்; ஆகையால் இவருக்கு சம்பளத்தில் மூன்றிலொரு பாகம் பென்ஷனுகக் கிடைத்தது.

### தெய்வ பக்தி

இவர் எப்போதும் தெய்வ பக்தி நிறைந்தவர். உத்தியோகத்தில் தங்குவதால் பரம்பொருளைப் பஜிக்க இயலவில்லை என இவர் கருதியவர். "ஐயன் பாதத்தை நினைப்பது எப்போது நெஞ்சே" என்பதே இவரது தியானம். வேலையை உதறித் தள்ளிய காலத்தில் இவர் பாடிய கவிகளுள் பின் வருவது ஒன்று:— "தண்டுகொட்டோட்டினும் போகாமனம்மைத்தரிசிக்கவே, பண்டு வந்தோர்க் கின்று தாம்பூலம் வைத்துப் பரிந்தழைத்துந், திண்டுமிண்டுஞ் சொல்லிவாராதிருப்பவர் செய்கை யெல்லாம், கண்டுகொண்டோமினித் தொண்டு கொண்டோ நங்கடவுளுக்கே" இப்பாட்டிற்கேற்ப இவர் முன்னிலும் அதிகமாகக் கடவுள் மீது பல பிரபந்தங்களும் பாக்களும் இயற்றினர். இவர் எப்போதும் தமது கௌரவத்தை இழந்தவரில்லை.

சிலகாலம் மாயவரம் முனிசிபல் கவுன்சில் சேர்மனுகவும் இருந்தார். இக்காலம் முழுமையும் மாயூரத்தின் அபிவிருத்திக்காக இவர் பலமுயற்சிகளைப் பின்பற்றி மிகவும் வருந்தியுழைத்தார். இதனுல் அவ்வூருக்கு அநேகம் நலன்கள் ஏற்பட்டன. இதுதவிர இவருக்குப் பரோபகார சிந்தனையும் உண்டு பிறருக்கு இவர் உத்ஸாஹத்துடன் உதவியவர். கிறிஸ்தவ மதத்தினராயினும் எல்லா மதத்தவரிடமும் இவர் அன்புடையவர். இவர் திரிசிரபுரம் மஹா வித்வான் மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடம் பாடம் கேட்டவர்.

### கோபால கிருஷ்ண பாரதியாருடன் பழக்கம்

இவரது சங்கித ஞானத்தைப்பற்றிப் பின் வரும் மஹா மஹோபாத்யாய டாக்டர் சாமிநாதய்யரவர்களின் வார்த்தைகள் எடுத்துரைக்கப்பட வேண்டியதவசியம். "இனிய செய்யுட்களை எளிய நடையில் இயற்றும் பழக்கமுடையவர்; தமிழில் கீர்த்தனங்களையும் இயற்றியிருக்கிருர். அவருக்கு இயல்பாக சங்கீதப் பயிற்சி இல்லை எனினும் யாரேனும் ஒருவர் ஒருகீர்த்தனத்தைப்பாடக் கேட்டால் அந்த மெட்டை வைத்துக்கொண்டு புதிதாக ஒரு கீர்த்தனத்தை இயற்றிவிடுவார். அங்ஙனம் அவர் இயற்றிய கீர்த்தனங்களை அவர் கோர்ட்டில் உள்ள உத்தியோகஸ்தர்களிலும் வக்கீல்களிலும் ஸங்கீத ஞானமுள்ளவர்கள் தாமே மனனம் பண்ணி அன்புடன் பாடுவார்கள்; தங்கள் குழந்தைகளுக்குங்கற்றுக் கொடுத்துப் பாடச் செய்வார்கள். இச்செயல்களாலும், அக்கீர்த்தனங்களின் எளிய நடை, தொடர்ந்த பொருட்சிறப்பு முதலிய அழகிய அமைப்புகளாலும், அவை மாயூரத்திலும் அதைச் சார்ந்த இடங்களிலும் மிகுதியாக வழங்கி வரலாயின. வேதநாயகம் பிள்ளை சீர்காழியிலிருந்த போதே கோபாலகிருஷ்ண பாரதியாரைப் பற்றி அறிந்தவராதலின், மாயூரத்திற்குப் பின்னர் இவரது பழக்கத்தை முயன்று பெற்றுக்கொண்டார். இவர் இயற்றிய கீர்த்தனங்களை, அறிந்தவர்களால் அடிக்கடிச்சொல்லக் கேட்டு மகிழ்வார்! அவற்றைப் பின் பற்றித்தாம் இயற்றிய கீர்த்தனங்களை இவரிடம் காட்டி, சங்கீத சம்பந்தமாக இவர் கூறும் யோசனைகளைக் கேட்டு அவற்றிற்கேற்ப அமைப்பார். இங்ஙனம் பழகிவந்ததால் இருவருக்கும் இருந்த அன்பு வளர்ச்சியுற்றது."

### மஹா வித்துவான் பிள்ளையவர்கள் பாராட்டு

இவர் அடிக்கடி துறைசை ஆதினத் தலைவரான ஸ்ரீலஸ்ரீ சுப்ரமணிய தேசிகரிடம் சென்று வருவதுண்டு. ஒரு சமயம் இவர் திருவாவடுதுறைக்குச் சென்று ஆதீன கர்த்தர்கள் மீது சிலசெய்யுள்களை இயற்றிக் காட்டியபோது மஹா வித்துவான் பிள்ளையவர்கள் இவர்மேல் இரண்டு செய்யுட்களை இயற்றினர். அவை யாவன:—"தருவே சிந்தாமணியே என்று பாவலர் சாற்றிடவும், பொருவேது மின்றியுந்தானே தனக்கொத்துப் பூமிசையே, இரு வேறுலகத்தியற்கைக் குறளையெதிர் மறுத்து, வருவேத நாயகமானீடுவாழ்கவிம்மா நிலத்தே (1). தேனென்றெடுத்துப் புகல்கோ வடித்திடுந்தெள்ளமுதம், தானென்றெடுத்துப் புகல்கோ சிறந்த தமிழ்ப்புலவோர், வானென்றெடுத்துப் புகல்வேத நாயகமால்கவியை, நானென்றெடுத்துப் புகல்வோருமுண்டு கொல்மாநிலத்தே" (2). பிள்ளையவர்கள் இவரைப்பற்றிப் பாடியிருக்கிருர் என்பது ஒன்றே இவரது பெருமைக்குப் போதுமான அத்தாக்ஷியாகும். ஒரு சமயம் ஸ்ரீ சுப்ரமணிய தேசிகருக்கு இவர் செய்யுள் வடிவமாக ஒரு கடிதம் எழுதிவிடுத்தார். இவருக்குப்பல தமிழ்ப் பெருமக்களின் நட்பு வாய்த்திருந்தது.

### பாரதியார், இயற்றிய ஒரே நரஸ்துதி

60-வருஷங்களுக்கு முன்பு அதாவது கடந்த தாது வருஷத்தில் இங்கு கோடிய பஞ்சம் ஏற்பட்டு ஜனங்கள் பலவித உபத்திரவங்களுக்கும் ஆளானதுடன் எங்குபார்த்தாலும் விபரீதங்கள் நேர்ந்தன. இறந்தவர்களின் ஜனத்தொகை அப்போது வலுத்திருந்தது. இச்சமயம் இவர் தாமும் பல தனவந்தர்கள் மூலமாகவும் வருந்துபவர்களுக்குப் பொருளுதவி செய்தும் இன்னும் இதரவழிகளிலும் உதவிசெய்தார். இதனுல் பல ஏழைகள் திருப்தியுற்றனர். இந்த தர்மச்செயலைக் கண்ட கோபால கிருஷ்ணபாரதியார் ஆத்மத்ருப்தியுடன் இவர் மீது "நீயே புருஷமேரு" எனத்தொடங்கும் கீர்த்தனத்தைப் பாடினர். "பாரதியார் இயற்றிய கீர்த்தனங்களுள் இஃதொன்றே நரஸ்துதியாகவுளது. வேறு எந்த சமயத்திலும் யார் மீதும் செய்ததாகத் தெரியவில்லை" என்பது மஹாமஹோபாத்யாய அய்யரவர்களின் கருத்தாகும்.

### பிரதாப முதலியார் சரித்திரமும் இதர நூல்களும்

நீதி நூல், பெண் மதி மாலை, பிரதாப முதலியார்சரித்திரம், சுகுண சுந்தரி சரித்திரம், சர்வ சமயசமரஸக் கீர்த்தனைகள், சத்திய வேதக் கீர்த்தனை, திருவருள் அந்தாதி, திருவருள் மாலை, தேவமாதா அந்தாதி, தேவோத்திர மாலை, பெரியநாயகி அம்மன் பதிகம், தயாபரக் கண்ணிகள், பல தனிப் பாடல்கள் ஆகியவை இவரால் இயற்றப்பட்டவை. நீதிநூலில் பல நீதிகளைப்பற்றி அழகாக இவர் எழுதியுள்ளார். 1872-ல் பிரதாப முதலியார் சரித்திரம் வெளியிடப்பட்டது. இப்புத்தகத்தில் தமது அரிய அபிப்பிராயங்களை இவர் ஸ்பஷ்டமாகவும் தைர்யமாகவும் வெளியிட்டிருக்கிருர். இதில் ஹாஸ்ய ரஸம் விசேஷமாகத் ததும்புகிறது. நீதிகள் நன்கு பதியத் தக்க விதத்தில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. இவரது வசனத்தை "வசன பூஷணம்" என்றும் "மணி வாசகம்" என்றும் சொல்லலாம் என்று ஸ்ரீமான் செல்வ கேசவராய முதலியார் புகழ்ந்து கூறியுள்ளார். 1887ல் இவர் எழுதிய சுகுண சுந்தரி சரித்திரமும் சிரேஷ்டமானது. இதில் கல்விப் பயிற்சி, கடவுளின் தன்மை, ஜீவகாருண்ணியம், ஆசாரியல்பு, இல்லறவியல்பு, பரோபகாரம், சோம்பல், பொறுமை, புறங் கூறல், துராசை, துர்போதனை, அவதூறு, பொய், மெய், புருஷ பாரியை இயல்பு, கல்யாண உடன்படிக்கை, சுகாதார விதிகள், பால்ய விவாகத்தினுல் உண்டாகும் கெடுதி ஆங்காங்கு விநோத சல்லாபமாக அபரிமிதமாகப் பிரசிங்கிக்கப்பட்டிருக்கின்றன. அறிவைப் பெருக்குவதற்கு சாதனமென இது யாவராலும் அச்சமயமே பஹுமானிக்கப்பட்டது 1869ல் பெண்மதி மாலை இவரால்பிரசுரிக்கப்பட்டது; இதில் இரண்டு பாகங்கள் இருக்கின்றன; முதல் பாகம் செய்யுள் வடிவத்தில் பெண்டிருக்குப் புத்திமதி கூறுகிறது; இரண்டாவது பாகம் பெண் கல்வியைப்பற்றிய வியாஸமாகும். இது மூன்ருவது முறை பதிப்பிக்கப்பட்டது. இவரது பிரதாப முதலியார் சரித்திரம் தான் பிரசித்தமானது. இது பன்முறை அச்சிடப்பட்டு சர்வ கலாசாலை வகுப்புகளுக்கும் பாடபுத்தகமாக வைக்கப்பட்டது. இதில் முக்கிய அம்சம் யாதெனில் இதில் தென்னிந்தியாவின் வாழ்க்கை நடவடிக்கை முறைகள் விவரிக்கப்பட்டிருப்பதேயாம். இப்புத்தகம் தமிழ் நூல்களுக்குப் புதிய மார்க்கத்தைக்காட்டியது எனலாம்.

### "சித்தாந்த சங்கிரஹம்"

இவர் 1805-ம் வருஷம் முதல் 1862-ம் வருஷம்வரையிலும் உள்ள ஹைக்கோர்ட்டு தீர்ப்புகள், திட்டங்கள் முதலியவற்றை சங்கிரகமாக தமிழில் மொழிபெயர்த்து "சித்தாந்த சங்கிரஹம்" என்ற பெயருடன் அச்சிட்டுப் பிரசுரித்தார். இது அந்நாளில் ஆங்கிலத்தில் பயிற்சி அதிகமாகயிராத அநேகம் வக்கீல்களுக்கு அதி உபயோகமாகவிருந்தது. இந்த முறை பின்பு பலராலும் பின்பற்றப்பட்டது.

இவரது சர்வசமய சமரஸக் கீர்த்தனைகள் இவரது பரந்த நோக்கத்தையும் விசாலபுத்தியையும் கோஷிக்கின்றது. இவ்வாறு தமிழுலகிற்குச் செய்த தொண்டினுலும் மற்றும் இதர நற்காரியங்களினுலும் மாயூரத்தில் இருந்தது மிகுந்த பெருமையுற்ற எஸ். வேதநாயக முதலியார் 1889-ம் வருஷம் ஜூலைமாதம் 21-ந் தேதியன்று காலமானர். இதற்குமுன்பு சில மாதகாலமாகவே இவர் நோயால் துன்புற்றிருந்தார். இவர் தம் வாழ்நாள் முழுமையும் அனைவராலும் விசுவாசத்துடன் வரவேற்கப்பட்டு வந்தார். இவரது மரணத்தைப் பற்றிப் பல பத்திரிகைகளும் துக்கித்தன. மஹா வித்வான் பிள்ளையவர்களால் இவர்மீது "குளத்தூர் கோவை" என்றொரு பிரபந்தம் செய்யப்பட்டிருக்கின்றது. அதிலுள்ள பின்வரும் கவி இவரது சிறப்பை சரிவர எடுத்துரைக்கும். "கனியிற் பொலி பொழில் சூழ்குளத்தூரான் கரிகறுத்த, வனியிற் பொலியும் புகழ் வேதநாயக வள்ளனட்புநனியில் கருப்பு தினல்போலினிக்குநவலரிய, பனியிற் பொலிபிறைபோல் வளராநிற்கும் பான்மதியே" என்று.


ஜகத்ரக்ஷக
ஸ்ரீ ஷண்முக யந்திரம்
125,6600 ஜனங்கள் போற்றுவது
பரிக்ஷை வெற்றி, ஜீவன விருத்தி, சொற்பன மிரட்சி, சத்துரு அடக்கம், வழக்கு ஜெயம், புத்திர விருத்தி, குடும்ப ஒற்றுமை, நோய்பேய் ஒழிதல், யந்திரம் 1க்கு ரூ. 2.
மாந்திரீக மருத்துவ ஆபீஸ்,
வாலாஜாபாத், P.O, S.I.R. சென்னை.

ரேகை சாஸ்திரம்




கால் கட்டை விரலைப் பிடித்த ஸ்ரீ கிருஷ்ணன்

# கை விரல்களில் கிரஹங்களின் சம்பந்தம்

—:[o]:—

" சக்திதாஸன் "

நகங்களைக் கொண்டு வினைப் பயனைக் கண்டுகொள்ள வழியாகாது. ஆனால் தேக ஆரோக்கிய நிலைமையை அறிய நல்ல சாதனமாகும். வாயு, நரம்பு, சம்பந்தமான வியாதிகளைக் குறிப்பிட்டுக் காட்டும்.



## ஆரோக்கியமான நகங்கள்

நீங்கள் புத்திசாலியாயிருப்பின் சந்தர்ப்பம்போல் உங்கள் கை நகங்களைக் கவனித்துப் பாருங்கள். கண்ணாடிபோல் வரப்போகும் வியாதியை நகங்களிலிருந்து தெரிந்துகொண்டு தக்க பரிகாரங்களை அப்பொழுதே தேடிக்கொள்ளுங்கள். இங்ஙனம் ஆரோக்கிய நிலைமையைப் பாதுகாத்துக்கொள்ளலாம்.

நல்ல ஆரோக்கிய முள்ளவர்கள் கை நகம் ரோஜாமாதிரி சிவந்திருக்கும். மத்தியில் வெள்ளைக் குறியும் காணப்படும். நகம் அகண்டிருப்பதைவிட நீண்டும் இருந்தால் நல்லது. நகத்தின் அடிவாரம் நன்கு வளைந்திருப்பது சிலாக்கியமானது. இத்தகையோர் சம புத்தி, தீர்க்காலோசனை எத்துணை அவசரத்திலும் நிதான சிந்தனை முதலியவைகளை உடையவராயிருப்பர். இன்னும் முடிவான தீர்ப்பு கூறுவதால் மிக்க மரியாதைக்குட்பட்டவராவர். நகத்தில் பெரிதான இளம்பிறை வெண்மையாயிருந்தால் திடமான இருதயத்தை யுடையவர் என்பதைக் குறிக்கும்.


நகம் மிகச் சிவப்பாயிருந்தால் கடினமான ஆகாரத்தை நீக்கவேண்டும். பழவகை நல்லது. இந்தச்சிவப்பு மிகுதியாய் காணப்படுதல் தேகத்தில் அளவுக்கு மிஞ்சியரத்தம் உண்டாவதைக் குறிப்பிடும். இது தடுக்கப்படாவிடில் உடனே நோய்க்கு இடமாகும்.

நகம் மஞ்சள் நிறமாயிருந்தால் சோகைக்கடையாளம். நகம் நீல நிறமாயின் இருதயத்திலுள்ள பலஹீனத்தைக் குறிக்கும். நகங்களின் அடியில் நீல நிறம் ஆரம்பித்திருந்தால் அதிக ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

நகத்தில் மேடுபள்ளமான வரை—கோடு — காணப்படில் வாயு சம்பந்தமான நோயைக் குறிக்கும்.

### குறுகிய நீண்ட நகங்கள்

முதலாவது படத்திலுள்ளது நீண்ட நகம். அகலத்தைவிட நீளம் அதிகம். இது நல்ல யோசனையுள்ளவர் என்பதைக் குறிக்கும் இன்னும் சங்கீதம், கவிகள் முதலியவைகளில் அதிகப் பிரியமுள்ளவராயிருப்பர். விவகாரங்களில் மிக நிதானமாய் நடந்து கொள்வார்.



பலவகை நகங்கள்

இரண்டாவது படம் குறுகிய நகம். ஆனால் அகலம் சற்று அதிகம். இது வாதிக்கும் தன்மையைக் குறிக்கும். லாயர்களுக்கும், தார்க்கிகர்களுக்கும் அமைந்திருக்கும். இன்னும் துப்பறிபவர்கள் இயற்கையில் நுண்ணறிவு பெற்றவர்கள் தன் காரிய நலத்தை உத்தேசித்து தமாஷாய் பேசுபவர்களுக்கும் இம்மாதிரியேயிருக்கும்.

மூன்றாவது படம் குறுகிய நகம். இது நீளத்தைவிட அகலமே அதிகம். நகத்தில் சிவப்புக் குறி காணப்படில் அவர்களோடு ஜாக்கிரதையாய்ப் பழகவேண்டும். அல்ப விஷயத்திலும் கோபங்கொள்வர். கோபக் குணமும், சிடு சிடுப்பும் முன்னிற்கும். தேகத்தில் நரம்புகளின் அமைப்பே அதற்குக் காரணம்.

இனி நான்காவது படத்தைப் பாருங்கள். இது முக்கோணமான நகம். இம்மாதிரி நகமுள்ளவர் அதிக ஜாக்கிரதையாய் தேகத்தைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டும். இது தேகத்தில் ரத்த ஓட்டக் குறைவைக் குறிக்கிறது. திடீரென பாரிச வாய்வுக்குக் காரணமாகிவிடும். தேகமுழுதும் ரத்த ஓட்டம் வியாபித்திருக்கும்படி தக்க பரிகாரம் செய்து கொள்ள வேண்டும்.

### கால் கட்டை விரலும் குழந்தையும்

வாழ்வின் சூத்திர விளக்கம் சிசுக்கள். பிறந்த சிலகாலத்துக்குள் கை பெருவிரலைப் பிடித்து வாயில் வைத்துக்கொள்வதை



கை விரலைச் சப்பும் குழந்தை

சாதாரணமாய் எல்லா உயர்வான குடும்பங்களிலும் பார்த்துவரலாம். கால் கட்டை விரலை வாயில் வைத்துக்கொள்ளும் குழந்தைகளைக்காண்பது அரிது. அத்தகைய குழந்தை எந்த ஜாதியில் பிறந்தபோதிலும் அதன் எதிர்காலத்தைக் கவனிப்பது நல்லது. இம்மாதிரி ஆவிலைக் கிருஷ்ணனைப் பார்க்கலாம். அதாவது ஸ்ரீவிஷ்ணு ஸ்ரீ கிருஷ்ணனாக அவதரித்தபோது சிசுவாயிருந்த காலத்தில் கால் பெரு விரலை வாய்வரை வைத்திருந்ததாக சாஸ்திரம் கூறுகிறது.

அந்த விரலின் மர்மமென்ன? ஸ்ரீ ராமாவதாரத்தைவிட, ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்தில்பூரண ஞானம் பெற்றிருந்ததாகச் சொல்லப்படுகிறது. அதாவது தன்னை (தற் சொரூபத்தை)யும் அன்னியத்தையும் அறிந்து அதற்கு (காரண காரியத்துக்கு) அதிதமான நிலையிலும் இருந்தார் என்பது பகவத்கீதையால் பிரகாசிக்கின்றது. கால் கட்டைவிரலைப் பற்றி வாய்வரை வைத்துக்கொள்ளும் குழந்தைகளுக்கு ஸ்ரீ கிருஷ்ண பராக்கிரமம் இல்லாது போயினும், குறைந்த அளவில் கணக்கிட்டாலும், அதற்கு திரிகால ஞானம் இயற்கையாய்

திரிகால
ரேகை சாஸ்திரம்
சக்திதாசன் எழுதியது.
விலை அணா 10.
'மித்திரன்' ரெயில்வே புத்தகசாலைகளிலெல்லாம் கிடைக்கும்.

வலுவூட்டும் சிறந்த டானிக்
வெப்ஸ்டர்ஸ் பாஸ்பாடம்
கிருஷ்ணராஜ் & கம்பெனி, மெத்தையில் ஆபீஸ்,
மருந்து வியாபாரிகள், சைனபஜார் ரோட், மதராஸ்
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்

அமைந்திருக்குமென்பதாம். இதை ரேகை சாஸ்திரத்தில் மிக்க மேன்மையாய்ப் புகழப் படுகிறது. இந்த மர்மம் இந்தியாவுக்குப் புதியதல்லவென்றும். அயல் தேச விஞ்ஞான சாஸ்திரிகள் இப்பொழுது தான் ஆராய்கின்றனர். எனவே ஆக்கவும் அழிக்கவும் அனுக்கிரகிக்கவும் உள்ள சக்தி இததகையோருக்குண்டென்பது விளங்கும். திரிகால ஞானமுள்ள மேதாவிகளுக்கு எல்லா சுக துக்கங்களையும் சமபுத்தியோடு பார்ப்பர்—விளங்கும். சட்டதிட்டங்களும் அவர்கள் கைக்குள்ளே. கிரகங்களை தங்கள் ஆக்ஞைக்கு உட்படுத்திக் கொள்கின்றனர். கிரகராசிகளை அறிந்தவன், முதலாவது தன் நிலையைத் தெரிந்து கொள்வானன்றோ! பிறகு மற்றவர்கள் நிலைமையை ஒப்பிட்டுப் பார்க்கிறான்.

### தீர்க்க தரிசனம்

ஜீவாத்மா சமுத்ரம்போன்ற அனுபவத்திலிருந்து உதிக்கிறது. ஸ்தூல தேக சம்பந்தமிருப்பினும் (முன் பின் இல்லாதது தோன்றினாலும்) எதற்காகப் பிறந்தோம், சுகானுபவத்தை எப்படி அடைகிறது என்ற இரண்டு பிரச்னைகள் உண்டாகின்றன. சாமுத்ரிகம் வாழ்வின் மர்மங்களைத் தெரிவித்து தீர்க்கதரிசனத்துக்கு ஆளாக்குகிறது. நல்ல அறிவுள்ளவன் அறிந்தாக வேண்டியது அவசியமாகிறது. ஆயினும் அது அபூர்வமே. ‘விளையும் பயிர் முளையிலேயே தெரியும்’ என்பதுபோல் இளமையில் அநேக உண்மைகள் விளங்கும். விளையாடுகிறவர்களுக்கு பேர்த்தியான விளையாட்டு ஸ்தலமாகவும் வேலைக்காரனுக்கு எல்லாம் அமைந்த தொழிற்சாலையாகவும், கவிவாணர்களுக்கு வனப்புள்ள சிங்கார வனமாகவும், கனவு காண்பவர்களுக்கு ஆகாசக்கோட்டையாகவும், அனுபவிகளுக்கு இருப்பிடமாகவும் அமைகிறது.

### கைவிரல்களில் கிரகங்களின் சம்பந்தம்

“ஒரு ஞானி ஒரு மரத்தைப் பார்ப்பதுபோல் மூடன் பார்க்க முடியாது” என்பது ஒரு பழமொழி. இது உண்மையென்று அனுபவத்தில் கண்டு கொள்ளக்கூடியதே. ஞானி அன்போடு, எங்கும் நிறைந்த தெய்வத்தை உணருகிறான். ஆகையால் அவன் உள்ளத்தில் களங்கமில்லை. மூடன் தோற்றமெல்லாவற்றையும் தீதாகவே பார்க்கிறான். குரூரம் உள்ளத்தில் குடிகொண்டிருக்கிறது.

தோற்றம் யாவும் போலி என்பதை நாமறிந்ததே. எனினும் ‘முத்தை வேண்டியவன் கடற்குள் மூழ்கவேண்டும்’ என்பதுபோல ஆராய்ச்சி ஞானத்தினால்தான் மேற்சொன்ன இரு பிரச்னைகளின் விடையைத் தெரிந்துகொள்ளலாம்.

குழந்தை ஜனிக்குமுன், தாயின் மற்ற அங்கங்களைப் போல் உயிர்ப்புடன் இருந்தது. ஆயினும் உயிருக்குள்ள ஞானம் இன்னும் பூரணமாக வேண்டும்.

குழந்தை பிறந்த காலை வானத்தில் கிரக நிலையின் சம்பந்தம் கணக்கிடப் படுகிறது. பூமிக்குள்ள சம்பந்தத்தையே (அண்டத்திலுள்ளது பிண்டம்) ஜனிக்கும் குழந்தைக்கும் என்பது உள்ளீடான மர்மம். முதலாவது நட்சத்திரம் இன்னதென்றறிந்ததும், அதன் ஆட்சி நிலை ஆராயப்படுகிறது. இந்த நட்சத்திர சக்தியின் வேகம் தேகம் முழுதும் வியாபித்துக்கொள்கிறது. இதில் சப்த கிரகங்களின் திரவ வஸ்து, பிரகாசத்தைப் போன்று, சப்த வர்ணங்களும் ஓரம்சமாய் கலந்திருக்கிறது.

குழந்தை ஜனித்தவுடன் மடக்கப்பட்டிருந்த இரு கை விரல்களும் (முயற்சியின்றி) தானே நன்றாய் விரிகின்றன. பிரசவ காலத்தில் அருகிலுள்ள டாக்டர்களும் நர்சுகளும் அறிந்திருக்கலாம். இந்த விரல்களின் வழியே சக்தி தேகத்தில் பாய்ந்த பின்னரே வெளியேயுள்ள காற்றை சுவாசாசயம் உள்ளே இழுக்க ஆரம்பித்ததும் குழந்தையின் முதல் சப்தம் கேட்கிறது.

சிசுவின் கை தானே விரிந்து விரல்கள் தானே நீண்ட இமைப் பொழுதில் அப்பொழுது ஆட்சியிலுள்ள கிரகங்களின் நிலைமைக்கேற்றபடி, சிசுவின் தேகதத்துவங்கள் அமையப் பெற்று, அப்போதைய நக்ஷத்திரம் அதற்கு உரித்தாகிறது. அப்பொழுதே சிற்சில ரேகைகளும் அமைகின்றன.

ஆண்களுக்கு வலது கையும் பெண்களுக்கு இடது கையும் விர்த்திக்கானவையாதலால் அபிவிர்த்தியை அப்போதைக்கப்போது கண்டு கொள்ளலாம்.


நஞ்சன்கூடு பல்பொடி ப்ராகடெரியின்

**கூலாயில்**

சிறந்த ஸ்நானத் தைலம்

அணா3 யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதறாஸ் ரூ. 1.

(முக்கிய ஊர்களில் டிப்போ ஏற்படுத்துகிறோம்.)

# அதி அற்புத அழகு

சுகாதாரம் மிகுந்த

## டில்பஹார் ஸோப்பு



(ரிஜிஸ்டர்ட்)

மூன்று கட்டிகளின் விலை

**ஒரு ரூபாய் தான்**

(தபால் செலவு தனி)

டில்பஹார்ஸோப்பு சிறந்த சுத்தி கரிப்பைத் தரும் கிருமி நாசினி.

சரும எரிச்சல் அல்லது அரிப்பை அகற்றிச் சருமத்தைப் பாதுகாக்கும் அழகை விருத்திசெய்யும்.




## உங்கள் சருமத்தைப் பாதுகாருங்கள் !

ஆட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்களும், இதர பெண்களும் காமினியா ஸ்னோ வின் சருமப் பாதுகாப்பையும், போஷாக்கையும் பெரிதும் பாராட்டுகிறார்கள். சருமத்திற்குப் புத்துயிரும், உல்லாசமுமளிப்பது. சருமச் சுருக்கங்கள் முதலியவற்றை நீக்குவதில் சிறந்ததென சிபார்சு பெற்றது. விலை புட்டி 1-க்கு 10 அணா. தபால் செலவு தனி. தபால் செலவுக்காக 1 அணா ஸ்டாம்பனுப்புவோருக்கு சாம்பிள் இலவசம்.

சோல் ஏஜண்ட் :—

**The Anglo Indian Drug & Chemical Co**

**285, Jumma Musjid, BOMBAY 2.**

ஸ்டாக்கிஸ்டுகள் : ஜே. எஸ். சேட் & கம்பெனி,

68, பைக்ராப்ட்ஸ் ரோட், — திருவல்லிக்கேணி

# ஏமாறுதீர்கள் !

எங்கள் வைத்தியசாலையின் மருந்துகள் மிகவும் சிலாக்கியமானது எனப்பலராலும் புகழப்பட்டு வருதல் கண்டு, சிலர் வேறு மருந்துகளை எங்கள் மருந்துகள் அதாவது சி. எம். சாமி மருந்துகள் என்று சொல்லி ஏமாற்றி விற்பனை செய்து வருகிறதாகத் தெரிகிறது. எங்கள் வைத்தியசாலையிலிருந்து வெளி இடங்களுக்கு நாங்கள் யாரையும் அனுப்பவில்லை. எங்கள் ஏஜண்டு என்றும், எங்கள் மருந்துகள் என்றும் யாராவது விற்பனை செய்தால் அதைப் பொதுமக்கள் வாங்கி மோசம் போகாமல் இருக்கும்படி எச்சரிக்கிறோம்.

மருந்து வேண்டியவர்கள் நேரே எமக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**மலையப்பசாமி வைத்தியசாலை,**

**பழனி, S. I.**

# “மாடர்ன் டயமண்ட்ஸ்”



ஐரோப்பியா, இந்தியா வைரவியாபாரிகளால் போற்றப்பெற்றவை. ஹைகோர்ட்டு நீதிபதிகள், ராஜாக்கள், ஜெமீன்தார்கள், பிரபுக்கள் முதலியவர்களால் உபயோகிக்கப்படுபவை.



இழைக்கப்பட்ட ஆபரணங்கள் அருமையான அமைப்பும், நேர்த்தியும், அழகும் மிகுந்தவை.



ஒரு முறை பரீக்ஷித்து உண்மை அறியுங்கள்.

**வி. வி. ஆச்சார்யுலு & ஸன்,**

S—63, பொன்னப்ப செட்டி தெரு, பார்க் டவுன், மதராஸ்.

## கிருஷ்ண தேவராயர்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

வைத தாக்குகிறான் பச்சராசும் கொண்டமராசும் வருகிறார்கள்)

பச்ச-கொண்:— அரசே! அரசே!! என்ன அக்கிரமம்? துரோகமா? நல்ல வேளை! உயிர் தப்பினீர்.

கி. தே:—என்ன! சமாசாரத்தை நன்கு தெரிவிப்பீர்.

பச்ச:—இவ்வீரன் உம்மைக் கொல்வதற்குப் பாய்ந்தான். சமயத்தில் தோன்றிய இவ்வாலிபனால் காப்பாற்றப்பட்டீர்.

கி தே:—ஜக்கய்யனா! ஆச்சரியம். பச்சராசு! ஜக்கய்யனைச் சந்தேகித்த உம் மனது மாறுபட்டதா?

பச்ச:—(வெட்கி) அரசே, மன்னிக்கவேண்டும். அப்பொழுதே திருத்திக்கொண்டுவிட்டேன்.

(மூர்ச்சித்த வீரன் சமாசாரம் உணர்ந்து அரசனை வணங்குகிறான்.)

பொம்:—அரசே! ஏழையை மன்னித்துக் காப்பாற்றவேண்டும் குணமறியாது பழித்தேன்.

கி. தே:-வீரனே, என் உயிர் அச்சிறுவன். ஆதலின் அவனிடம் மன்றாடுவாய்.

கொண்:—(மறுபுறம்) பச்சராசு! அச்சிறுவன்மீது அரசருக்குள்ள அன்பைக் கவனித்தீரா!

பச்ச:—இருக்க வேண்டியது இயற்கைதானே? அரசன் உயிரைக் காப்பாற்றியவனன்றோ?

பொம்மராசு, ஜக்கய்யாவைப் பணிகிறான்.

ஜக்க:—வீரனே! அரசருக்காக உன்னை மன்னிக்கிறேன். இதற்குக் கைமாறாக இச்சண்டையில் வீரத்துடன் யுத்தம் புரிவாய்.

கி. தே:—ஜக்கய்ய! என்னையுமறியாது ஓர் பந்தம் என்னை உன்னுடன் பிணைக்கிறது இவ்வுதவிக்கு என்ன கைமாறு வேண்டுகிறாய்?

ஜக்க:— (புன்சிரிப்புடன்) அரசே! உயிருக்குயிர் ஆதலின் வரும் யுத்தத்தில் பிரதாப ருத்திர கஜபதியைக் கொல்லாதீர். ஏனெனில், அவரது மகளாகிய ஜகன்மோகினியை நான் காதலிக்கிறேன்.

கி-தே:-அப்படியா? மெத்த சந்தோஷம். அய்யமராசு வருதல்.

அய்ய:—அரசே! தங்கள் வரவுக்குத் தலைவர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

கி. தே:—இதோ ஓர் நொடியில் வந்துவிடுகிறேன் யாவரும் செல்லுங்கள். [செல்கிறார்கள்.] (அரசன் மண்டியிட்டு) வடக்குமலையானே! என் வீரர்களிடம் குடிகொள்வாய். அவர்கள் பயத்தைப் போக்கி வெற்றியை அளிப்பாய். ஸ்ரீனிவாச எம்பெருமானே! பக்தனைக் கைவிடாதே.

சாளுவதிம்மர் வருதல்.

சா. தி:—அரசே!

கி. தே:—நீர் வந்த காரியம் அறிவேன். முக்கியமாக ஒன்று எக்காரணமும் கொண்டு கஜபதியைக் கொல்லலாகாது. உயிருடன் சிறை பிடிக்க வேண்டும். இவ்வுத்தரவைப் பிரகடனம் செய்வீர். வாரும் போகலாம்.

(செல்கிறார்கள்)

### காட்சி 8.

### கிருஷ்ணதேவருடைய முகாம்

(பாசறை)

தலைகர்த்தர்கள் பச்சராசு, அய்யமராசு, கொண்டமராசு, சாளுவதிம்மர், இராமலிங்கம் முதலியோர் அரசர் வரவை எதிர்பார்த்திருத்தல்.

பச்: அரசர் எங்கே!

கொ:-விரோதிகளின் சேனை பலத்தை நேருக்கு நேராக அறிந்துவரச் சென்றிருக்கிறார்.

அய்ய:—பேசிப் பிரயோசனமென்ன? அவர்களின் படை எண்ணிக்கை அற்றது.

பச்ச:-அதுவுமன்றி அவர்கள் வீரர்கள். ஆயாசமின்றி உத்சாகத்துடன் விளங்குகின்றனர். நம் சைனியம் யுத்த அனுபவமில்லாமையால் தளர்ச்சியுடன் இருக்கின்றது.

இராம:-கடவுள் அருள்தான் இவ்வேளை உதவியாக நிற்க வேண்டும். கலிங்கரை வெல்வது மிகவும் கடினம். தலைவர்களே! யுத்தகளத்திற்குச் செல்லுங்கள். நானும் இதோ யுத்த சன்னத்தனாகப் புறப்பட்டுவிட்டேன். மீண்டும் சந்திக்கச் சந்தர்ப்பம் கிடைக்காவிடில் யாவரும் வீர சொர்க்கத்தில் கண்டு களிப்போம். சென்று வாருங்கள் தலைவர்களே! அமர நாயக ஆண் சிங்கங்களே!

கொண்:—வந்தனம் சென்று வாருங்கள். வீர ராமலிங்க நாயுடுகாரு, வீரலட்சுமி உமக்கருள் செய்வாள்.

பச்ச:—ஆம். மூவேந்தரை முறியடித்த தீரத்தைக் கைவிடாதீர் வந்தனம். ஆம் இதை நினைப்பூட்டியதால் தாங்கள் வீரம் குன்றியிருக்கிறீர்கள் என்பது என் கருத்தல்ல. தங்கள் வீரமே உருக்கொண்டவர் ஆச்சுதே!

இராமலிங்கம் செல்கிறார்.

அய்ய:—மகா வீர்யவான்! வீரத்துடன் கலந்த அன்பு இவ்விரண்டிலும் மேம்பட்டு விளங்குகிறார் நம் சேனாதிபதி

(அரசர் வருகிறார்.)

சா-தி:—என்ன செய்வது? நம் தலை நகரில் வேலையின்றித் திரியும் அந்த பத்தாயிரம் மக்களும் இங்கு வந்திருப்பாரேயானால் நமக்கு இந்த அதைரியமே வேண்டாம்.

கி-தே:—இப்பேச்சு யாருடையது? விஜய நகரத்தில் தூங்கும் சோம்பேறிகளை இங்கு அழைப்பது யார்? சாளுவதிம்மரா? வேண்டாம். இந்த யுத்தத்தில் அபஜயமடைந்து இறக்க நேரிடுமானால் இந்த நஷ்டமே போதுமல்லவா நம் இராஜ்ஜியத்திற்கு அவர்களும் வந்து மடிய வேண்டுமா? வேண்டாம். கடவுள் துணையால் ஜயித்தோம். எவ்வளவுக்கெவ்வளவு வீரர்கள் குறைவோ அவ்வளவுக்கவ்வளவு இவ்வெற்றியில் ஒவ்வொருவரும் அதிகப் பங்கு கொள்ளலாமல்லவா? வேண்டாம், மீண்





### ஜோதிஷ மகுட வர்த்தனர்

இந்து மன்னர் சமஸ்தான 25-வது தலைமுறை ஜோதிஷர்-பீமகவி-சகர்-புஜண்டா சாஸ்திர நிபுணர் இப்பூமண்டலப் புகழுரையில் எதிர்கால பலன் கூறுவதில் "உலக சிரேஷ்டர்" என வெற்றி பாமாலையும் தங்க சன்னதுகளும் பெற்றவர்.



ஜாதகம் லக்கின நக்ஷத்திர ஸ்புடஞ் செய்து பொதுப் பலன் எழுத ரூ. 1. ஒரு தெசைக்கு புக்தி பலன் ரூ 2. அஷ்ட வர்க்கம் ஆயுள்வரை புக்தி பலன் ரூபா 7. ஜாதக குறிப்பு முன் பணம் ரூபா 4. தேவை.) 1 வருட மாதா மாதப் பலன் ரூ. 1-8. கேள்வி 6-க்கு ரூ. 1. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

புரொப்பரைட்டர், N. சுப்பிரமணியம்,

நெ. 2 (ஜோதிஷ ஆசிரமம்)

வாலாஜாபாத், S. I. R. சென்னை.

டாக்டர் ஜம்மி வெங்கடரமணய்யாவின்

# லிவர்க்யூர்

குழந்தைகள் ஈரல், குலைகட்டிகளுக்கு நிகரற்றது என்று டாக்டர்களாலும், பெற்றோர்களாலும் போற்றப்பட்டது.

அநேக கண்காட்சிகளில் தங்கமெடல்களும், நற்சாட்சி பத்திரங்களும் பெற்றது.

ரங்கூன் ஏஜெண்டு:—ரிலையன்ஸ் பார்மசி, 125-12, பிக்னட் வீதி—ரங்கூன்.

# மின்சாரரசம்

சகல வியாதிகட்கும் தேவாமிருதம் போன்றது. புட்டி 1-க்கு ரூபா 2. மின்சார ரசம் கம்பெனி, (லிட்) சேலம்.

டும் நம் இராஜ்ஜியத்தினின்றும் ஓர் ஆளையும் வேண்டாதீர். கடவுள் ஆணை! இதனால் நான் செல்வைக் கருதுகிறேன் அல்லன். அல்லது பணத்தில் பேராசை கொண்டவனல்லன். மனிதர் என்னை அண்டிப் பிழைப்பது எனக்குச் சர்வ சம்மதமே. ஆதலின் குறுகிய இவ்வெண்ணங்கள் என் மனதில் தோன்றா. கௌரவத்தைச் சம்பாதிப்பது பாவமெனில் நான் அதற்குக் குற்றவாளியே.

ஆதலின் அதிக நபர்களை இங்கு வரழைக்க எண்ணங் கொள்ளாதீர். எனக்குள் தோன்றியிருக்கும் தீவிர நம்பிக்கையில், வெற்றியின் பகுதியில் ஓர் சிறிதாவது இழக்க நான் மனஞ்சகியேன. வேண்டுமானால் விளம்பரஞ் செய்யுங்கள். இவ்வெற்றியில் ஐயங் கொள்பவரும், எதிரி சைன்னியத்தைக் கண்டு மருளும் பயங்காளிகளும், இறக்க மறுக்கும் கோழைகளும் இன்றே புறப்படட்டும். வழிச் செலவு பணத்தையும் பெறுவார்கள். இப்பேடிகளின் பக்கலில் நின்று நாம் யுத்தம் செய்ய அச்சம் கொள்கிறோம். இந்த யுத்தத்தில் நாம் வெற்றி அடைந்தால் நம் பிரக்யாதியை என்னென்று புகழ்வது? நம் வீரர் முதிய பருவத்தை அடைந்து, அக்காலத்தில் தங்கள் பேரன் பேத்திகளுடன் இவ்வெற்றி நாளைக் கொண்டாடும் பொழுது எவ்வளவு உத்சாகத்துடன் நம்மைப் போற்றுவர். ஒவ்வொருவரும் கம்பீரத்துடன் எழுந்துநின்று தன் மேல் அங்கியை நீக்கி, புஜத்திலும் மார்பிலும் உள்ள காய வடுக்களைக்காட்டி வீரமொழிகளைச் சொரிவர். களிங்க வெற்றிக் கொண்டாட்டம் இன்று; இந்த காயங்கள் அந்த யுத்தத்தில் கிடைத்தவை என்று கூக்குரலிடுவர். இன்று புரிந்த தன் வேலைத்திறமைகளை நினைத்து, நினைத்து ஆநந்தக் கூத்தாடுவர். கிருஷ்ணதேவ ராயன், சாலுவதிம்மன், பொம்மசாணி இராமலிங்கம், பச்சராசு, கொண்டமராசு, அய்யமராசு என்றிவ்வாறு நம் நாமங்களைப் பாராயணம் செய்வர். தந்தையிடமிருந்து தனயனுக்கும் தனயனிடமிருந்து பேரனுக்கும் இக்கதை சொல்லப்பட்டு பிரளய காலம்வரை நீடித்து நிற்கும். ஆதலின் நாம் இறந்த பின்பும் களிங்க வெற்றி பொன் எழுத்துக்களால் பதிப்பிக்கப் பட்டனபோல் உலாவிவரும். நாம் என்றும் மறக்கப்பட மாட்டோம். மேலும் இன்று என்னுடன் இரத்தம் சிந்தும் வீரன் எனது சகோதரன். பிறப்பினால் தாழ்ந்தவனாயிருப்பினும், இந்நாள் அவனைத் துல்லியனாக்கும். இவ்வெற்றியின் வினைவைக் கேள்விப்படின் சோம்பேறிகளாகத் திரியும் அந்த விஜயநகர வாசிகள் பொறாமையும் வயிற்றெரிச்சலுமடைந்து வருந்துவார்கள் என்பது நிச்சயம்.

(இராமலிங்க நாயுடு மீண்டும் வருதல்.)

பொ. இ:—அரசே! சீக்கிரம், சீக்கிரம். களிங்கர் காரத்துடன் கிளம்பிவிட்டனர்; புறப்படுங்கள். தாமதித்தால் வந்துவிடும் மோசம்; சீக்கிரம் புறப்படுங்கள்.

கி. தே:—திட சித்தமிருந்தால் பல சித்தமும் பறக்கும்.

சா. தி:—பின்வாங்கும் கீழ் மக்களை உடன் வதையுங்கள்.

கி. தே:—சீரா கூறுகிறீர். என்ன ஆச்சரியம்? சற்றுமுன்னர் உதவி வேண்டினீரே.

சா. தி:—கடவுள் கருணை நம் பட்சமிருக்குமாகில், இம்மாபெரும் சைனியத்தை விரட்டி அடிக்க நாமிருவருமே போதும்.

கி. தே:—இப்பொழுதுதான் என மனம் சாந்தமடைந்தது. தனித்து சண்டை செய்ய உறுதி கொண்டது. உதவி வேண்டியதனால் ஏற்பட்ட சஞ்சலத்தைப் போக்குகிறது. சாலுவதிம்மர் என்பதை இப்பொழுதுதான நினைப்பூட்டினீர். சேனாதிபதிகளே! தளகர்த்தர்களே! வீரர்களே! உங்கள் யுத்தஸ்தலங்கள் தெரியுமல்லவா? உடனே உங்கள் நிலயத்திற்குச் செல்லுங்கள். கடவுள் துணை புரிவார்

(ஓர் ஒற்றன் ஓடி வருதல்.)

ஒற்றன்:—அரசே! களிங்கத்தின் ஓர்பகுதியே இப்பொழுது படை எடுத்து வருகிறது. அரசன் கஜபதி தன் மகாபத்திர வீரர்களுக்குச் செய்தி அனுப்பித்துள்ளார். அவர்கள் கூட்டு சைனியம் கூடிய சீக்கிரம் இப்படையைச் சேரலாம்.

கி. தே:— அப்படியானால் வீரர்களே புறப்படுங்கள். சாலுவதிம்மர் மட்டும் என்னுடன் இருக்கட்டும்.

(யாவரும் செல்கிறார்கள்.)

சாலுவதிம்மரே! இந்த யுத்தத்தில் நாம் வெற்றி அடைய சாம, தான, பேத, தண்டத்தைச் சேர்ந்த பேதத்தையே கொள்ளவேண்டும். இதற்கு என்ன யோசனை கூறுகிறீர்?

சா. தி:—அதை முன்னிட்டேதான் நானும் நீருமே இந்த யுத்தத்தை முடிக்கப் போதுமென குறிப்பாகக் கூறினேன். ஆதலின் தாங்கள் உத்தரவிட்டால் சூழ்ச்சியை வெளிப்படுத்துகிறேன்.

கி. தே:—ஆலஸ்யமில்லாது தெரியப்படுத்துங்கள்.

சா. தி.—இக்கடிதத்தைப் படித்துப் பாருங்கள். ஓர் கடிதத்தை அரசரிடம் அளிக்கிறார்.

கி. தே:—(அதை வாங்கிப் பிரித்துப் படித்தல்) மகா பத்திர வீரர்கள் நம்முடன் எப்பொழுது ஒப்பந்தம் செய்துகொண்டார்கள்?

சா. தி:—இதுவே என்னுடைய சூழ்ச்சி. இப்பத்திரங்களை சேவகர் மூலம் கொடுத்து களிங்க சைனியத்தின் பாசறை அருகே நள்ளிரவில் உலாவும்படி அனுப்புவோமானால், களிங்க வீரர்கள் இவர்களைப் பிடித்து, சந்தேகத்தின்மீது தங்களரசனிடம் இழுத்துச் செல்லுவார்கள். பிரதாப ருத்ரன் இந்தக் கடிதத்தைப் படித்தவுடன் மகா பத்திரர்கள் தன்னைக் கைவிட்டதாக நினைத்து ஓடி மறைவான். அப்புறம் வெற்றி நமக்குத்தான்.

கி. தே:—உமது சூழ்ச்சியே சூழ்ச்சி. அப்படியே 16 வீரர்களை விடுவீர்.

காட்சி முடிகிறது.

## காட்சி 9.

## கிருஷ்ணதேவனின் படையெழுச்சி.

கிருஷ்ண தேவராயன் தன் படைகளுடன் வருதல். அரசன் வாளுடன் முன் பாய்ந்து உத்சாகப்படுத்துதல்.

கி. தே —வீரர்களே! எழுங்கள், எழுங்கள். நண்பர்களே! நலத்தைக் கருதாதீர். நாட்டின் நன்மையை நாடுங்கள். அதோ, பகை அரசனின் சைனியங்கள். என் பின் ஓடிவாருங்கள். மாற்றானை முறியடியுங்கள். உயிருக்கஞ்சாதீர். சமாதானமாயிருக்கும்பொழுது மனிதன் அடங்கி ஒடுங்கி இருப்பான். யுத்தபேரிகை, சங்கநாதம் நம் காதுகளில் விழுந்தவுடன் யாவற்றையும் மறந்து ஆயுதம் எடுத்துப் போர்துவக்குவோம். அஞ்சா நெஞ்சம் படைத்த ஆண் சிங்கங்களே! சிங்கக் கர்ஜனை இடுங்கள். தசைகளைப் பிடித்திழுங்கள். இரத்தம் முகத்தில் குபீரென ஏறட்டும். காருண்ய முகத்தை மறைத்துப் பயங்கரத்தைமூட்டுங்கள். விஜயநகர வீரர்களே! பாரத சேய்கள் என்பதை மறந்துவிடாதீர்கள் உங்களை ஈன்ற தாய்தந்தையர்களை அவமானத்திற்குள்ளாக்காதீர்கள். வீர சொர்க்கத்தில் வீற்றிருக்கும் அவர்கள் உங்கள் அதி வீரதீரச் செய்கைகளைக் கண்டு களிக்கட்டும். பயங்காளிகளும் கோழைகளும் யுத்த விதிகளை உங்களிடமறிந்து தெரிந்து கொள்ளுமாறு செய்யுங்கள். வீர ஒளி உங்கள் கண்களில் பிரகாசிக்கிறது. வேட்டை நாய்கள்போல் நிற்பதைக் காணின் எவர்தான் கதி கலங்கார். வீர சகோதரர்களே! ஈசனைக் கூவியழையுங்கள்.

பார்வேந்தன், விஜயநகர வீரன் கிருஷ்ண தேவருக்கு ஜே! என்ற கூக்குரல் வானைப் பிளக்கட்டும்.

செல்கிறார்கள்.

(தொடரும்)





10 வருஷம் உத்திரவாதமுள்ள புது மாதிரியான பஞ்சவர்ண கல்செயின்கள்

(செயின் 1-க்கு

ரூபாய் 5-0-0

எங்கள் ரோல்டு கோல்டு செயின்கள் ஐந்துவித நிறமான செயற்கை கற்கள் வைத்துக் கட்டிய இந்த புது மோஸ்தர் செயின்களை குழந்தைகளும், பெரியவர்களும் அணிந்து ஆனந்த மடையலாம்

(தபால் செலவு வவசம)

R. S. பிரகாசம் & Co.

ரோல்டு கோல்டு ஜுவல்லர்ஸ்.

181 சைனா பஜார் ரோட், ஜி டி

மதறாஸ்

ஜகப்பிரசித்தி பெற்ற

ஆர். மூகம் அண்டு கம்பெனியாரின்

நெ. 1. மணிமார்க் பட்டணம்

மூக்குத் தூளை




உபயோகியுங்கள்.

1 நெ. வீசை 1-க்கு விலை ரூ 4 0

2 நெ. வீசை 1-க்கு விலை ரூ. 3 8

ஏஜண்டுகள் தேவை:—

விலாசம்: ஆர் மூகம் அண்டு கம்பெனி, நெ. 5, ஓல்டு ஜெயில் தெருவு, மதராஸ்



# இந்திய மக்களுக்கு இந்திய தேயிலை பானம்



தேயிலை பானம் அருந்துவோரின் தொகை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வருகிறது. ஜாதிமத பேதமன்னியில் ஒவ்வொருவரும் மென்மேலும் தேயிலையைப் பற்றிப் புகழ்கின்றார்கள். உண்மையாகவே ஆதரிக்கக் கூடிய அறிகுறிகளிருக்கின்றன. இதற்கீடான பானம் வேறொதுவுமில்லையென்று இந்திய மக்களில் புதிதாகத் தேயிலை பானம் செய்ய ஆரம்பித்தவர்களும் உணருகிறார்கள்.

## எங்கள் சித்திர விளம்பர புத்தகம்.

தேயிலை பானத்திலிருந்து பூரண சுகத்தை அனுபவிக்க வேண்டுமானால் அதை பக்குவமாக சரியான முறையில் செய்யவேண்டும் எப்படி என்றறிய விரும்பினால் சரியான முறையில் தேயிலை பானம் செய்ய நீங்கள் சுளுவாய் கற்றுக்கொள்ளக்கூடிய **தேயிலை** பானம் செய்வதெப்படி என்னும் சித்திர விளம்பர புஸ்தகத்திற்கு உடனே எழுதுங்கள்.

இந்த விளம்பரத்தை கத்தரித்து உங்கள் பெயர், விலாஸம், தொழில் முதலியவைகளை குறிப்பிட்டு, இந்திய கமிஷனர், இந்தியன் 'டீ' ஸெஸ் கமிட்டி தபால் பெட்டி 2172, கல்கத்தா என்று எழுதி அனுப்பினால் இலவசமாக ஒரு காப்பி அனுப்பப்படும்.

உலகிலேயே சிறந்தது இந்தியாவில் உண்டாகிற தேயிலையைவிட வேறொன்றுமில்லை. உற்சாகமான மனதையும் ஆரோக்கியமான சரீரத்தையும்பெற இந்தியத்தேச பானமான இந்தியத் தேயிலை பான வழக்கத்தை விடாது பழக்கிக் கொள்ளுங்கள்.



**உண்மையான ஸ்வதேசி சரக்கு - இந்திய தேயிலை**

IR 35 I

Regd. No. 2514.

ஸ்ரீமத்

# பகவத்கீதை

(இரண்டாம் பதிப்பு)

அத்வைத, விசிஷ்டாத்வைத, த்வைத பாஷ்யச் சுருக்கத்துடனும்
நாகர லிபியில் மூலமும் தமிழ் அர்த்தமும்

---

இதுவரையில் வெளியிடாத பல ரஹஸ்
யங்கள் அடங்கிய முன்னுரையுடனும்,
ஒவ்வொரு அத்யாயத்தின் முடிவில்
மூன்று மத பாஷ்யகாரர்களின் தாத்பரிய
சுருக்கமும், விஷய அட்டவணையும்
அடங்கியுள்ளது.

---

சென்னை ஸம்ஸ்கிருத காலேஜ் உபாத்
யாயராயிருந்த கீர்த்தனசார்ய ஸி. ஆர்.
ஸ்ரீநிவாஸய்யங்கார், பி. ஏ. அவர்களால்
மொழிபெயர்க்கப்பட்டது.

விலை ரூபா 3.

---

மானேஜர்,

சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை.

Printed and Published by C. S. Visvanatha Iyer B. A. at the Swadesamitran Power Press, Mount Road, Madras—*Editor* C. R Srinivasan B. A.